மர்மப் பொன்னி

# உறங்கும் உண்மைகள்

துப்பறியும் மர்மக் கதை ரூ. 1/-

COMICS PDF TIMES



COMICS PDF TIMES
HSC

# கலைப்பொன்னி விழுங்கும்

# உறங்கும் உண்மைகள்

## மேதாவி

புகாரி பிரதர்ஸ்,
செய்தி வணிக மூகவர் நிலையம்,
திருநெல்வேலி-627006.

# வாசகர்களுடன் ஒரு நிமிடம்...

கடலில் மிதந்த கன்னியின் பிணம்!
கொலை வெறியைத் தூண்டிய கோதை!
காணாமல் போன கன்னியின் கை!

செய்யாத குற்றத்திற்கு
சிறை தண்டனை அடையும் அப்பாவி!

சிலை கடத்தல்! கற்பழித்தல்!
கள்ளக் கடத்தல்!

இப்படிப் பல குற்றங்கள் புரியும் ஒரு பணக்கார கிராதகனின் அட்டகாசங்கள், சட்டத்தின் பிடியில் சிக்காமல், அந்த உண்மைகள் உறங்குகின்றன! உறங்கும் உண்மைகளைத் தட்டியெழுப்ப புறப்பட்ட இன்ஸ்பெக்டரின் கதி என்ன?

இப்படி அடுக்கடுக்காக, திடுக்கிடும் சம்பவங்களை வைத்து இணைத்து, ஒரு பயங்கர மர்ம-நாவலாக படிப்பவர்கள் உள்ளம் பரவசம் அடையும் படி கதையை அமைத்துக் கொடுத்திருக்கிறார் ''மர்மநாவல் மேதை'' திரு. மேதாவி அவர்கள்!

இனி திறவுங்கள்! பருகுங்கள்!

—பதிப்பகத்தார்.

அத்தியாயம் : 1 பகத் சிங் நேரு

# கடலில் மிதந்த கன்[illegible]

கடற்கரையில் அமர்ந்திருந்த பலர் எழுந்து சென்று பார்த்தார்கள். சிலர் முகத்தைத் திருப்பிக் கொண்டு உடனே அந்த இடத்தை விட்டு அகன்றனர். குழந்தைகளெல்லாம் அருகில் சென்று பார்க்க முயன்ற போதிலும், பெற்றோர்கள் அவர்களை அனுமதிக்கவில்லை. சிலர் அவசர அவசரமாக கடற்கரையை விட்டுக் கிளம்பி தத்தம் வீடுகளை நோக்கி விரைந்தார்கள். யாரோ ஒருவர் போலீஸாருக்கு டெலிபோன் செய்வதற்காக சென்றார்.

இவ்வளவு காரியங்களுக்கும் காரணமாக இருந்தது, கடற்கரையில் அப்பொழுது ஒதுங்கிய ஒரு அழகியின் பிணம் தான்! சிகப்புக்கலர் புடவையும் பச்சை ரவிக்கையும் அணிந்திருந்த அந்தப் பெண்ணின் பிணத்தில் நகைகள் எதுவும் காணப்படவில்லை. தனது நீண்ட அழகிய கூந்தலை அழகாக அவள் பின்னலிட்டு வைத்திருந்தாள். அதில் இருந்த ஒரே ஒரு கோரம் என்னவென்றால் பிணத்தின் வலது கையைக் காணவில்லை!

அப்பொழுது அங்கு வேடிக்கைப்பார்க்க வந்த ஒரு பெண் அந்தகோரத்தைக் கண்டு வீரிட்டலறியபடி மயங்கி விழுந்தாள். அவளுக்கு முதலுதவி அளித்து மயக்கத்தைத் தெளிவிக்க சிலர் முயன்றனர்.

ஏதோ யோசனையோடு தண்ணீர் ஓரமாக நடந்து வந்து கொண்டிருந்தார் மனோகர். நீர் அலைகள் காலில்படும்படி நடந்து செல்வதென்றால் அவருக்கு மிகவும் பிடிக்கும். தனது வேலை பளு குறையும் சமயங்களிலெல்லாம் அவர் இம்மாதிரி கடற்கரைக்கு வந்து தண்ணீர் ஓரத்தில் நடப்பது வழக்கம்.

தனக்கு நூறு அடி தூரத்தில் பலர் கும்பலாய் நின்று கொண்டு இருப்பதைப் பார்த்தும் அவசர அவசரமாக அந்த இடத்தை நோக்கி விரைந்தார். யாராவது தவறிப் போய் தண்ணீரில் விழுந்து விட்டார்களோ என்று அவருக்கு சந்தேகம் ஏற்பட்டது.

ஆனால் அருகில் சென்றுபார்த்தும் தனது கணிப்பு தவறென்று அவருக்குப் புரிந்தது. அந்தப் பிணத்தைப் பார்த்ததும், அது கொலை செய்யப்பட்ட பின் தண்ணீரில் வீசி எறியப் பட்டிருக்க வேண்டுமென்று தெரிந்து கொண்டார், பிணம்

தண்ணீரில் ஊறிப் போய் கிடந்த போதிலும், அந்தப் பெண் பிரமாதமான அழகியாக இருந்திருக்க வேண்டுமென்று அவருக்குத் தோன்றியது. அப்படிப் பட்டவளை எதற்காக இவ்வளவு கோரமான முறையில் யார் கொலை செய்திருக்கக் கூடுமென்று அவருக்கு வியப்பாக இருந்தது.

மனோகர் யார் என்று அங்கிருந்தவர்களுக்குத் தெரியாததாகையால், அவரவர் இஷ்டப்படி விமர்சனம் செய்து கொண்டிருந்தார்கள். எல்லாவற்றையும் மனோகர்மிக கவனமாக கேட்டுக் கொண்டிருந்தார். பலர், அந்தப் பெண் கடல் அலைகளால் இழுத்துச் செல்லப்பட்டிருக்கக் கூடு மென்றும், அவளது கையை சுருமீன் கடித்திருக்கும் என்றும் அபிப்ராயப்பட்டார்கள். ஒரிருவர் அவள் கொலை செய்யப்பட்டிருக்கக் கூடுமென்று எண்ணினார்கள்.

அந்தச் சமயத்தில் போலீஸார் வருவதைக் கண்டதும் கூட்டம் அவசர அவசரமாக கலைந்து எல்லோரும் வேகவேகமாக அந்த இடத்தை விட்டு விரைந்தனர்.

போலீஸார் அந்த இடத்தை அடைந்த போது அங்கு மனோகரும் மற்றும் இரண்டுபேரும் தான்எஞ்சி இருந்தார்கள். அவர்கள் இருவரும் தான் முதன் முதலில் பிணம் மிதந்துவருவதைப்பார்த்தவர்கள். அவர்களைப் பார்த்தால் கல்லூரி மாணவர்களைப் போல் காட்சியளித்தார்கள்.

போலீஸாருடன் வந்த சப்-இன்ஸ்பெக்டர் ராம்-கோபாலுக்கு, மனோகரை அங்கு கண்டதும் ஆச்சர்யமாக இருந்தது. வியப்போடு அவரைப் பார்த்த ராம்கோபால், மனோகரை நெருங்கினார்.

''நீங்கள் எங்கே இங்கே வந்தீர்கள். இன்ஸ்பெக்டர்?'' என்று கேட்டார் ராம்கோபால்,

''நான் வழக்கம் போல் இங்கு உலாவ வந்தேன், ராம்கோபால்! வந்த இடத்தில் இந்தப் பெண்ணின் பிணத்தைப் பார்த்தேன். நான் போலீஸ் உடையில் இல்லாததால் யாருக்கும் என்னை அடையாளம் தெரியவில்லை'' என்று புன்னகையோடு கூறினார் இன்ஸ்பெக்டர் மனோகர்.

சப்-இன்ஸ்பெக்டர் ராம்கோபால், இன்ஸ்பெக்டர் மனோகரிடம் மிகவும் மதிப்பு வைத்திருந்தார். மனோகர் ஈடுபடும் வழக்குகள் எப்போதும் அவருக்கு சாதகமாகவே முடிந்து வந்தது. எந்த ஒரு சிக்கலான வழக்காக இருந்தாலும் தனது புத்தி சாதுர்யத்தால் எப்பொழுதும் உண்மையைக்

கண்டு பிடித்து விடுவார் மனோகர். அதனால் மற்றவர்களினால் துப்பு துலக்க முடியாத வழக்குகள் அவரிடம் வந்து சேரும்.

இவற்றால் கர்வம் அடையாமல் மனோகர் எல்லோருடனும் சுமூகமாகப் பழகிவந்ததால், அவர் மீது பொறாமை அடை-வதற்கு பதில் எல்லோரும் அன்புடன் அவரிடம் பழகியதோடு பல சமயங்களில் அவரிடம் ஆலோசனை பெறவும் வருவார்கள். சப் இன்ஸ்பெக்டர் ராம்கோபாலுக்கு மனோகரிடம் அளவு கடந்த மரியாதையும் அன்பும் இருந்தது. ராம்கோபாலிடம் ஒரு சகோதரனைப் போல மனோகர் பழகி வந்தார் என்றே சொல்ல வேண்டும். அதனால் மனோகரைக் கண்டதும் ராம்கோபால் நிம்மதிப்பெருமூச்சுவிட்டார் என்றே சொல்ல வேண்டும்.

சில நிமிஷங்களில் புகைப்பட நிபுணர்கள் புகைப்படம் எடுத்துக்கொண்டதும், போலீஸ்டாக்டர் பிணத்தைப் பார்த்து விட்டு, எழுந்து ராம்கோபாலிடம் வந்தார்.

''இந்தப் பெண் இறந்துகிட்டத்தட்ட பனிரெண்டு மணிநேரமாகி இருக்கலாம். தண்ணீரில் விழுவதற்கு முன்பே அவள் கத்தியால் குத்தி கொலை செய்யப்பட்டிருக்கிறாள்!'' என்று கூறிய டாக்டர்,''அவளது வயிற்றில் மூன்று கத்திக்குத் துகாயங்கள் இருக்கின்றன. ஆனால் எதற்காக அவளது கையை வெட்டி எடுத்திருக்கிறார்கள் என்பதுதான் தெரிய வில்லை'' என்றார்.

''வேறு ஏதாவது அடையாளங்கள் இருக்கின்றனவா டாக்டர்?'' என்று கேட்டார் மனோகர்.

''இல்லை,அவள் இறந்து போன நேரத்தை பிரேதபரிசோதனை யில் இன்னும் சரியாகக் கண்டுபிடித்து விடலாம். அவள் உடல் கிட்டத்தட்ட எட்டு மணி நேரம் தான் தண்ணீரில் கிடந்திருக்க வேண்டும். அதனால் இந்தக்கரை ஓரத்திலிருந்தே அவளது உடல் கடலுக்குள் போடப்பட்டிருக்கலாம்''என்றார் டாக்டர்.

''நல்லது நீங்கள் கூடிய விரைவில் பிரேத பரிசோதனை ரிப்போர்ட்டை அனுப்பி வைத்தால் நாம் அந்தக் குற்றவாளி-யை பிடித்து விடலாம்'' என்றார் மனோகர்.

அந்தச் சமயத்தில் ஆம்புலன்ஸிலிருந்து இரண்டு ஆட்கள் ஒரு ''ஸ்ட்ரெச்சர்'' எடுத்துக்கொண்டு வந்து அந்தப் பெண்ணின் பிணத்தைப் தூக்கி அதில் வைத்து எடுத்துக்-கொண்டு சென்றார்கள். அவர்களோடு டாக்டரும் அங்கிருந்து திரும்பிச் சென்றார்.

''இந்தப் பெண்ணின் அங்க அடையாளங்களை பேப்பரில் பிரசுரித்து அவள் யார் என்று கண்டுபிடிக்கலாமா?'' என்று கேட்டார் ராம்கோபால்.

''அப்படியே செய்யலாம்.'' முதலில் ''தினக் – கொலை'' பத்திரிகை ஆபீஸிற்கு டெலிபோன் செய்து விஷயத்தைக் கூறிவிடு. அதோடு அந்த பெண்ணின் படத்தையும் பேப்பரில் போட ஏற்பாடு செய். அதைப் பார்த்து விட்டு யாராவது தகவல் கொடுக்கக் கூடும்'' என்றார் இன்ஸ்பெக்டர் மனோகர்.

இருவரும் பேசிக் கொண்டே போலீஸ் ஜீப்பை அடைந்தார்கள்.

''வேறு ஏதாவது செய்ய வேண்டுமா?'' என்று கேட்டார் சப் - இன்ஸ்பெக்டர் ராமகோபால்.

''இன்று காலையிலிருந்து பகல் வரை, மீனவர்கள் அல்லாமல் வேறுயாராவது படகிலோ, கட்டுமரத்திலோ ஏறிக் கொண்டு கடலில் சென்றதை யாராவது பார்த்தார்களா என்று இங்கு கடலோரம் இருக்கும் அத்தனை மீனவர் குடியிருப்புகளிலும் விசாரிக்க ஏற்பாடு செய், ராம்கோபால்! நான் வீட்டிற்கு சென்று விட்டு அரை மணி நேரத்தில் ஸ்டேஷனுக்கு வந்து விடுகிறேன்'' என்று கூறிய மனோகர் சற்று தூரத்தில் நிறுத்தப்பட்டிருந்த தனது மோட்டார் சைக்கிளை நோக்கி நடந்தார்.

சில வினாடிகளில் போலீஸ் ஜீப்பு கிளம்பிச் சென்றது.

அரைமணி நேரம் கழித்து இன்ஸ்பெக்டர் மனோகர் போலீஸ் ஸ்டேசனை அடைந்த பொழுது, அவர் கூறிய வேலையை செய்ய ஆட்களை அனுப்பி விட்டு அவருக்காகக் காத்திருந்தார் ராம்கோபால்.

''மற்றவர்களை நம்பிப் பயனில்லை, ராம்கோபால்! நாமும் நேரில் சென்று விசாரித்தால்தான் ஏதாவது தடயம் கிடைக்கும். அதனால் என்னுடன் உடனே கிளம்பு'' என்றபடி வாயிலை நோக்கி சென்றார் மனோகர்.

இருவரும் கடற்கரையை அடைந்த பொழுது பல போலீஸ்வீரர்கள் அங்கு தென்பட்டவர்களை எல்லாம்விசாரணை செய்து கொண்டிருந்தார்கள். ஆனால் யாருக்கும் எதுவும் தெரியவில்லை.

கடைசியில் எல்லோரும் சோர்ந்து போய் திரும்பினார்கள். மனோகருக்கு ஒரே ஏமாற்றமாக இருந்ததென்றே சொல்ல

வேண்டும். ஆனால் அவர் நம்பிக்கை இழக்கவில்லை. எப்படியும் கொலைகாரனைக் கண்டு பிடித்துவிட வேண்டுமென்று முடிவு செய்து கொண்டார்.

ஆனால் தடயமே இல்லாத ஒரு வழக்கில் துப்பு துலக்குவது கஷ்டமான காரியம் தான் என்ற போதிலும் இதைப்போன்ற பலவழக்குகளை ஏற்கனவே மனோகர் எடுத்துக் கொண்டு வெற்றி பெற்றிருக்கிறார். இந்த வழக்கிலும் எங்காவது ஒரு தடயம் எதிர்பாராமல் அவருக்குக் கிடைத்து விடும் என்று ராம்கோபால் நம்பினார்.

அதனால் அவர் மற்றவர்களைப்போல் உற்சாகம்குன்றி காணப்படவில்லை. கடைசியில் மனோகர் இதில் வெற்றி பெறுவார் என்று முடிவு கட்டிவிட்டதால் அவர் மனோகரின் சிந்தனையைக் கலைக்காமல் அவரோடு நடந்தார்.

ராம்கோபாலின் எண்ண ஓட்டம் ஓரளவு மனோகருக்கு புரிந்ததென்றே சொல்லவேண்டும். அவர் தனக்குள் சிரித்துக் கொண்டார். இருந்தபோதிலும் இந்த வழக்கு எப்படி முடியும் என்று அவருக்கே சந்தேகமாக இருந்தது.

அத்தியாயம் : 2

## கொலை வெறியைத் தூண்டிய கோதை

அகல்யா தனது டம்பப்பையைத்திறந்து தெருஓரத்திலிருந்த பிச்சைக்காரனுக்கு பத்துபைசா நாணயம் ஒன்றை போட்டு விட்டு பஸ் - ஸ்டாண்டை நோக்கி விரைந்தாள். அவளது கைப்பையில் ஆயிரம் ரூபாய் பணம் இருந்தது. அந்தப் பணத்தை பாங்கில் கட்டுவதற்காகத் தான் அகல்யா சென்றுகொண்டிருந்தாள்.

அகல்யாவுக்கு முப்பத்தைந்து வயதிருக்கலாம். ஆனால் அவளது அலங்காரங்களும் ஒப்பனையும்அவளை இருபத்தைந்து வயதுள்ளவளாகத்தான் எண்ண வைத்தது. தனது தந்தைக்கு உதவியாக, அவர் செய்து வந்த பிஸினஸில் தன்னால் இயன்றளவு வேலைகளைச் செய்து வந்தாள் அகல்யா.

தூரத்தில் பஸ் வருவதைக் கண்டதும் ஆவலோடு பஸ் வரும் திசையையே பார்த்தாள் அகல்யா. அந்த சமயத்தில் அவளுக்குப் பின்புறம் நின்று கொண்டிருந்த ஒரு மனிதன் அவளது தோளில் தட்டினான்.

திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்த அகல்யா, அங்கு நின்ற

மனிதனைப் பார்த்ததும் ஆச்சர்யத்தோடு, "நீங்களா?,, என்று கேட்டாள்.

"எங்கே போகிருய், அகல்யா?" என்று கேட்டான் அந்த மனிதன்.

"பாங்கில் பணம் கட்டுவதற்காகப் போகிறேன். உங்களை பார்த்து எவ்வளவோ வருஷங்களாகி விட்டன. இவ்வளவு நாட்களும் எங்கே போயிருந்தீர்கள்? உங்களைப் பற்றி அப்பா பலமுறை கேட்டுக் கொண்டிருந்தார்" என்ருள் அகல்யா.

"நான் வெளிநாட்டிற்கு சென்றிருந்தேன். இப்பொழுது தான் இங்கு ஒரு பட்டுப் புடவைக் கடை வைத்திருக்கிறேன். அதில் எனக்கு நிறைய லாபம் கிடைத்துக் கொண்டிருக் கிறது" என்று கூறிய அந்த மனிதன், "திடீரென்று உன்னைப் பார்க்க வேண்டுமென்று எனக்குத் தோன்றியது. ஆதலால் புறப்பட்டு, நேற்று காலை இங்கு வந்து சேர்ந்தேன்" என்ருன்

இருவரும் பேசிக் கொண்டிருந்ததில் பஸ்ஸைப் பற்றியே மறந்துவிட்டாள் அகல்யா. மூன்று வருஷங்களுக்கு முன்னல் இந்த மனிதனை காதலித்தாள் அகல்யா. இருவரும் திருமணம் செய்து கொள்ள வேண்டுமென்று நினைத்துக் கொண்டிருந்த போது ஒரு நாள் அவன் மாயமாய் மறைந்து போனன். அவன் என்ன ஆனன் என்ரே, எங்கு சென்ருன் என்ரே யாருக்கும் தெரியவில்லை.

அவன் குடி இருந்த இடத்திற்கு சென்று விசாரித்தாள் அகல்யா. ஆனல் ஒருவருக்கும் அவனைப் பற்றிய தகவல்கள் தெரியவில்லை. இதனல் மனமுடைந்து போனுள் அகல்யா. இதைப் பற்றி அவள் தன் தந்தையிடம் பேசும் பொழு தெல்லாம், அவர் அவன் மறைந்து போனதே நல்லதென்று கூறுவார். அதனல் நாளடைவில் அவனைப்பற்றி பேசுவதையே தவிர்த்தாள் அகல்யா.

அகல்யாவின் தந்தை கருணகரனுக்கு பாலுவைப் பிடிக்க வில்லை. அவனைப்பற்றி அவர் கேள்விப்பட்டிருந்த பல விஷயங் கள், அவனை வெறுக்கும்படி செய்தன. அப்படிப்பட்ட ஒரு சம யத்தில் பாலுவையே அழைத்து வந்து, அவனைத் திருமணம் செய்து கொள்ளப் போவதாக அகல்யா அறிவித்தபோது அவ ருக்கு பெரும் அதிர்ச்சி எற்பட்டது.

இருந்தபோதிலும் சமாளித்துக் கொண்ட கருணகரன் அடுத்த மாதமே கல்யாணத்தை வைத்துக் கொள்ளலாம் என்று முகமலர்ச்சியோடு கூறினர். தனது திருமணத்திற்கு

அவர் சம்மதித்து விட்டதைக் கண்டதும் அகல்யாவுக்கு ரொம்பத் திருப்தி ஏற்பட்டது.

இந்த விஷயம் நடந்த ஐந்து நாட்களுக்கப்புறம் பாலு மாயமாய் மறைந்து விட்டான். இதனால் அகல்யா துடித்துப் போனாள். பல நாட்கள் அவளால் சாப்பிடவோ தூங்கவோ முடியவில்லை. ஆனால் நாளடைவில் அவள் தன் மனதைக் கட்டுப்படுத்திக் கொண்டாள்.

இப்பொழுது திடீரென்று பாலுவை மீண்டும் சந்தித்ததும் அவள் குதூகலம் அடைந்தாள். அதனால் அவன் ஏதாவது ஹோட்டலுக்குப் போகலாம் என்று கூறியதும் உடனே அவனுடன் புறப்பட்டாள்.

குதூகலத்தோடு வீட்டிற்குள் நுழைந்த அகல்யாவைக் கண்டதும் கருணாகரனுக்கு வியப்பாக இருந்தது. ஆனால் அவர் அதை வெளிக்காட்டிக் கொள்ளவில்லை. அகல்யாவே அதைப்பற்றி பிரஸ்தாபிப்பாள் என்று அவர் எதிர்பார்த்தார். ஆனால் அவருக்கு ஏமாற்றமே மிஞ்சியது.

நேரடியாக அவளைக் கேட்காமல், பாங்கில் பணத்தை அவள் கட்டிவிட்டாளா என்று கேட்டார்.

திடுக்கிட்டவளாய் அவரைப் பார்த்து விழித்தாள் அகல்யா. பாலுவோடு பேசிக்கொண்டிருந்ததில் அவள் பாங்கிற்குப் போகவேண்டுமென்பதையே மறந்து விட்டு வீட்டிற்குத் திரும்பிவிட்டாள்! தனது செய்கையைக் கண்டு அவளுக்கே வெட்கமாக இருந்தது.

அவளது முக மாறுதலைக் கண்டதும் அவள் பணத்தை எங்கோ தொலைத்துவிட்டாளோ என்று அவருக்கு சந்தேகமாக இருந்தது. பத்தாயிரம் ரூபாயை அவள் அவ்வளவு அலட்சியமாகவா எடுத்துக் கொண்டு சென்றிருப்பாள்? ஆனால் பணத்தைத் தொலைத்துவிட்டு வந்திருந்தால் முதலில் உள்ளே நுழைந்தபோது அவ்வளவு குதூகலமாக காணப்பட்டிருக்க மாட்டாள்.

''என்ன ஆயிற்று, அகல்யா? பணத்தை பாங்கில் கட்டவில்லையா?'' என்று நிதானமாகக் கேட்டார் கருணாகரன்.

''வழியில் நான் பாலுவைப் பார்த்தேன். அதனால் அவரோடு பேசிக் கொண்டே இருந்ததில் பாங்கிற்குச் செல்வதை மறந்து விட்டு வீட்டிற்கு வந்து விட்டேன்'' என்றாள் அகல்யா.

அவள் பணம் தொலைந்து விட்டதென்று சொன்னால் கூட அவ்வளவு அதிர்ச்சி அடைந்திருக்க மாட்டார். ஆனால் அவள்

பாலுவை சந்தித்த விபரத்தைக் கேட்டதும் அவர் பெரும் அதிர்ச்சி அடைந்தார்.

அவர் அடைந்த அதிர்ச்சியைத் தெரிந்து கொள்ளாமல் அகல்யா உற்சாகத்தோடு பேசிக்கொண்டிருந்தாள்.

''அவர் வேலை எதுவுமில்லாமல் இருப்பதைக் காரணங் காட்டி முதலில் நீங்கள் எங்கள் கல்யாணத்தைக் கெடுக்கப் பார்த்தீர்களே, அப்பா! இப்பொழுது உங்களுக்கு, பாலு என்ன செய்கிறார் என்று தெரிந்தால் ஆச்சரியப்படுவீர்கள்'' என்று நிறுத்தினாள்.

COMICS PDF TIMES

அடுத்தாற்போல் என்ன அதிர்ச்சி காத்திருக்கிறதோ என்று பார்த்தார் கருணாகரன்.

''அவர் வெளிநாட்டில் இப்பொழுது பட்டுப் புடவை வியாபாரம் செய்து பெரும் பொருள் சம்பாதித்திருக்கிறாராம். இங்கிருந்து திடீரென்று கிளம்பிச் சென்றதிலிருந்து அதையேதான் செய்து கொண்டிருக்கிறார்.'' என்று தொடர்ந்து கூறினாள் அகல்யா.

''அவன் உன்னிடம் அப்படியா சொன்னான்? இன்னும் வேறு ஒன்றும் சொல்லவில்லையா?'' என்று கேட்டார் கருணாகரன்.

அவர் குரல் திடீரென்று கடுமையானதைக் கண்டதும் திடுக்கிட்டாள் அகல்யா. எதற்காக அவர் சந்தோஷப்படுவதற்கு பதில் இம்மாதிரி இருக்கிறார் என்று அவளுக்குப் புரியவில்லை.

அகல்யா பதில் ஒன்றும் கூறாததால் தொடர்ந்து பேசினார் கருணாகரன்

''பாலு உண்மையில் வெளிநாட்டில் பட்டுத்துணி வியாபாரம் செய்து கொண்டிருக்கவில்லை, அகல்யா! அவன் உன்னை நன்றாக ஏமாற்றி விட்டான். உனக்கு இவ்வளவு வயதாகிவிட்ட போதிலும் நீ இன்னும் குழந்தையாகவே இருக்கிறாய், அகல்யா!'' என்றார் கருணாகரன்.

''நீங்கள் பேசுவது எனக்குப் புரியவில்லை, அப்பா!'' என்று குழப்பத்தோடு கூறினாள் அகல்யா.

''நீ நினைப்பதைப் போல் பாலு வெளிநாட்டுக்கு செல்லவில்லை. வேலூருக்குத்தான் சென்றிருந்தான். அவன் இந்த

மூன்று வருஷங்களும் அங்கே தான் இருந்தான்!'' என்றார் கருணாகரன்.

''என்ன!'' என்று ஆச்சரியத்தோடு வினவிய அகல்யா, ''அங்கு என்ன செய்து கொண்டிருந்தார்?'' என்று கேட்டாள்.

''கல் உடைத்து கொண்டிருந்திருக்கலாம்!''

''விளையாடுகிறீர்களா அப்பா?'' என்று ஆத்திரத்தோடு கேட்ட அகல்யா, ''முதலிலிருந்தே பாலுவை உங்களுக்குப் பிடிக்கவில்லை. அதனால் இம்மாதிரி பேசுகிறீர்கள்'' என்று வெடித்தாள்.

''நிதானத்தைக் கைவிடாதே அகல்யா! என் மகளின் நல் வாழ்வில் எனக்கு அக்கறை இருக்காதென்று நினைத்தாய்? கல்யாணமே வேண்டாம் என்று நீ கொண்டிருந்த முடிவை மாற்றிக் கொண்டு திடீரென்று ஒரு நாள் நீ யாரையோ விரும்புவதை என்னிடம் கூறிய பொழுது நான் எவ்வளவோ சந்தோசப் பட்டேன். ஆனால் அது பாலுவாக இருக்கும் என்று நான் கனவிலும் கருதவில்லை. அவனை என்னிடம் அழைத்து வந்து நீ காட்டியபோது, நான் அடைந்த அதிர்ச்சியை வார்த்தையால் வர்ணிக்க முடியாது'' என்று நிறுத்தினார் கருணாகரன்.

''பாலு உங்களை எந்த விதத்தில் வெறுப்படைய வைத்தார்?'' என்று கேட்டாள் அகல்யா.

''அவன் பல பெண்களோடும் — திருமணமானவர்களோடும்—தொடர்புவைத்துக் கொண்டிருந்தான்.! அப்படிப் பட்டவனுக்கு என் ஒரே பெண்ணை பலி கொடுக்க நான் தயாராக இருக்கவில்லை. அவன் சிலரை மிரட்டிப் பணம் பறித்ததையும் நான் அறிவேன்.''

''இதை நான் நம்பத்தயாராக இல்லை!'' என்று அழுத்தந்திருத்தமாகக் கூறினாள் அகல்யா.

''அவற்றை நிரூபிக்க என்னிடம் ஆதாரங்கள் கிடையாது ஆனால் கடந்த மூன்று வருஷங்களும் அவன் வேலூர் ஜெயிலில் இருந்தான் என்பதை என்னால் நிரூபிக்க முடியும்!''

''இருக்காது—'' என்று விம்மினாள் அகல்யா.

''உன் மனதைத் துன்புறுத்த வேண்டுமென்ற ஆசை எனக்கில்லை. ஆனால் வாழ்நாள் முழுவதும் நீ கண்ணீர் விட்டுக் கொண்டிருப்பதைக் காண என்னால் முடியாது. உனது முரட்டுப் பிடிவாதத்தை விட்டுவிட்டு உண்மையைத் தெரிந்து கொண்டு அவன் சகவாசத்தை விட்டு விடுவதுதான் உனக்கு

நல்லது'' என்றார் கருணாகரன்.

அகல்யா பதில் ஏதும் பேசவில்லை. கண்களைத் துடைத்துக் கொண்டு கருணாகரன் கூறுவதைக் கேட்கத் தயாரானாள்.

''இவ்வளவெல்லாம் போதாதென்று அவன் திருட்டு நகைகள வேறு வைத்திருந்தான். அவனது அறையை போலீஸார் சோதனை போட்டபோது, மதுரையில் திருடப்பட்ட ஒரு வைர நெக்லஸ் கண்டுபிடிக்கப்பட்டது. அதனால் அவனை உடனே கைது செய்தார்கள்'' என்று கூறிய கருணாகரன் ''உனக்கு இன்னும் என் பேச்சில் நம்பிக்கை ஏற்படவில்லை என்றால், அவனை கைது செய்து போலீஸார் அழைத்துச்சென்ற போது எரிக்கப்பட்ட புகைப்படத்தைப் பார்! என்று கூறிவிட்டு அவர் தனது ஆபீஸ் அறையை நோக்கிச் சென்றார்.

கருணாகரன் கூறிய தகவல்களெல்லாம் அகல்யாவை வெகு பயங்கரமாகத் தாக்கின. பாலு இப்படிப்பட்ட அயோக்யனாக இருப்பான் என்று அவள் கனவிலும் கருதவில்லை. ஆனால் தனக்காக எதையும் செய்யத் தயார் என்று உறுதி கூறிய பாலு இப்படிப்பட்டவன் என்று நம்புவதற்கு அவளுக்கு கஷ்டமாக இருந்தது. நடப்பதெல்லாம் கனவாக இருக்கக் கூடாதா என்று அவள் தவித்தாள்.

கருணாகரன் கொண்டுவந்து காட்டிய புகைப்படத்தைப் பார்த்ததும் அவள் கண்கள் கண்ணீரைப் பொழிந்தன. பாலு வசித்துவந்த ஜாகையின் வாசலில், கையில் விலங்கு பூட்டப் பட்ட நிலையில் இரண்டு போலீஸாரோடு காட்சியளித்தான் பாலு.

திடீரென்று ஒரு சந்தேகம் அவளுக்குஏற்பட்டது. எனவே அவள் கருணாகரனின் பக்கம் திரும்பி, ''இவ்வளவு நடந்தும் எதுவுமே பத்திரிகைகளில் வெளிவரவில்லையே'? என்று கேட்டாள்.

''உன் பெயரும் இதில் அடிபடக்கூடாதென்று பயந்து போய் நான்தான், உதவி கமிஷனரிடம் இந்த விவகாரத்தை பெரிதாக பேப்பர்களில் போட வேண்டாம் என்று கூறினேன்,' என்று அவசரமாகக் கூறினார் கருணாகரன்.

தனது தந்தை தனக்காக எவ்வளவு சிரமங்கள் எடுத்துக் கொண்டிருக்கிறார் என்பதை நினைத்தபோது, தான் நன்றி கெட்டத்தனமாக சற்று முன்னால் அவரிடம் அவர் சொல்லையே சந்தேகிப்பதாகக் கூறியதை எண்ணி வெட்கமடைந்தாள் அகல்யா.

ஆனால் கருணாகரன் கூறியபடி எதுவும் இல்லை. பானு கைதான விஷயம் முதற்கொண்டு அவன் தண்டனை விதிக்கப் பட்டு வேலூர் ஜெயிலுக்கு அனுப்பப்பட்டது வரை எல்லா விஷயங்களும் பேப்பர்களில் வெளிவந்திருந்தன! வழக்கமாக பேப்பர் படிக்கும் பழக்கமில்லாத அகல்யா அதை கவனிக்கா தது அவருக்கு சாதகமாக முடிந்தது.

அதோடு இந்த விவகாரத்தைப் பற்றி யாரும் பிரஸ்தா பிக்கக் கூடாது என்று அவர் போட்டிருந்த கட்டளையை மீற வேலைக்காரர்களுக்கோ சமையற்காரர்களுக்குக்கோ துணி வில்லையாதலால் அந்தச் செய்தி அகல்யாவின் காதுகளுக்கு எட்டவில்லை. அகல்யாவின் தேவைகளைப் பிரத்யேகமாக கவ னித்துக் கொள்ள நியமிக்கப்பட்டிருந்த பூங்கோதைதான், எப்பொழுதும் அவளுக்கு உலகவிஷயங்களைப் பற்றியும் ஊர் அக்கப்போர்களைப் பற்றியும் கூறுவது வழக்கம். அவளும் கரு ணாகரனின் மிரட்டலுக்கு பயந்து கொண்டிருந்ததால் அகல் யாவுக்கு இந்த விவகாரம் தெரியாமலேயே போயிற்று.

மூன்று வருஷங்களுக்கு முன்னால் நடந்த விஷயமாதலால் அகல்யா முயற்சிசெய்து தேடினாலும் அந்தப் பழைய பத்திரிக் கைகள் அவளுக்குக் கிடைக்காதென்ற தைரியத்தில் அவர், அந்த செய்தி வெளிவரவே இல்லை என்று அடித்துச் சொல்லி விட்டார்.

எல்லா விவரங்களையும் கேட்ட அகல்யாவுக்கு தலைசுற்று வதுபோலிருந்தது. பானு தன்னிடம் பொய் கூறியதை அவ ளால் மன்னிக்கவே முடியவில்லை. அவனை நேரில் சந்தித்து இதைப்பற்றி கேட்டுவிட வேண்டுமென்று அவள் துடித்தாள்.

"நீ இனிமேல் பானுவை சந்திப்பது உனக்கு நல்லதல்ல, அகல்யா! அவனைப்பற்றிய விவரங்கள் தமக்கு கேவலத்தைத் தேடித்தரும். அதனால் நீ ஜாக்கிரதையாக இருக்க வேண் டும்" என்றார் கருணாகரன்.

'சரி' என்ற பாணியில் அகல்யா தலையாட்டியபோதிலும், அவளது மனம் தீவிரமாக வேலை செய்தது. பானுவிடம், அவன் முகத்திலடித்தாற்போல் நாலு வார்த்தை பேசாவிட் டால் அவள் தலை வெடித்துவிடும் போலிருந்தது. ஆனால் அதை அவள் தன் தந்தைக்குத் தெரியாமல் செய்ய வேண்டும் என்று முடிவு கட்டிக்கொண்டாள்.

மறுநாள் காலை அகல்யா பணத்தை எடுத்துக் கொண்டு பாங்கிற்குப் புறப்பட்டாள். பாலுவைச் சந்திக்க வேண்டாம் என்று மீண்டும் அவளை எச்சரிக்கை செய்யலாமா என்று நினைத்தார் கருணாகரன். ஆனால் தனது எண்ணத்தை மாற்றிக் கொண்டார்.

அன்றும் பஸ்-ஸ்டாண்டில் பாலுவைச் சந்தித்தாள் அகல்யா. அவனருகே சென்றதும் அவனை ஏளனத்தோடு பார்த்தபடி, "உங்கள் புடவைக் கடைக்கு என்ன பெயர் வைத்திருக்கிறீர்கள்?" என்று கேட்டாள்.

ஒருகணம் தடுமாறிய பாலு, "வேறு என்ன பெயர் வைப்பேன்? "அகல்யா டெக்ஸ்டைல்ஸ்" என்றுதான் வைத்திருக்கிறேன்!" என்றான். அகல்யா திடுதிப்பென்று இம்மாதிரி ஒரு கேள்வியைக் கேட்பாள் என்று அவன் சிறிதும் எதிர்பார்க்கவில்லை.

"உங்கள் கடைக்கு வெளியில் கம்பிகள் போடப்பட்டிருந்தனவா?" என்று இடக்காகக் கேட்டாள் அகல்யா.

"கம்பிகளா?" என்று ஒன்றும் புரியாமல் கேட்டான் பாலு.

"உங்கள் கடைக்கு முன்புறத்தில் கம்பிகளும், பின்புறத்தில் ஒரே ஒரு ஜன்னலும் இருந்ததாக அப்பா சொன்னார்!" என்று சர்வசாதாரணமான குரலில் கூறினாள் அகல்யா.

"இன்று உனக்கு என்ன நேர்ந்தது, அகல்யா? வந்ததிலிருந்தே ஏன் என்னவோ போல் பேசுகிறாய்?" என்று பரிதாபமான குரலில் கேட்டான் பாலு.

"உங்கள் நடிப்பெல்லாம் வேறு எங்காவது வைத்துக் கொள்ளுங்கள்! திருட்டு நகைகளைப் பதுக்கி வைத்திருந்த குற்றத்துக்காக மூன்று வருஷ காலம் வேலூர் சிறைச் சாலையில் கைதியாக இருந்துவிட்டு என்னிடம் வந்து இம்மாதிரி பொய் சொல்வதற்கு உங்களுக்கு வெட்கமாக இல்லையா?" என்று சீறினாள் அகல்யா.

பஸ் ஸ்டாண்டில் நின்ற இரண்டொருவர் காதில் அகல்யா கூறியது முழுதும் விழுந்தது. அவர்களெல்லோரும் பாலுவை ஏளனத்தோடு பார்த்தார்கள்.

அதைக் கண்ட பாலு, கொலை-வெறி ததும்பும் கண்களோடு அகல்யாவைத் திரும்பிப் பார்த்தான்.

அத்தியாயம் - 3

## காணமல் போன கன்னியின் கை!

அன்று காலை பேப்பரில் அந்தக் கொலைச் செய்தி வெளி வந்திருந்தது. அதோடு கூட அவசர அவசரமாக டெவலப் செய்யப்பட்ட புகைபடமும் வெளிவந்திருந்தது. அதை அடையாளம் கண்டுபிடிப்பவர்கள் உடனே போலீஸாருடன் தொடர்பு கொண்டு தகவல் தெரிவிக்க வேண்டுமென்று செய்தியில் கோரப்பட்டிருந்தது.

பிணத்தின் வலது கையைக் காணவில்லை என்பதுதான் பெரும்பரபரப்பை உண்டுபண்ணியது. ஒரு அழகியை யார் அவ்வளவு கொடூரமாகக் கொலை செய்திருக்கக் கூடுமென்று எல்லோரும் வியப்போடு அந்த செய்தியை படித்தார்கள்.

தனது வீட்டின் வரவேற்பறையில் செய்தித்தாளோடு அமர்ந்திருந்த கருணாகரனின் கண்களிலும் அந்தப் புகைப்படம் தென்பட்டது. சில விநாடிகள் அதையே வெறிக்கப்பார்த்துக் கொண்டிருந்தார் கருணாகரன்.

சமையற்காரன், தான் கொண்டு வந்த காபி டம்ளரை ஸ்டூல் மீது வைத்த சத்தம் கேட்டதும் தான் அவர் கவனம் கலைந்தது. காபியைக் குடித்தபடி செய்தியை ஒருமுறைக்கு இருமுறை படித்தார்.

பிறகு காலி டம்ளரைக் கீழே வைத்துவிட்டு அருகிலிருந்த டெலிபோன் ரிசீவரைக் கையில் எடுத்து நம்பர்களை சுழட்டினார். சிலவிநாடிகளில் மறுமுனையில் மணி அடிக்கும் சத்தமும் அதைத் தொடர்ந்து டெலிபோன் ரிசீவர் எடுக்கப்படும் சத்தமும் கருணாகரனுக்குக் கேட்டது.

"ஹலோ! யார் பேசுவது?" என்று ஒரு இனிமையான பெண்ணின் குரல் மறுமுனையிலிருந்து ஒலித்தது.

"நான் கருணாகரன் பேசுகிறேன், பவானி!" என்று ஆரம்பித்த கருணாகரன், "அகல்யா இருந்தால் கொஞ்சம் பேசச் சொல்" என்றார்.

"அகல்யாவா!" என்று ஆச்சர்யத்தோடு வினவிய பவானி, "அவள் இங்கே வரவில்லை, மாமா! நீங்கள் எந்த உலகத்தில் இருக்கிறீர்கள்?" என்று கேட்டு விட்டு கலகல வென்று சிரித்தாள்.

"உங்கள் வீட்டிற்கு வருவதாகக் கூறிவிட்டு நான்கு

நாட்களுக்கு முன்னால் அகல்யா ஒரு பெட்டியில் துணிமணிகளை எடுத்துக்கொண்டு கிளம்பி வந்தாளே?" என்று கேட்டார் கருணாகரன்.

"அடக்கடவுளே! அவள் இங்கு வரவே இல்லை, மாமா! ஒருக்கால் வழியில் அவளுக்கு ஏதாவது நேர்ந்திருக்குமோ?" என்று கலவரமடைந்த குரலில் கேட்டாள் பவானி.

"தெரியவில்லை. அம்மா! அவளது தோழிகள் வீட்டில் எல்லாம் விசாரித்துவிட்டு, அவள் எங்கும் இல்லை என்றால் நான் போலீஸில் புகார் செய்யப் போகிறேன்!" என்றார் கருணாகரன்

"எனக்கு ரொம்ப பயமாக இருக்கிறது, மாமா!" என்று விம்மினாள் பவானி.

"அவளுக்கு ஒன்றும் நேர்ந்திருக்காதென்றுதான் நினைக்கிறேன். நீ பயப்படாமல் இரு!" என்று கூறிவிட்டு டெலிபோன் கனெக்ஷனைத் துண்டித்தார் கருணாகரன்.

பவானி அவருடைய தங்கையின் மகள். கார் விபத்து ஒன்றில் பெற்றோரை இழந்த பவானி யாருமற்ற அனாதையாய் தெருவில் நின்ற போது அவளுக்கு வயது ஒன்று. அதிலிருந்து அவளை கருணாகரன் தான் வளர்த்து வந்தார். அவளுக்கும் அகல்யாவுக்கும் பல விஷயங்களில் வித்தியாசம் இருந்தபோதிலும் இருவரும் மிகவும் நெருங்கிப் பழகினார்கள். இருவரும் ஒரே வயதானவர்கள். அகல்யாவின் ஆடம்பரம் பவானிக்குப் பிடிக்காத போதிலும் இருவரும் மிக அன்யோன்யமாகப் பழகினார்கள்.

கல்லூரியில் படிக்கும்போது கூட படித்த ஒரு பையனை காதலித்துத் திருமணம் செய்து கொள்ள பவானி விரும்பிய போது கருணாகரன் மறுப்பேதும் சொல்லவில்லை. பவானி காதலித்த பாஸ்கர், கருணாகரனின் தொழிற் கூட்டாளியான பரசுராமனின் மகனாக இருந்ததே காரணம்.

திருமணமான அடுத்த மாதமே பவானி, பாஸ்கரோடு தனிக்குடித்தனம் நடத்த சென்று விட்டாள், கருணாகரனின் வீட்டிலிருந்து சுமார் இருபது மைல் தொலைவில் பவானியின் வீடு இருந்தது. திடீரென்று நினைத்துக்கொண்டால் அகல்யா, பவானியின் வீட்டில் ஒரு வாரம் அல்லது பத்து நாள் என்று தங்கிவிட்டு வருவாள். அதேபோல் பவானியும் இங்கு வந்து விட்டுப் போவாள்.

எனவே நான்கு நாட்களுக்கு முன்னால் பானுவிடம் சண்டை போட்டுவிட்டு அகல்யா திரும்பியபோது கருணாகரன்

தான் அவளிடம், பவானி வீட்டிற்குப் போய் சில நாட்கள் இருந்துவிட்டு வரும்படி கூறினார். அது அவள் மனதை சற்று அமைதிப்படுத்தும் என்று அவருக்குத் தோன்றியது.

அகல்யாவும் மறுபேச்சு பேசாமல் கிளம்பினாள். கார் வேண்டாமென்றும், தான் பஸ்ஸிலேயே போய்விடுவதாகவும் கூறிவிட்டு, தனது பெட்டியை பஸ் ஸ்டாண்ட் வரை கொண்டு வந்து கொடுக்கும்படி ஒரு வேலைக்காரனிடம் கூறினாள் அகல்யா. அவனும் அவளோடு பஸ் ஸ்டாண்ட் வரை சென்றான், பஸ் வரும்வரை காத்திருக்க வேண்டாம் என்று கூறி அவனை வீட்டிற்குத் திருப்பி அனுப்பிவிட்டாள் அகல்யா.

பஸ்ஸ்டாண்டில் ஒரு வேளை அவள் தன் மனதை மாற்றிக் கொண்டு வேறு எங்காவது போயிருப்பாள் என்று நினைத்த கருணாகரன், அவளது தோழிகளின் வீடுகளுக்கெல்லாம் டெலிபோன் செய்து விசாரித்தார். ஆனால் அவள் அங்கெல்லாம் செல்லவே இல்லை என்று அறிந்ததும் ஆடிப் போய்விட்டார்.

“போலீஸாருக்கு டெலிபோன் செய்து, அம்மாவைக் காணவில்லை என்று புகார் கொடுத்துவிடுங்கள், ஐயா!” என்று பணிவோடு அவர் அருகில் வந்து நின்றபடி பவ்யமாகக் கூறினான் சாரங்கன். அவன் அவர்கள் வீட்டில் அகல்யா சின்னக் குழந்தையாக இருந்த பொழுதிலிருந்தே சமையல் வேலை செய்து வந்ததால், சில சமயங்களில் வீட்டு விவகாரங்களில் அவனுடைய ஆலோசனையை கருணாகரன் கேட்பதுண்டு. அதோடு சாரங்கன் ஒரு விதத்தில் அவருக்கு உறவினனும்கூட. ஆனால் வறுமை காரணமாக அவன் அவர்கள் வீட்டில் சமையற்காரனாக சேர்ந்தான். ஆனால் தனது உறவு முறையை அவன் யாரிடமும் கூறியதே இல்லை.

கருணாகரன் பதில் எதுவும் கூறாமல் யோசனையோடு அமர்ந்திருப்பதைப் பார்த்ததும் சாரங்கன், “ஐயா! நீங்கள் தாமதிக்கும் ஒவ்வொரு வினாடியும் அகல்யா அம்மாவுக்கு ஆபத்து அதிகமாகக் கூடும். சீக்கிரம் போலீஸுக்கு டெலிபோன் செய்யுங்கள்!” என்று பரபரத்தான்.

கொஞ்ச நேரத்துக்கெல்லாம் அவர் இன்ஸ்பெக்டர் மனோகரோடு பேசிக்கொண்டிருந்தார். கருணாகரன் டெலிபோன் செய்ததும் அவர் சிறிது நேரத்தில் நேரில் வருவதாகக் கூறிவிட்டு டெலிபோனை வைத்துவிட்டார்.

அரைமணி நேரத்துக்கெல்லாம் மனோகரின் மோட்டார் ஸைக்கிள் கருணாகரன் பங்களா வாசலில் வந்து நின்றது. கருணாகரன் அவரை வரவேற்று அமரச் செய்தார். சாரங்கனும் உடனே தேனீர் தயாரித்துக் கொண்டு வந்து வைத்தான்.

"உங்கள் மகளை எப்பொழுதிலிருந்து காணவில்லை?" என்று கேட்டார் மனோகர்.

"அவள் காணாமல் போய்விட்டாள் என்பது எனக்கு சற்று முன்னால் தான் தெரியும். அவள் வழக்கமாகப் போகும் அவள் அத்தை பெண் மாலினியின் வீட்டிற்குப் போவதாகக் கூறிவிட்டுக் கிளம்பிச் சென்றாள். இன்று காலையில் நான் அகல்யாவிடம் பேசவிரும்பி மாலினியின் வீட்டிற்கு டெலிபோன் செய்தேன். அதன் பிறகு தான் அகல்யா அங்கே போகவே இல்லை என்ற விஷயம் எனக்குத் தெரிந்தது" என்று நிறுத்தினார் கருணாகரன்.

"உடனே போலீஸாருக்கு டெலிபோன் செய்தீர்களா?" என்று கேட்டபடி தேனீரைப் பருகினார் இன்ஸ்பெக்டர் மனோகர்.

"இல்லை"

"ஏன்?"

"அவள் காணாமல் போயிருப்பாள் என்று எனக்கு அப்பொழுது தோன்றவில்லை. அவள் திடீரென்று தனது மனதை மாற்றிக் கொண்டு வேறு யாராவது தோழிகளின் வீட்டிற்குப் போயிருக்கக் கூடுமென்று எனக்குத் தோன்றியது. அதனால் அவளது தோழிகளனைவரையும் டெலிபோனில் கூப்பிட்டு விசாரித்தேன். அவள் எங்குமே போகவில்லை என்பது தெரிந்ததும் தான் எனக்கு முதலில் சந்தேகம் ஏற்பட்டது" என்று கரகரத்த குரலில் கூறினார் கருணாகரன்.

"அகல்யா வேறு எங்காவது போயிருக்கலாமல்லவா?" என்று கேட்டார் மனோகர்.

"எங்கே சென்றாலும் முன்கூட்டியே தெரிவித்து விட்டு தான் அகல்யா அம்மா செல்வது வழக்கம். ஒருமுறை கூட அய்யாவுக்குத் தெரியாமல் அவர் எங்குமே சென்றதில்லை, அப்படியே போக வேண்டி நேர்ந்தாலும் யாராவது தோழிகள் கட்டாயப்படுத்தினாலும் உடனே டெலிபோன் செய்து வீட்டிற்குத் தெரிவித்து விட்டு தான் செல்வது வழக்கம்" என்று குறுக்கிட்டு கூறினான் சாரங்கன்.

COMICS PDF TIMES

உடனே அகல்யாவைக் கண்டுபிடிக்க ஏற்பாடு செய்யா மல் இன்ஸ்பெக்டர் மனோகர் ஏதாவது வேண்டாத கேள்வி களை எல்லாம் கேட்டுக் கொண்டு நேரத்தை வளர்த்துவதாக அவன் எண்ணியதால் ஆதுக்கே பேசினான் சாரங்கன்.

யோசனையோடு அவனை சில விநாடிகள் பார்த்துக்கொண் டிருந்த மனோகர், கருணாகரனின் பக்கம் திரும்பி அகல்யாவின் அங்க அடையாளங்களைப் பற்றி விசாரித்தார். கருணாகரனும் எல்லா அடையாளங்களையும் கூறிவிட்டு ஏதோ சிந்தனையில் ஈடுபட்டார்.

அவர் எதையோ நினைவுப் படுத்திக் கொள்ள முயலுவ தாக இன்ஸ்பெக்டர் மனோகருக்குத் தோன்றியது. அதனால் அவர் டெலிபோன் அருகே சென்று ராம்கோபாலுக்கு டெலி போன் செய்தார்.

ராம் கோபாலிடம் அகல்யாவின் அங்க அடையாளங்களை கூறி, எல்லா போலீஸ் நிலையங்களுக்கும் தகவல் கொடுக்கும் படி பணித்து விட்டு மீண்டும் கருணாகரனுக்கு எதிரில் வந்து அமர்ந்தார்.

"அகல்யாவின் முழங்காலுக்கு சற்று கீழே ஒரு பெரிய தழும்பு இருக்கும், இன்ஸ்பெக்டர்! அது அவள் குழந்தை யாக இருந்தபோது புறப்பட்ட கட்டியை ஆபரேஷன் செய்த தனால் ஏற்பட்ட தழும்பு" என்றார் கருணாகரன்.

இதைக் கேட்டதும் இன்ஸ்பெக்டர் மனோகரின் முகபாவம் மாறியது. சில விநாடிகள் ஒன்றும் பேசாமலிருந்தவர், "இட துகாலிலா அல்லது வலது காலிலா என்று கேட்டார்.

"வலது காலில் தான், இன்ஸ்பெக்டர்!"

"அகல்யாவை பஸ் நிலையத்துக்கு அழைத்து சென்ற வேலைக்காரன் இருந்தால் கூப்பிடுங்கள். அவனை நான் விசா ரிக்க வேண்டும்" என்றார் மனோகர்.

சில விநாடிகளில் வேலப்பன் என்பவன் மனோகருக்கு முன் னால் கொண்டு வந்து நிறுத்தப்பட்டான்.

"நீ எத்தனை ஆண்டுகளாக இங்கே வேலை செய்கிறாய்?" என்று கேட்டார் மனோகர்.

"பதினொரு வருஷங்களாக வேலை செய்கிறேன், சார்!" என்று பதிலளித்தான் வேலப்பன்.

"அகல்யாவை பஸ், ஸ்டாண்டில் கொண்டு போய் விட் டது நீதானா?"

''ஆமாம், சார்!''

''பஸ் வரும் வரை நீ அங்கே நின்று கொண்டிருந்தாயா?''

''பெட்டி இலேசாக இருப்பதால் என் உதவி தேவை இல்லை என்று கூறி என்னை திருப்பி அனுப்பி விட்டார்கள். பல சமயங்களில் அவர் அப்படி ஏற்கனவே செய்திருப்பதால் நான் பேசாமல் வந்துவிட்டேன். அதோடு அவர் கூறியபடி கேட்காவிட்டால் ரொம்ப கோபம் வரும்'' என்றபடி ஜாடையாக கருணாகரனைப் பார்த்தான் வேலப்பன். தான் கூறியது அவருக்கு ஆத்திரத்தை ஏற்படுத்துமோ என்று அவனுக்கு பயத்தை அளித்தது. ஆனால் கருணாகரன் அவன் பக்கம் திரும்பவே இல்லை.

''அகல்யா என்ன நிறப் புடவை கட்டிக் கொண்டிருந்தாள்?'' என்று கேட்டார் இன்ஸ்பெக்டர் மனோகர்.

''பச்சை நிற ஷிபான் புடவை உடுத்திக் கொண்டிருந்தாள் அதே கலர் ரவிக்கையும் அணிந்து கொண்டு, அதற்கு ஏற்றாற் போல் பச்சை கற்கள் பதித்த வளையல்கள், நெக்லஸ், தோடு ஆகியவற்றையும் அணிந்து கொண்டிருந்தார்'' என்றான் வேலப்பன்.

''நீங்கள் இருவரும் பஸ்-நிலையத்தை நோக்கிச் செல்லும் போது யாராவது பின்தொடர்ந்தார்களா?'' என்று கேட்டார் மனோகர்.

''எனக்குத் தெரியாது, சார்! ஏனென்றால் அகல்யா அம்மா, தான் பவானி அம்மா வீட்டிலிருந்து திரும்பி வருவதற்குள் யாராவது தோழிகள் வந்தால் என்ன சொல்ல வேண்டும் என்பது பற்றியும், ஆபீஸுக்கு வரும் கடிதங்களை பவானி அம்மாவின் வீட்டு விலாசத்துக்கு அனுப்பும்படியும், யாருக்கும், தான் போயிருக்கும் இடத்தைப் பற்றி கூற வேண்டாம் என்றும் சொல்லிவிட்டு யார் யாருக்கு என்னென்ன செய்திகளைக் கூற வேண்டுமென்றும் சொல்லிக் கொண்டு வந்ததை நான் கவனமாகக் கேட்டுக்கொண்டு இருந்ததால் யாராவது பின்தொடர்ந்து வருகிறார்களா என்று நான் கவனிக்கவில்லை, அதுமட்டுமல்லாமல் இதுவரை [illegible] அகல்யா அம்மா செல்லும் போது யாரும் பின்தொடர்ந்து வந்ததில்லை'' என்றான் வேலப்பன்.

சில நிமிஷங்கள் யோசனையோடு அமர்ந்திருந்தார் மனோகர். அவர் அடுத்தாற்போல் என்ன கேட்கப் போகிறார்

என்று எல்லோரும் ஆவலோடு அவரையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

"வீட்டை விட்டு புறப்படும் போது அகல்யா எப்படிக் காட்சியளித்தாள்? சந்தோஷமாக சென்றாளா? அல்லது ஏதோ ஒரு சங்கடத்தில் சிக்கிக் கொண்டிருப்பவர்களைப் போலத் தோன்றினாளா? என்று கேட்டார் மனோகர்.

"வழக்கம் போல் தான் இருந்தார்" என்றான் வேலப்பன்.

"அப்படி யென்றால்?"

"எப்பொழுதுமே தனது உணர்ச்சிகளை அகல்யா அம்மா வெளியே காண்பித்துக் கொள்ள மாட்டார்" என்று கூறிய வேலப்பன், "அதனால் என்னால் தெளிவாகக் கூற முடியவில்லை" என்றான்.

"இங்கிருந்து புறப்பட்டுச் செல்லும்போது ஏதாவது தகராறு ஏற்பட்டதா?"

"இல்லை!"

அந்தச்சமயத்தில் டெலிபோன் மணி அடித்தது. சாரங்கன் சென்று யார் பேசுவது என்று கேட்டான். பிறகு இன்ஸ்பெக்டர் மனோகரின் பக்கம் திரும்பி, "உங்களுக்குத் தான் டெலிபோன் வந்திருக்கிறது, சார்!" என்றான்.

இன்ஸ்பெக்டர் மனோகர் எழுந்து சென்றார். பேசியது ராம்கோபால்தான்.

"காணாமல் போன பிணத்தின் கை மெரீனா கடற்கரையருகே ஒதுங்கி இருப்பதாகத் தகவல் கிடைத்தது. உடனே அங்கே சென்று அதைக் கொண்டுவந்து பார்த்தோம். அந்தக் கை இறுக மூடி இருந்தது. அதன் உள்ளே இருந்த சில கேசச் சுருள்களை வெகு கஷ்டப்பட்டு வைத்திருக்கிறேன்" என்று உற்சாகத்தோடு கூறினார் ராம்கோபால்.

"நல்லது; வேறு ஏதாவது விஷயமுண்டா?" என்று கேட்டார் மனோகர்.

"அந்த வலது கையின் பெரு விரலில் ஒரு பச்சை நிற மச்சம் இருக்கிறது" என்றார் ராம்கோபால்.

"அந்தக் கை, பிணத்தினுடையது தானா என்று நன்றாகத் தெரிந்து விட்டதா?" என்று கேட்டார் மனோகர்.

"அந்தப் பிணத்தினுடையது தான்!" என்று திட்டவட்டமான குரலில் கூறினார் ராம்கோபால்.

"நான் இன்னும் சிறிதுநேரத்தில் வருகிறேன்" என்று கூறிவிட்டு டெலிபோனை வைத்த மனோகர், தனது புருவத்தை நெறித்தபடி ஏதோ யோசனையில் ஆழ்ந்தார்.

பிறகு மெதுவாக கருணாகரனை நோக்கி நடந்தபடி, "உங்கள் மகளுக்கு, வலது கைப் பெருவிரலில் நாலணா அளவுள்ள பச்சை வர்ணமச்சம் இருக்கிறதா?" என்று கேட்டார் மனோகர்.

"ஆமாம் அவள் பிறந்தபோதே அந்த மச்சம் இருந்தது" என்றார் கருணாகரன்.

"உங்கள் பெண் கிடைத்துவிட்டாள்! ஆனால்—"

"ஆனால்?"

"அவள் உயிருடன் இல்லை" என்று நிதானமான குரலில் கூறினார் மனோகர்.

"அடக்கடவுளே!" என்று ஏக காலத்தில் சாரங்கனும் வேலப்பனும் கூவினார்கள்.

கருணாகரன் எந்தவித அதிர்ச்சியும் அற்றவரைப் போல மனோகரை வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந்தார். தான் எங்கிருக்கிறோம் என்றோ, யார் யார் தன்னுடன் இருக்கிறார்கள் என்பதையோ மறந்து விட்டவர்போல் அவர் காணப்பட்டார். அவரைப் பார்ப்பதற்கு மனோகருக்குப் பரிதாபமாக இருந்தது.

திடீரென்று ஆவேசம் வந்தவர்போல், "அவன் தான் அவளைக் கொன்றிருக்க வேண்டும்! அவன் தான் அவளைக் கொன்றிருப்பான்!" என்று அலறியபடி மூர்ச்சையானார்.

பிரமை தட்டிப்போன நிலையில் சில வினாடிகள் ஸ்தம்பித்துநின்ற வேலப்பனும், சாரங்கனும் தங்கள் சுய நினைவு வரப்பெற்றவர்களாக ஆளுக்கு ஒரு திசையில் ஓடினார்கள்.

அத்தியாயம் : 4

## அகல்யாவின் டைரி!

அடுத்த சில நிமிஷங்கள் அந்த பங்களாவே அல்லோல கல்லோலப்பட்டது. சாரங்கன் தேனீர் தயாரித்துக் கொண்டு வர வேலப்பன் தண்ணீர் கொண்டு வந்து கருணாகரனின் முகத்தில் தெளிக்க, அகல்யாவின் பிரத்யேக வேலைக்காரி அவருக்கு விசிற ஒரே அமர்க்களமாக இருந்தது. இன்ஸ்-பெக்டர் மனோகர், எப்படி செயல் பட வேண்டுமென்று அவர்-

கனுக்கு சொல்லிக் கொண்டிருந்தார்.

சிறிது நேரத்தில் கருணாகரன் மூர்ச்சை தெளிந்து எழுந்ததும் நிறைய சக்கரை கலந்த தேனீரை சாரங்கன அவருக்குக் கொடுத்தான். கொஞ்சநேரத்தில் அவர் அமைதியோடு காணப்பட்டார்.

'அகல்யாவின் பிணத்தைக் கண்டுபிடித்து விட்டார்களா?' என்று மெல்லிய குரலில் கேட்டார் கருணாகரன்.

''கண்டுபிடித்து விட்டோம். ஆனால் அது உங்கள் மகளின் பிணம் என்பது இப்பொழுதுதான் சந்தேகமற தெரிந்து கொண்டேன்'' என்று கூறிய இன்ஸ்பெக்டர் மனோகர், ''நீங்கள் மயக்கமடைவதற்கு முன்னால்,'' ஒருவனை தான் அவளைக் கொலை செய்திருப்பான! அவன் தான் அவளைக் கொன்றிருப்பான!'' என்று அலறிக்கொண்டு கீழே விழுந்தீர்களே? நீங்கள் சந்தேகப்படும் அந்த நபர் யார்?'' என்று கேட்டார்.

கருணாகரன் தனது ஆசனத்தை விட்டு எழுந்தபடி, ''நாம் எனது ஆபீஸ் அறைக்குப் போகலாம்!'' என்று கூறியபடி மனோகரை அழைத்துச்சென்றார். சாரங்கனும் வேலையாளும் தங்கள் வேலையை கவனிக்கச் சென்றார்கள்.

கருணாகரனின் ஆபிஸ் அறை குளிர்சாதன வசதி கொண்டதாக இருந்தது. எல்லா பொருள்களும் அதனதன் இடத்தில நுப்புரவாக வைக்கப்பட்டிருந்தன. உள்ளே நுழைந்ததுமே இன்ஸ்பெக்டர் மனோகரன் கவனத்தை இவையெல்லாம் கவர்ந்தன.

இருவரும் ஆசனங்களில் அமர்ந்த பிறகு கருணாகரன் பேச்சைத் துவக்கினார்.

''என் மகள் பல வருஷங்களாக திருமணமே செய்து கொள்வதில்லை என்ற மன உறுதியோடு வாழ்ந்து வந்தாள். ஆனால் மூன்று வருஷங்களுக்கு முன்னால் அவள் திடீரென்று ஒருவனைக் காதலித்தாள். எனக்கு அதில் திருப்தி ஏற்பட்ட போதிலும் அவள் தேர்ந்தெடுத்த நபர் மட்டமான ஒருவனாக இருந்ததைக் கண்டதும் அதிர்ச்சி அடைந்தேன். ஆனால் தாயில்லாப் பெண்ணை அகல்யா மனம் நோகக் கூடாதென்ற தவிப்பால் திருமணத்திற்கும் ஒப்புக் கொண்டேன். ஆனால் திடீரென்று ஒருநாள் அவள் மாயமாய் மறைந்து விட்டாள். இரண்டொரு தினங்களில் அவளைப்பற்றிய செய்தி ஒன்று பத்திரிகையில் வெளிவந்திருந்தது. அதைப் படித்ததும் என

மனம் உடைந்து போயிற்று. திருட்டு நகை வைத்திருந்த குற்றத்துக்காக அவனை போலீஸார் கைது செய்திருந்ததாக செய்தி வெளிவந்திருந்தது.''

''நீங்கள் கூறுவது பாலுவைப் பற்றியா?'' என்று வியப்போடு கேட்டார் மனோகர்.

''ஆமாம்''

COMICS PDF TIMES

''பிறகு?''

''அந்த செய்தியைக் கூறாமல் இருக்கும்படி உத்தரவிட்டேன். ஆதலால் அகல்யாவுக்கு இந்த செய்தி தெரியாது. பாலுவைப் பற்றி எந்த விவரமும் தெரியாமல் இருந்தால் நாளடைவில் அவனை அவள் மறந்து விடுவாள் என்று எதிர்பார்த்தேன். ஆனால் அவள் அவனை மறக்கவேயில்லை என்பது எனக்கு இப்பொழுதுதான் தெரிந்தது!'' என்று நிறுத்தினார் கருணாகரன்.

''எப்படி?''

''பத்து தினங்களுக்கு முன்னால் விடுதலையாகி வந்த அவனை அகல்யா சந்தித்திருக்கிறாள்'' என்று கூறிய கருணாகரன், அதையடுத்து நடந்த நிகழ்ச்சிகளைக் கூறிவிட்டு, ''அகல்யாவுக்கு உண்மை தெரிந்ததும் அவள் அவனுடன் சண்டை போட்டிருக்கிறாள். அவனை இழித்தும் பேசி இருக்கிறாள். ஒருக்கால் ஆத்திரமடைந்த பாலு அவளைக் கொலை செய்திருக்கலாம் என்று சந்தேகப்படுகிறேன். ஆனால் அவன் அவளைக் கொலை செய்யாமலும் இருந்திருக்கலாம்'' என்றார்.

''அவள் கொலை செய்யப்பட்டிருப்பாள் என்று எப்படி நினைக்கிறீர்கள்?'' என்று கேட்டார் மனோகர்.

''வேறு எப்படியும் அவள் இறந்திருக்க முடியாது. அவளுக்கு எந்தவித நோயும் இல்லை. அதோடு தற்கொலை செய்து கொள்ளுமளவிற்கு அவள் கோழையுமல்ல!'' என்று ஆணித்தரமாகக் கூறிய கருணாகரன், ''இன்று காலை பேப்பரில் வெளிவந்திருந்த புகைப்படத்தைப் பார்த்ததும் எனக்கு கொஞ்சம் சந்தேகமாக இருந்தது! அதைப் பார்த்த பிறகு எனக்கு இனம் தெரியாத கலவரம் ஏற்பட்டது. அதனால் உடனே பவானியின் வீட்டிற்கு டெலிபோன் செய்து கேட்டேன்'' என்றார்.

பவானியின் விலாசத்தைக் குறித்துக் கொண்டு சிறிது

நேரத்தில் அங்கிருந்து கிளம்பிய இன்ஸ்பெக்டர் மனோகர், ''நீங்கள் வந்து பிணத்தை அடையாளம் காட்ட வேண்டும்' என்றார்.

கருணாகரனும் அவரோடு புறப்பட்டார்.

சவக்கிடங்குக்கு வெளியே இருவரும் வந்தபோது கருணாகரன் மிகவும் ஆடிப் போய் காணப்பட்டார். மீண்டும் அவர் மூர்ச்சையாகி விடக் கூடுமென்று எதிர்பார்த்தார் மனோகர். ஆனால் அப்படி எதுவும் நடக்கவில்லை. சிறிது நேரத்தில் கெல்லாம் மனோகரிடம் விடை பெற்றுக் கொண்டு பங்களாவை நோக்கி விரைந்தார் கருணாகரன்.

கருணாகரனின் சாட்சியப்படி அது அகல்யாவின் பிணம் தான் என்று தெளிவாகத் தெரிந்து விட்டது. முதல் முதலில் சந்தேக லிஸ்டில் இருப்பது பாலுதான், அவனைக் கண்டு பிடித்து விசாரணை செய்ய வேண்டுமென்று முடிவு செய்தார் மனோகர். எனவே அதற்கான முயற்சியில் இறங்கினார்.

பிணம் யாருடைய தென்பது நன்றாகத் தெரிந்துவிட்டது ஒரு வேலையைக் குறைந்தது. அகல்யாவைத் தேடுவதற்காக அவர் கூறியிருந்தவைகளை மாற்றி பாலுவைத் தேடும்படி மாற்றி கூறினார். பாலுவைப் பிடித்து விசாரித்தால் உண்மை வெளிப்படு மென்று மனோகர் நம்பினார்.

ஒரு வாரம் ஆன போதிலும் பாலுவைப் பற்றிய விவரம் எதுவுமில்லை. இதனால் இன்ஸ்பெக்டர் மனோகர் சோர்வடைந்தார். இருந்த போதிலும் மற்றவர்களை விசாரிப்பதில் அதிக ஆக்கலறை காட்டி ஏதாவது உண்மை வெளிப்படுகிறதா என்று பார்த்தார்.

ஆனால் எந்த விதத் தகவலும் கிடைக்கவில்லை. அவர் எதிர் பாராத சம்பவம் ஒன்று அன்று நடந்தது.

கருணாகரனை சந்தித்து பேசிவிட்டு அவர் போலீஸ் ஸ்டேஷனுக்குத் திரும்பியபோது இவருக்கு ஒரு செய்தி கிடைத்தது அடையாறு போகும் வழியில் ஒரு வாலிபன் மீது லாரி ஏறி அவன் மிகவும் ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டிருப்பதாகத் தெரிந்தது.

உடனே அரசாங்க மருத்துவ மனைக்கு கிளம்பிச் சென்றார் இன்ஸ்பெக்டர் மனோகர். அந்த வாலிபன் பெயரோ, வேறு விவரங்களோ யாருக்கும் தெரியவில்லை. ஆனால் அவன் குடி போதையில் லாரியின் முன்னால் வந்து விழுந்ததாகப்

பேசிக் கொள்ளப்பட்டது.

அவன் இருந்த அறைக்குள் நுழைந்த இன்ஸ்பெக்டர் மனோகருக்கு அதிர்ச்சி ஏற்பட்டது. அவனை வேறு யாருமல்ல பாலுதான்! அவன் உடல் முழுவதும் கட்டு போடப்பட்டிருந்தது, ரத்தமும், பிராண வாயுவும் அவனுக்கு செலுத்திக் கொண்டிருந்தார்கள்.

அங்கே இருந்த டாக்டரை நெருங்கிய இன்ஸ்பெக்டர் மனோகர், "இந்த மனிதன் பிழைப்பானு, டாக்டர்?" என்று கேட்டார்.

"இப்பொழுது ஒன்றும் சொல்வதற்கில்லை, இன்ஸ்பெக்டர்! நோயாளி ஆபாய கட்டத்தை இன்னும் தாண்டவில்லை" என்று கூறிய டாக்டர், "அவன் யாரென்று உங்களுக்குத் தெரியுமா?" என்று கேட்டார்.

"அவன் ஒரு மாஜிக் கைதி. சில நாட்களுக்கு முன்னர் தான் வேலூர் ஜெயிலிலிருந்து விடுதலையாக வந்தான். இப்பொழுது ஒரு கொலை வழக்கில் அவனது சாட்சியம் மிகவும் தேவைப்படுகிறது" என்ருர் மனோகர்.

"அவன் சிறிது நேரத்தில் கண் விழிக்கக் கூடும், இன்ஸ்பெக்டர்! அப்பொழுது நீங்கள் அவனை விசாரிக்கலாம்" என்று கூறிவிட்டு அங்கிருந்து கிளம்பி அடுத்த நோயாளியை கவனிக்கச் சென்ருர் டாக்டர்.

பாலுவின் படுக்கையருகில் ஒரு ஸ்டூலில் அமர்ந்தபடி அவன் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தார் மனோகர். அங்கு இருந்த ஒரு நர்ஸ் பாலுவின் நாடித் துடிப்பை பரிசோதித்துப் பார்த்து விட்டு, பிராணவாயு ஒழுங்காக செல்கிறதா என்று பார்த்து விட்டு, ஒரு ஸ்டூலில் அமர்ந்தாள்.

"ஏதாவது வாக்குமூலம் வாங்கப் போகிறீர்களா, இன்ஸ்பெக்டர்?" என்று கேட்டாள் அந்த நர்ஸ்.

"ஆமாம்" என்று கூறியதோடு நிறுத்திக் கொண்டார் மனோகர். அவரோடு பேசவே அவருடைய அப்போதைய மனநிலை இடம் தரவில்லை. அதை உணர்ந்த அந்த நர்ஸ் பேசாமல் பாலுவை கவனித்தபடி மௌனமானுள்.

அரைமணி நேரத்திற்குப் பிறகு பாலுவுக்கு பிரக்ஞை திரும்பியது. அவன் ஏதோ முனகினுன்.

நர்ஸ் ஓடிச்சென்று அவன் என்ன சொல்ல முயலுகிருன் என்று பார்த்தாள். பிறகு ஸ்பூனில் சிறிது தண்ணீரை எடுத்து பாலுவின் வாயில் ஊற்றினுள். ஐந்து நிமிஷங்களுக்

கெல்லாம் பாலு நன்ருகக் கண்விழித்துப் பார்த்தான்.

அவனைப் பரிசோதித்த டாக்டர், இன்ஸ்பெக்டர் மனேகரின் பக்கம் திரும்பி, "இன்ஸ்பெக்டர்! நீங்கள் உங்கள் விசாரணையைத் தொடங்கலாம்" என்று கூறிவிட்டு அந்த அறையை விட்டு வெளியேறினர். அவருடன் நர்ஸும் சென்ருள்.

தனது எதிரில் இருந்தும் அருகே இழுத்துப் போட்டுக் கொண்ட மனேகர், "இப்பொழுது எப்படி இருக்கிறது, பாலு?" என்று கேட்டார்.

"உடலை அசைக்க முடியாமல் ஒரே வலியாக இருக்கிறது இன்ஸ்பெக்டர்!" என்று கூறிய பாலு, "உங்களைச் சந்திக்க வேண்டுமென்று துடியாய் துடித்துக் கொண்டிருந்தேன். உங்களைப் பார்க்கவும் எழுந்து வர முடியாமல் போய்விட்டது" என்று நிறுத்தினன். அவனுக்கு மூச்சு வாங்கியது.

"எதற்காக என்னைப் பார்க்க விரும்பினய்?" என்று அக்கறையோடு கேட்டார் இன்ஸ்பெக்டர் மனேகர்.

"அகல்யா விஷயமாக," என்று கூறிய பாலு, "இந்த ஊரிலேயே பெரிய நகை வியாபாரியான கருணுகரனின் மகள் அகல்யாவைப் பற்றி உங்களிடம் கூறவேண்டுமென்று நினைத்தேன். அவளது உயிருக்கு ஏதோ ஆபத்து நேர்ந்திருக்க வேண்டுமென்று எனக்குத் தோன்றுகிறது. என்னை அடைத்து வைத்திருந்த இடத்தில் அப்படித்தான் ஏதோ பேசிக் கொண்டிருந்தார்கள்" என்று கூறிவிட்டு ஆயாசத்தோடு கண்களை மூடிக்கொண்டான்.

அவன் மீண்டும் பேசும்வரை பொறுமையோடு காத்திருந்தார் மனேகர்.

சிரமத்தோடு கண்களை மீண்டும் திறந்தான் பாலு; "அகல்யாவும் நானும் திருமணம் செய்து கொள்வதாக முடிவு செய்தோம். அவள் என்னை சந்திப்பதாகக் கூறி இருந்தாள். அவளது உறவினர் பெண் பவானியை சந்திக்கச் செல்வதாகக் கூறிவிட்டு என்னைப் பார்ப்பதற்காகத் தான் அவள் வந்தாள். ஆனல் பஸ் ஸ்டாண்டுக்கு நூறு அடி தூரத்தில் நான் நடந்து வரும் பொழுது ஒரு கறுப்பு நிற கார் வந்து அவளருகில் நின்றது. அதிலிருந்து ஒரு மனிதன் கீழே இறங்கி அகல்யாவிடம் ஏதோ சொன்னன். அதைக் கேட்டதும் அவள் பரபரப்போடு அந்தக் காரில் ஏறிக் கொள்ள அது வாயு வேகத்தில் பறக்க ஆரம்பித்தது.

"பிறகு?"

''பின்னால் ஒரு டாக்சி வந்து கொண்டிருந்தது. அதை நிறுத்தி ஏறிக் கொண்டு முன்னால் செல்லும் காரைத் தொடர்ந்து செல்லும்படி கூறினேன். முதலில் சிறிது தூரம் அந்தக் காரைத் தொடர்ந்து சென்ற டாக்சி திடீரென்று வேறு ஒரு திசையில் திரும்பி ஓட ஆரம்பித்தது. நான் எவ்வளவோ கத்தியும் கூச்சல் போட்டும் பயனில்லை! டாக்சி டிரைவர் என் பேச்சைக் காதில் வாங்கிக் கொள்ளவில்லை. கடைசியில் எங்கேயோ சுற்றிவிட்டு ஒரு பாழடைந்த பங்களாவின் முன்னால் அந்த டாக்சி நின்றது!'' என்று கூறிவிட்டு சிறிது நேரம் கண்களை மூடிக்கொண்டான் பாலு.

அவன் கூறியவைகளையெல்லாம் குறிப்பெடுத்துக் கொண்டார் இன்ஸ்பெக்டர் மனோகர்.

தொடர்ந்து பேசினான் பாலு.

''டாக்சி வந்து நின்ற சத்தம் கேட்டதும் உள்ளே இருந்து இரண்டு முரட்டு ஆட்கள் வந்து என்னை வலுக்கட்டாயமாக உள்ளே இழுத்துச் சென்று ஒரு அறையில் தள்ளி பூட்டினார்கள். அப்பொழுது தான் அகல்யாவை பற்றியும் அவள் பிறப்பை பற்றியும் இன்னும் ஏதேதோ பேசிக் கொண்டார்கள். நான் இன்று வரை அங்கு அடைந்து கிடந்து பிறகு கஷ்டப்பட்டு அங்கிருந்து தப்பி வந்தேன். வழியில் என்னை மீண்டும் அவர்கள் அடையாளம் கண்டு பிடித்துவிட்டார்கள். ஒருவன் தன் கையில் வைத்திருந்த காரமான பொடியை என் கண்களிலும் சட்டையிலும் தூற்றினான். பிறகு ஒரு மூலையில், ஒரு பூட்டிய வீட்டின் அருகே என்னைப் பிடித்தபடி நின்றார்கள். அந்தச்சமயத்தில் ஒரு லாரி வந்தது அதன் முன்னால் என்னைத் தள்ளினார்கள்! அதன்பிறகு என்ன நடந்ததென்று எனக்குத் தெரியாது'' என்று திக்கித்திணறி கூறி முடித்தான் பாலு.

அவன் இருக்கும் நிலையில் அகல்யா கொலை செய்யப்பட்டதைப் பற்றி அவனிடம் கூறவேண்டாமென்று முடிவு செய்தார் மனோகர்.

''அகல்யாவைப் பற்றிய சில உண்மைகளை நான் என் நண்பனிடம் கூறி இருக்கிறேன். அவன் உங்களுக்கு எல்லாவற்றையும் சொல்வான்'' என்று கூறிக் கொண்டிருக்கும் போதே மூர்ச்சையானான் பாலு.

மனோகர் உடனே எழுந்து சென்று இது வரை வெளியே நின்று கொண்டிருந்த டாக்டரை அழைத்தார். டாக்டர் பாலுவைப் பரிசோதித்துப் பார்த்துவிட்டு அவன் மூர்ச்சை தெளிய

நேரம் பிடிக்கு மென்றும் அப்படியே தெளிந்தாலும் அவன் பேசிக் கொண்டிருப்பது இவன் உயிருக்கே ஆபத்தாக முடியு மென்றும் கூறிய டாக்டர் மீண்டும் அவனை விசாரிக்க வேண்டுமானுல் மறுநாள் வரும்படி கூறி விட்டார்.

பானுவின் நண்பன் யாராக இருக்கு மென்று யோசித்தபடி போலீஸ் ஸ்டேஷனுக்கு சென்ருர் மனோகர். இதுவரை பானுதான் கொலைகாரனுக இருப்பானென்று தோன்றியது. ஆனுல் இப்பொழுது விஷயம் வேறு மாதிரியாக மாறிவிட்டது

பானுவைத் தவிர வேறு யார் அகல்யாவைக் கொன்றிருக்க கூடுமென்று அவருக்குப் புரியவில்லை. மீண்டும் கருணைகரனை சந்தித்தால் ஏதாவது தடயம் கிடைக்கக் கூடுமென்று அவருக்குத் தோன்றியது.

மனோகர், கருணைகரனின் பங்களாவை அடைந்த போது அவர் எங்கோ வெளியே சென்றிருந்தார். வேலைக்காரர்களை விசாரித்ததில் எந்த புது விஷயமும் புலப்படவில்லை. கடைசியாக அகல்யாவின் அறையை சென்று பார்ப்பதென்று முடிவு செய்தார்.

சாரங்கன் அவரை அகல்யாவின் அறைக்கு அழைத்துச் சென்ருன். அவர் அந்த அறையை சோதனை போட்டு முடிக்கும் சமயத்தில் அவருக்கு ஒரு சிறிய டைரி கிடைத்தது. சாரங்கன் பார்க்காத சமயத்தில் அதைத் தனது பாக்கெட்டில் மறைத்துக் கொண்டார் மனோகர்.

பிறகு விடை பெற்றுக் கொண்டு அங்கிருந்து போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்ருர். அந்த டைரி அகல்யா எழுதியது தான். [illegible] அவள் இறப்பதற்கு சற்று முன்வரை அவள் டைரி எழுதி இருக்கிருள் என்று தெரிந்து கொண்டார் இன்ஸ்பெக்டர் மனோகர்.

அதில் காணப்பட்ட விஷயங்களை ஒவ்வொன்றாக நிறுத்தி நிதானமாகப் படித்தார் மனோகர், ஒரு இடத்தில், "இன்று ஏனுல் அப்பாவுக்கு என்மீது அவ்வளவு கோபம் என்று எனக்குத் தெரியவில்லை. இதுவரை என்னைப்பார்த்து அவர் அவ்வளவு முரட்டுத்தனமாகப் பேசியதில்லை அவர் ஆபீஸ் அறையில் தனது நாற்காலிக்கு அருகில் கீழே அமர்ந்து என்னவோ செய்து கொண்டிருந்தார். அதை நான் பார்த்து விட்டேன் என்பதால் அவர் ஆத்திரப்பட்டிருக்கக்கூடும் என்று எனக்குத் தோன்றுகிறது. அந்த இடத்தில் என்ன இருக்கிறதென்று கண்டுபிடிக்க வேண்டும்" என்று எழுதி இருந்தது.

தொடர்ந்து படித்தார் மனேகர்; "பாலு குற்றமற்றவர் என்றும் அவரைக் கைது செய்ய வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் யாரோ திருட்டு நகையை அவர் வீட்டில் மறைத்து வைத்தார்கள் என்றும் நான் நினைக்கிறேன். பாலுவும் இதே ரீதியில்தான் நினைக்கிருர். அடிக்கடி யாரோ ஒரு முரடன் அவர் முன்னுல் தோன்றி, "கூடிய சீக்கிரம் நீ சென்னையை விட்டு வெளியூர் சென்று விடவேண்டும். இல்லாவிட்டால் நீ கொலை செய்யப் படுவாய்!" என்று மிரட்டுவதாக என்னிடம் கூறினர். நானும் அவரோடு சென்று விடுவதென்று முடிவு செய்து விட்டேன். பாலுவைப் பிரிந்து என்னுல் வாழ முடியாது"

"என் டைரியை அப்பா படிக்க நேர்ந்தால் அவர் ரொம்ப ஆத்திரப்படுவார். ஆனல் இதை அவர் படிக்கமாட்டார் என்றே நினைக்கிறேன். ஏனென்றல் நான் டைரி எழுதுவது என்னைத்தவிர யாருக்கும் தெரியாது. அதோடு நான் இதை ஒளித்து வைத்திருக்கும் இடமும் அவருக்குத் தெரியாது"

தான் டைரியைக் கண்டு பிடித்த இடத்தை நினைத்துக் கொண்டார் மனேகர். அகல்யா எழுதி இருந்ததைப் போல் அது மறைவாகத்தான் இருந்தது. நன்ருக சோதனை போட்டாலொழிய தெரிய முடியாத இடத்தைத் தான் அகல்யா தேர்ந்தெடுத்து அதை மறைத்து வைத்திருந்தாள்.

அதைத் தொடர்ந்து இன்னும் சில பக்கங்களுக்கு ஏதேதோ எழுதி இருந்தாள் அகல்யா. அதன் பிறகு ஒன்றும் காணப்படவில்லை.

டைரியின் கடைசி பக்கத்தில் சில வரிகள் காணப்பட்டன;

"ஏதோ சில விஷயங்களைப் பற்றி பாலுவின் நண்பர் சாமிராம் துப்பு துலக்கிக் கொண்டிருப்பதாக பாலு கூறினர். அது எங்கள் குடும்பம் சம்பந்தப்பட்ட ஏதோ விஷயம் என்றும், அது சந்தேகமற நிரூபிக்கப்படும் வகையில் தயாரானதும் தான் என்னிடம் கூட உண்மையைக் கூற முடியும் என்றும் பாலு கூறினர். அது என்னவாக இருக்கும் என்று நான் நினைத்து குழம்பாத நாளில்லை. சாமிராம் எங்கிருக்கிருர் என்பதைக் கூட பாலு கூறவில்லை. சாமிராமின் விலாசம் வெளியானுல் அவர் உயிருக்கு ஆபத்து ஏற்படக்கூடுமென்று பாலு நினைக்கிருர்!"

இந்த விவரத்தைப் படித்ததும் மனேகர் யோசனையில் ஆழ்ந்தார். இது என்ன புதுக்கதை என்று அவருக்குத் தோன்றியது. பாலு அவரிடம் தனது நண்பனின் பெயரை

கூறுவிடினும் அது இந்த சாயிராம் தான் என்று புரிந்தது. ஆனால் அவனை எங்கே சென்று தேடுவது?

அந்தச் சமயத்தில் அவரது சிந்தனையைக் கலைக்கும் விதத்தில் டெலிபோன் மணி அடித்தது.

பாலு, தீவிர சிகிச்சை அளித்தும் பயனில்லாமல் இறந்து விட்டான் என்ற தகவல் அவருக்குக் கிடைத்தது! அதோடு, சாயிராமைப் பற்றி அறிந்து கொள்ளக் கூடிய கடைசி நம்பிக்கையும் மனோகருக்குப் போய்விட்டது.

அடுத்தகணம் முகம் பிரகாசமடைய, ராம்கோபாலை அழைத்து ஏதோ கட்டளையிட்டார் இன்ஸ்பெக்டர் மனோகர்.

அத்தியாயம் 5 :

## துப்பறியும் சாயிராம்!

மறுநாள் காலை எல்லா பேப்பர்களிலும் பாலுவின் மரணச் செய்தி வெளியாகி இருந்தது. அதோடு அவனது புகைப்படமும் வெளியாகி இருந்தது. பாலு கொலை செய்யப்பட வேண்டுமென்ற நோக்கத்துடன் லாரியின் முன்னால் தள்ளியதாகவும், அது கொலை என்பதை மறைக்க அவன் மீது சாராயத்தை ஊற்றி இருந்ததாகவும், ஆனால் பிரேதப் பரிசோதனையில் அவன் குடலில் சாராயம் காணப்படவில்லை என்றும் பிரசுரமாகி இருந்தது. ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்ட இரண்டு மணிநேரத்துக்கெல்லாம் அவன் இறந்து விட்டான்.

அன்று பகல் பதினொரு மணிக்கு இன்ஸ்பெக்டரைத் தேடிக் கொண்டு ஒரு இருபத்தைந்து வயது மதிக்கத்தக்க வாலிபன் வந்தான். ராம் கோபாலிடம் அவன் எந்த ஒரு விவரத்தையும் கூறமறுத்து விட்டான். இன்ஸ்பெக்டர் மனோகரிடம் தான் பேச வேண்டுமென்று கூறினான்.

எனவே அவனை சிறிது நேரம் அமர்ந்திருக்கும்படி கூறி விட்டு மனோகர் இருந்த இடத்திற்கு சென்ற ராம் கோபால் விஷயத்தைக் கூறினார். மனோகர் ஏதோ யோசனையிலிருந்தார். எனவே வேண்டா வெறுப்பாக அவனை அழைத்து வரும்படி கூறினார்.

அந்த வாலிபனைப் பார்த்ததும் மனோகருக்கு அவனை தான் ஏற்கனவே எங்கோ பார்த்திருப்பதைப்போல் தோன்றியது. ஆனால் எங்கே என்று தெரியவில்லை.

அவர் மன ஓட்டத்தைப் புரிந்து கொண்டதைப் போல் அந்த வாலிபன், ''என் பெயர் சாமிநாதம்! நான் இறந்து போன பாலுவின் நண்பன்!'' என்று கூறிவிட்டு சிறிது தயங்கியவனாய் ''உலகத்துக்குத் தான் நான் பாலுவின் நண்பனே தவிர உண்மையில் நான் பாலுவின் தம்பி!'' என்றான்.

இப்பொழுது மனோகருக்கு எல்லாம் தெளிவாகியது. அசப்பில் பார்த்தால் சாமிநாதம் பாலுவைப் போலவே இருந்தான். அவனை உட்காரும்படி கூறினார் இன்ஸ்பெக்டர் மனோகர்.

''சில நாட்களுக்கு முன்னால் பாலு என்னிடம் ஒரு கவரைக் கொடுத்துவிட்டு, தன் உயிருக்கு ஏதாவது நேர்ந்தால் ஒரு கணம் கூட தாமதியாமல் உடனே உங்களை சந்தித்து அதைக் கொடுக்கும்படி கூறினான். இன்று காலையில் பேப்பரில் வெளியாகி இருந்த செய்தியைப் படித்தபிறகு நான் பாங்கிற்கு சென்று பாதுகாப்பு பெட்டகத்தில் வைத்திருந்த இந்தக் கவரை எடுத்துக் கொண்டு நேராக இங்கே வந்தேன்'' என்று கூறிய சாமிநாதம் ஒரு கவரை மனோகரிடம் கொடுத்தான். அது அரக்கு சீல் வைக்கப்பட்டிருந்தது.

அந்தக் கவரைப் பிரித்துப் பார்த்தார் மனோகர். அதில் சில பேப்பர்கள் காணப்பட்டன. அதில் எழுதப்பட்டிருந்த விஷயங்களைப் படிக்கப்படிக்க மனோகரின் முகம் ஆச்சரியத்துடன் தோற்றமளித்தது. அவரது முகபாவங்களையே கவனித்துக் கொண்டிருந்தான் சாமிநாதம்.

''இதைத் தவிர வேறு ஏதாவது விஷயத்தைப் பற்றி பாலு உன்னிடம் கூறினானா?'' என்று கேட்டார் இன்ஸ்பெக்டர் மனோகர்.

''இரண்டொரு விஷயங்களைப் பற்றி என்னிடம் கூறினான். அவற்றைப் பற்றி விசாரிக்கும்படி சொன்னான். அதன்படி நான் விசாரித்ததில் சில உண்மைகளைக் கண்டுபிடித்தேன்!'' என்று கூறிய சாமிநாதம், ''திருட்டுப் போன வைரநெக்லஸ் பாலுவின் ஜாகைக்கு வேண்டுமென்றே கொண்டு வந்து வைக்கப்பட்டது தான். ஆனால் அவனது ஜாகைப்பூட்டு உடைக்கப்படவில்லை. அது மாற்று சாவியால் திறக்கப்பட்டிருந்தது. தனது ஜாகையை வேறு யாரும் திறந்தால் தெரியும்படி ஏதோ ஒரு அடையாளம் வைத்திருந்தான் பாலு. அன்றையதினம் அவன் தனது ஜாகையைத் திறந்தபோது வேறு யாரோ தனக்கு முன்னால் உள்ளே சென்றிருக்கிறார்கள்

என்பதைக் கண்டுபிடித்து விட்டான். ஆனால் போலீஸாரிடம் அவன் அதைக் கூறியபோது அவர்கள் அதை நம்பவில்லை. ஏனென்றால் அந்த உண்மையை அவனால் நிரூபிக்க முடியவில்லை. அதனால் அவன் மூன்று வருஷங்கள் சிறையில் அவதிப்பட நேர்ந்தது. அந்த அளவுக்கு மாற்று சாவி அகல்யாவிடம்தான் இருந்தது. ஆனால் அவள் அந்த ஜாகையைத் திறக்கவில்லை என்று தெரிகிறது. ஏனென்றால் அவளுக்கு பானுவின் அடையாளமுறை தெரியும்!'' என்றான்.

''பானு சிறைக்குச் சென்றதை நீ அவளிடம் கூறவில்லையா?'' என்றார் டாக்டர் மனோகர்.

''நான் அகல்யாவை நேரில் சந்தித்ததில்லை. அதோடு தப்பித்தவறி சந்திக்க நேர்ந்தால் அவளிடம் உண்மையைக் கூற வேண்டாமென்று பானு [illegible]ந்தான், அதனால் நான் நன்றாக விசாரித்ததில் பானு வீட்டிற்கு செல்வதற்கு சற்று முன்னால் ஒரு கறுப்பு நிறக் கார் வந்து வாசலில் நின்றதாகவும், அதிலிருந்து இறங்கிய ஒரு நபர் சாவியின் உதவியால் பூட்டைத் திறந்ததாகவும் கண்டுபிடித்தேன். இதைக்கண்ணால் கண்ட ஒரு பத்து வயது சிறுமி என்னிடம் கூறினாள். ஆனால் அவளது தாயார் அந்த சிறுமியை கோர்ட்டில் சாட்சி சொல்ல அனுப்ப முடியாதென்று மறுத்து விட்டதோடு மட்டுமல்லாமல் அவளை அன்றிரவே வேறு எங்கோ அனுப்பி விட்டாள். அதனால் என்னால் ஒன்றும் செய்ய முடியவில்லை. சிறுமி கூறிய அடையாளங்களிலிருந்து அந்த மனிதர் கருணாகரன் தான் என்று முடிவு கட்டினேன்'' என்றான் சாயிராம்.

''எப்படி?'' என்று கேட்டார் மனோகர்,

'''அந்த சிறுமி கூறிய அடையாளம் அவ்வளவு நன்றாக அவருக்குப் பொருந்தியது. அதோடு வந்தவர் இலேசாக நொண்டினார் என்றும் அவள் கூறினாள், கருணாகரன் அப்படி நொண்டியபடி தான் நடப்பார். அதோடு பானுவுக்கு வேறு யாரும் விரோதிகள் கிடையாது.''

'ஆனால் அப்பொழுது இருந்த சாட்சிகள் அனைத்தும் பானுவுக்கு எதிராக இருந்ததால் அவன் சிறை செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டது, முதல் குற்றம் என்றதால் அவனுக்கு தண்டனை குறைவாகக் கிடைத்தது.'' என்றார் மனோகர்.]

''அந்த நெக்லஸ் திருடப்பட்ட போதிலும், அதைத்திருடியவன் கருணாகரனிடம் விற்க வந்தான். பானுவை எப்படியா

வது ஒழித்துக் கட்டவேண்டுமென்று பார்த்துக் கொண்டிருந்த கருணாகரனுக்கு அந்த நகை நன்குகப்பயன்பட்டது'' என்றான் சாயிராம்.

''நீ எதற்காக ராஜுவின் நண்பன் என்று சொல்லிக் கொள்கிறாய்?''

''எனக்கு அதில் விருப்பம் இல்லாத போதிலும் ராஜு தான், என் உயிருக்கு ஏதாவது ஆபத்து ஏற்படக் கூடுமென்று நினைத்து என்னை அவனது நண்பன் என்று கூறிக்கொள்ளும் படியும், வேறு ஜாகையில் வசிக்கும்படியும் கூறினான். அதனால் நான் தான் அதற்குக் கட்டுபடவேண்டியிருந்தது''

''நீ சரியான சமயத்தில் வந்து உதவி புரிந்திருக்கிறாய், சாயிராம்! உனக்கு நான் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்'' என்றார் மனோகர்.

கிட்டத்தட்ட ஐம்பது வயதை அடைந்த இன்ஸ்பெக்டர் மனோகர் அம்மாதிரி கூறியதும், சாயிராம் தர்மசங்கடத்தோடு நாற்காலியில் நெளிந்தபடி, ''அப்படி நான் ஒன்றும் பிரமாத மாக செய்துவிடவில்லை சார்! என் அண்ணனைக் கொலை செய்தவர்களை எப்படியும் பிடித்து சட்டத்தின் முன்னால் நிறுத்த வேண்டுமென்பதே என் ஆவல். அதற்காக நான் எதுவேண்டுமானாலும் செய்யத் தயாராக இருக்கிறேன்'' என்றான்.

''நீ மறுபடியும் இரண்டு நாட்கள் கழித்து வந்து என்னைப் பார், சாயிராம்!'' என்று மனோகர் கூறியதும், சாயிராம் விடை பெற்று சென்றான்.

அவன் சென்ற சில நிமிஷங்களுக்கெல்லாம் பலரோடு தொடர்பு கொண்டு பல கட்டளைகளைப் பிறப்பித்தார் மனோகர். பிறகு சாயிராம் கொடுத்த கவரிலிருந்த காகிதங்களை மீண்டும் ஒரு முறை படித்தார், பிறகு அவற்றை ராம்கோபாலிடம் கொடுத்தார்.

சப்-இன்ஸ்பெக்டர் ராம்கோபால் அவற்றை வாங்கி பத்திரமாக வைத்துக் கொண்டார்.

''கருணாகரன் வீட்டை சோதனையிட அவசர வாரண்டுக்கு ஏற்பாடு செய்திருக்கிறேன், ராம்கோபால்! இன்னும் கொஞ்ச நேரத்தில் நாம் அங்கே செல்கிறோம்'' என்றார் மனோகர்.

அத்தியாயம் : 6

# கடைசி அத்தியாயம்

கருணாகரனின் ஆபீஸ் அறையை சோதனை செய்த போது, அவரது நாற்காலிக்கருகில் ஒரு ரகசிய இரும்புப் பெட்டி தரையில் பதிக்கப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. அதற்குள்ளிருந்த பல தஸ்தாவேஜுகள் கைப்பற்றப்பட்டன. அவற்றில் அடங்கி இருந்த சில விஷயங்கள் கருணாகரனை சிறையில் தள்ள போதுமானவையாக இருந்தன.

கருணாகரனைக் கைது செய்து ஜீப்பில் ஏற்றிய பின் வேலைக்காரர்களை விசாரித்ததில் அவருக்கு அடையாறுக்கருகில் ஒரு பழைய பங்களா இருப்பது தெரியவந்தது. சாரங்கன் அதற்கு வழிகாட்டினான்.

கருணாகரனை ''லாக்-அப்''பில் தள்ளிவிட்டு இரண்டு போலீஸ் வீரர்களோடு அடையாறு பங்களாவிற்கு விரைந்தார் மனோகர். அங்கிருந்தவர்களை எல்லாம் கைது செய்து அங்கிருந்த பல சாமி சிலைகளையும் கைப்பற்றினார் மனோகர்.

அந்த சிலைகளின் மதிப்பு பல லட்சமாகும். தென்னாட்டில் பல இடங்களில் அந்தச் சிலைகள் திருடப்பட்டவையாகும்! அவற்றை வெளிநாடுகளுக்கு விற்பதற்காக கருணாகரன் வைத்திருந்தார் என்று தெரிந்தது.

இரண்டு நாட்களுக்குப் பின் கருணாகரனின் பங்களா வரவேற்பறையில் பவானி, அவளது கணவன் சங்கர், ராம்கோபால், மனோகர் ஆகியோர் கூடினார்கள். சாரங்கன் எல்லோருக்கும் தேனீரும் சிற்றுண்டியும் வழங்கினான்.

எல்லோரும் இன்ஸ்பெக்டர் மனோகர் என்ன சொல்லப் போகிறார் என்று ஆவலோடு கவனித்துக்கொண்டிருந்தார்கள். ஆனால் மனோகர் சாவகாசமாக சிற்றுண்டி அருந்திக் கொண்டிருந்தார். பிறகு மெதுவாக தேனீரைப் பருகினார். அதைப் பார்க்க எல்லோருக்கும் எரிச்சல் ஏற்பட்ட போதிலும் பேசாமலிருக்க வேண்டி இருந்தது.

கடைசியில் அவர் பேச ஆரம்பித்தார்.

''பவானி! நான் கருணாகரனைப் பற்றி சொல்லப் போகும் விஷயம் உனக்கு அதிர்ச்சியைத் தரக்கூடும்'' என்று பீடிகையுடன் ஆரம்பித்த இன்ஸ்பெக்டர் மனோகர், ''நீ அவருடைய

தங்கையின் பெண் என்று சொல்லி அவர் உலகத்தை ஏமாற்றி வந்திருக்கிறார். ஆனால் உண்மை அது வல்ல! நீ அவருக்கும் அவரது மனைவி தமயந்திக்கும் பிறந்த பெண்!''என்றார்.

''என்ன!'' என்று ஆச்சர்யத்துடன் வினவினாள் பவானி. அவள் கண்கள் மனோகரையே வியப்புடன் நோக்கின.

''என் மனைவி பவானி, அவருடைய மகள் என்று யாருக்குமே தெரியாது. யாருமே அப்படி ஒரு யூகம் கூட செய்யவில்லை'' என்றான் சங்கர்.

''ஆமாம் அதில் அவர் ரொம்ப ஜாக்கிரதையாக இருந்தார். உண்மையில் அகல்யாதான் அவரது தங்கையின் பெண். இதை. அவள் பிறந்த ஆஸ்பத்திரியிலேயே விசாரித்துத் தெரிந்துகொண்டு விட்டோம்.

இந்த சந்தேகத்தை முதன் முதலில்தோற்றுவித்தது.கருணாகரனின் ரகசிய இரும்புப் பெட்டியில் காணப்பட்ட தஸ்தாவேஜிகள் தான். ஒரு சமயம் அவற்றை அவர் எடுத்து பார்க்கும் பொழுது அகல்யா அங்கு சென்றிருக்கிறாள், அதனால் அவளை மிகவும் கோபித்துக் கொண்டிருக்கிறார். சிறுவயதிலிருந்தே குடும்ப வாழ்வில் அவளுக்கு நாட்டம் ஏற்படா வண்ணம் அவள் மனதை திசைதிருப்பி துறவறத்தில் ஈடுபடுத்த முயன்று வந்திருக்கிறார் கருணாகரன். அகல்யாவும் அப்படியே வாழ்ந்து வந்திருக்கிறாள். ஆனால் பாலு அவள் வாழ்வில் குறுக்கிட்டபோது அவளுக்கு முதன் முதலில் திருமணம் செய்து கொள்ள வேண்டுமென்ற எண்ணம் அவளுக்கு ஏற்பட்டிருக்கிறது. பவானிக்குத் திருமணம் நடத்திவிட்டதையும் தன் தந்தை தன்னைத் திருமணம் செய்துக்கொள்ளக்கூடாதென்று துறவறத்தில் ஈடுபடுத்த முயற்சிகள் எடுத்துக் கொண்டிருப்பது பற்றியும் அவள் பாலுவிடம் கூறி இருக்கிறாள். பாலுவுக்கு முதல் சந்தேகம் அப்பொழுது தான் தோன்றி இருக்கிறது. ஆனால் அதைப்பற்றி அவனால் விசாரித்து உண்மைகளை கண்டுபிடிக்க முடியவில்லை.

''ஆனால் அவனுக்கு வேறொரு தகவல் கிடைத்தது. கருணாகரன் வெளிநாடுகளுக்கு சிலைகளைக் கடத்தும் தொழில் செய்து வருகிறார் என்பது தான், அது! சாமிராமிடம் கொடுத்து பத்திரப்படுத்த சொன்ன கவரில் இதைப்பற்றிய குறிப்பு இருந்தது'' என்று நிறுத்தினார் மனோகர்.

''ஆனால் அவர் எதற்காக அகல்யாவை அப்படி வளர்த்தார்?'' என்று ஆவலோடு கேட்டாள் பவானி.

''அகல்யா தனது பெண் என்று அவர் உலகுக்குக் கூறிய போதிலும் என்ருவது ஒரு நாள் உண்மை வெளியாகிவிடலாம் என்று அவர் கருதினர். அகல்யாவுக்கு திருமணமாகி குழந்தையும் பிறந்துவிட்டால் சொத்து – அவர் தங்கைக்கு யாரோ தூரத்து உறவினர் எழுதி வைத்த ஐந்து லட்ச ரூபாய் சொத்து இருந்தது — முழுவதும் அந்தக் குழந்தைக்குப் போய் விடுமே என்று அவர் எண்ணினர். அதனல் தான் அவளை அப்படி வளர்த்தார். ஆனல் விதி வேறு மாதிரி இருந்ததால் பாலுவை அவள் விரும்பினள். இதைக் கண்டுபிடித்துவிட்ட கருணாகரன், பாலுவைப் பற்றி இல்லாததும் பொல்லாதது மாகக் கூறி அகல்யாவின் மனதை மாற்றமுயற்சி செய்தார். ஆனல் அவள் கேட்கவில்லை. அதனல் ஆத்திரமடைந்த கருணாகரன் பொய் கேஸ் ஜோடித்து அவனை சிறையில் தள்ளினர். சிறை சென்றவனை அகல்யா மணக்க மாட்டாள் என்று அவர் நினைத்தார். ஆனல் அந்த நினைப்பும் பொய் யாகி விட்டது.

''அதனல் ஆத்திரமடைந்த கருணாகரன் அவளைக் கொலை செய்ய முடிவுக் கட்டினர். அந்தக் கொலையை அவருடைய கையாளான மாரிசாமி செய்தான். பாலுவை சந்திக்கத்தான், பவானியின் வீட்டிற்குப் போவதாகக் கூறிவிட்டு அகல்யா செல்கிருள் என்பதைப் புரிந்து கொண்ட கருணாகரன், பாலு வின் உயிருக்கு ஆபத்து என்று கூறி அவளைக் காரில் அழைத் துச் சென்று அடையாறு பங்களாவில் அடைத்து வைக்கும்படி மாரிசாமியிடம் கூறி இருக்கிருர்.

''பாலுவையும் தீர்த்துக்கட்ட வேண்டுமென்ற எண்ணம் அவருக்கு ஏற்பட்டது. அதனல் அவனையும் அடையாறு பங்களாவில் அடைக்கும்படி கூறினர். ஏதோ டாக்சி என்று எண்ணி ஏறந்த பாலுவும் கடத்தப்பட்டான்.

''அடையாறு பங்களாவில் அகல்யாவை சந்தித்திருக் கிருர் கருணாகரன். அங்கு அவளை மிரட்டி இருக்கிருர். உண்மையைத் தெரிந்து கொண்ட அகல்யா அவ்வறை வாயில் வந்தபடி ஏசி இருக்கிருள். இரண்டு நாட்களாகத் தன்னை அடைத்து வைத்ததை போலீஸில் கூறி விடுவதாக மிரட்டி இருக்கிருள்.

''உடனே அவளுக்கு பலவந்தமாக மயக்கமருந்து ஊசி மூலம் செலுத்தப்பட்டது. அன்று நள்ளிரவு அகல்யாவை மாரிசாமியும் அவன் தோழன் சங்கிலிக்கருப்பனும் தூக்கிச் சென்றுர்கள். இருவரும் மீனவர்களைப் போல் மாறுவேடம்

அணிந்திருந்தார்கள். அகல்யாவை கட்டுமரத்தில் படுக்க வைத்து இருண்டிருக்கும் கடலில் ஆழமான பகுதியை நோக்கி சென்றார்கள். ஆனால் பாதிதூரம் செல்லும் பொழுதே அகல்யாவுக்கு மயக்கம் தெளிந்துவிட்டது. அவள் கூச்சல் போட ஆரம்பித்து விட்டாள்.

"நட்டநடு நிசியானதால் யாருக்குமே அவள்குரல் கேட்கவில்லை. அலைகளின் சப்தத்தோடு அவளது குரலும் கலந்து விட்டது. அவள் இருவரையும் தன்னால் முடிந்தவரை தாக்கி இருக்கிறாள். அகல்யாவை சமாளிக்கமுடியாதென்று தோன்றியதும் மாரிசாமி தனது இடுப்பில் சொருகி இருந்த கத்தியை எடுத்து மூன்று முறை குத்தி இருக்கிறான். அதில் அகல்யா இறந்து விட்டாள். ஆனால் அவள் சாகும்போது மாரிசாமியின் தலைமுடியை கெட்டியாகப் பிடித்துக்கொண்டிருந்தாள். அதை கவனிக்காமல் அப்பிணத்தைக் கடலில் தள்ளினான் சங்கிலிக் கருப்பன்.

"அவள் கையை திறக்கமுடியாமல் போனதால் அவள் கையை வெட்டிவிட்டான் மாரிசாமி. பிறகு சங்கிலிக் கருப்பனின் யோசனைப்படி தன் தலை மயிரை வெட்டி அவள் கையை விலக்கி கடலில் வீசி எறிந்தான். இருவரும் கத்தியையும், அகல்யாவின் தோளைத் துண்டிக்கப் பயன்பட்ட அரிவாளையும் கடலில் வீசிவிட்டு இருட்டோடு இருட்டாக திரும்பி விட்டார்கள். மாரிசாமி கூறிய மணிகணக்கிற்கும், பிரேத பரிசோதனை செய்த டாக்டர் கூறிய எட்டு மணி நேரம்அல்ல பனிரெண்டு மணி நேரம் பிணம் ஊறி இருக்க வேண்டுமென்கிற தகவலும் ஒன்றுக்கொன்று பொருந்துகிறது." என்றுநிறுத்தினார் மனோகர்.

"என்ன பயங்கரம்!" என்று உடலை சிலிர்த்துக் கொண்டாள் பவானி.

"அகல்யாவின் புகைப்படத்தை பேப்பரில் கண்டதும் தன், தற்காப்புக்காக அவளைக் காணவில்லை என்று என்னிடம் புகார் செய்தார் கருணாகரன். அதோடு கூட பாலு தான் கொலை செய்திருக்கக்கூடுமென்று என் மனதில் ஒரு சந்தேகத்தையும் தோற்றுவித்தார். பாலு மாயமாய் மறைந்து விட்டது வேறு அதே எண்ணத்தைத் தோற்றுவித்தது.

"ஆனால் திடீரென்று அவன் தப்பியோடிவரும் போது வேண்டுமென்றே அவனைக் கொலை செய்ய முயற்சி செய்தார்கள் சங்கிலிக்கருப்பனும் மாரிசாமியும். ஆனால் என்னிடம் வாக்குமூலம் கொடுக்கும் வரையில் அவன் உயிரோடு இருந்தான், பிறகு தான் சாமிராவின் உதவியால் சில தகவல்கள்

கிடைத்தன. அவற்றை ஆதாரமாகக் கொண்டு விசாரித்த தில் எல்லா உண்மைகளும் வெளிவர ஆரம்பித்தன.

"இறக்கும் வரையில் அகல்யா கொலைசெய்யப்பட்டுவிட்ட விஷயம் பானுவுக்குத் தெரியாது. செய்யாத குற்றத்துக்காக சிறை தண்டனை அனுபவித்தது, பத்தாதென்று அவள் தன் உயிரையும் இழக்க நேர்ந்தது!" என்றார் மனோகர்.

"அவர் இவ்வளவு கொடியவரென்று நான் எதிர்பார்க்க வே இல்லை. அவர் இப்பொழுது என் தந்தை என்று தெரியும் போது எனக்கு அவமானம் தாங்கமுடியவில்லை" என்று விம்மி னாள் பவானி.

"உன் தந்தை அப்படிப்பட்டவர் என்பதனால் நீ அவரை வெறுக்கக்கூடாது, பவானி! அவர் உன் நன்மைக்காகத்தான் அப்படி செய்திருக்கிறார். தன் மகளுக்கு எல்லா சொத்தும் கிடைக்க வேண்டும் என்பதற்காகத் தானே இப்படிப்பட்ட கோரக் கொலைகளைச் செய்யவும் தூண்டுகோலாக இருந்திருக் கிறார்" என்று அவளை சமாதானப்படுத்தும் நோக்கத்துடன் கூறினான் சங்கர்.

"ஐயோ! அந்தப் பணம் எனக்கு வேண்டவே வேண் டாம்! என் தந்தை தானாக சம்பாதித்து சேர்த்த பணம் கூட எனக்கு வேண்டாம். உங்கள் வருமானம் மட்டுமே எனக்குப் போதும். கறை படிந்த பணத்தை நான் கையால் தொடக் கூட மாட்டேன்" என்று திட்டவட்டமான குரலில் கூறினாள் பவானி.

"கருணாகரனுக்கு என்ன தண்டனை கிடைக்கும்?" என்று கேட்டான் சாயிராம்.

"தூக்கு தண்டனை கிடைக்கலாம். அல்லது ஆயுள் தண் டனையாவது கிடைக்கும். அவர் சிலை கடத்தல் வேறு செய்தி ருக்கிறார். அதனால் அவர் இந்த வழக்கிலிருந்து தப்பவே முடி

யாது. மாரிசாமிக்கும் சங்கிலிக் கருப்பனுக்கும் அதே தண்டனை கிடைக்கும். இந்த வீட்டிலிருக்கும் வேலைக்காரர்களுக்கும் இந்தக் கொலைகளுக்கும் சம்பந்தமில்லை. ஆனால் அடையாறு வீட்டில் கைது செய்யப்பட்டவர்களுக்கெல்லாம் ஒரு விதத்தில் இல்லாவிட்டால் இன்னொரு விதத்தில் சம்பந்தமிருப்பதால் எல்லோரும் தண்டனை அடைவது நிச்சயம்'' என்று கூறியபடி எழுந்தார் மனேகர்.

அவருடன் சாமிராமும் ராம்கோபாலும் கிளம்பினார்கள்.

''உண்மைகள் உறங்கிக் கிடந்து, சத்தியத்திற்கும், தர்மத்திற்கும் சோதனை ஏற்பட்ட, இந்த வீட்டில் ஒருகணம் கூட இருக்கமுடியாது!'' என்று கூறியபடி பவானி சங்கரை அழைத்துக் கொண்டு கிளம்பினாள்.

COMICS PDF TIMES

# பாதை மாறிய [illegible]

(கல்பனா திருநெல்வேலி)

"லதா! லதா!!"

விஜயாபுவனத்தில் விஜயாவின் குரல் கணீரென ஒலித்துக் கொண்டிருந்தது. யாரிந்த விஜயா? இன்றைய சினிமா உலகில் ஈடு இணையற்ற கதை - வசனகர்த்தா. எழுத்துலக மேதை. சிந்தனை சிற்பி. ஆனால் அன்று.

பி. ஏ. வரைப் படித்திருந்த ஏழைப் பெண். வேலை கேட்டு அவள் ஏறாத படிகளில்லை. பலன், அவள் கால்களுக்கு கிடைத்த வலிதான். தனக்கிருந்த பேச்சுத் திறமையையும், கல்லூரித் தமிழ் மன்றங்களில் நடந்த போட்டிகளில் கலந்து கொண்டு பெற்ற அனுபவத்தையும் உபயோகித்து கதைகளும், கட்டுரைகளும், நாவல்களும், நாடகங்களும் எழுதினாள். எழுதியவைகளைத் தன் கைகளாலேயே பல பத்திரிகைகளுக்கு அனுப்பி வைத்தாள். அவைகள் யாவும் அவள் அனுப்பியதை விட இரட்டிப்பு வேகத்தில் திரும்பி வந்து அவளையே அடைந்தன. அவள் எழுதிய எழுத்துக்களுக்கு அவளிடம் தான் எத்தனை பிரியம்.

அவளுடைய இளமைக்கோ அல்லது அவளது அழகிற்கோ எழுத்துலகம் மதிப்பளிக்கவில்லை. ஆனால் அதையெல்லாம் விஜயா பொருட்படுத்தவில்லை. தனக்குக் கிடைத்த தோல்விகளை வெற்றியின் முதற்படியாகக் கொண்டு எழுதினாள். அவளது எழுத்துக்களிலிருந்த அழகையும், ஆழத்தையும் எழுத்துலகம் புரிந்து கொண்டது. அதிர்ஷ்ட தேவதையும் அவளைத் தன் கண் கொண்டு நோக்கினாள். அதிலிருந்து முடிவில்லாத புகழேணியின் படிகளில் ஏறலானாள். கதை வசன கர்த்தாவாக சினிமா உலகிலும் நுழைந்தாள். அவளது வாழ்க்கை உயர்ந்தது. பங்களாக்கள் பலவற்றிற்குச் சொந்தக் காரியானாள். வெளியே கிளம்பிச் செல்ல பலவகை உயர்ந்த கார்கள் இருந்தன. கூப்பிட்ட குரலுக்கு ஓடிவந்து சேவை புரிய பல சேவகர்கள். இப்பேர்ப்பட்ட சுக போக வாழ்வை எழுத்துலகம் அவளுக்கு அளித்தது. ஆனால் இன்று அவள் எழுதுவதில்லை, என்ன? எழுதுவதில்லையா? ஆம் எழுதுவதில்லை. பின் என்ன செய்கிறாள்? மஞ்சத்தின் சுகத்திலே சாய்ந்து கொண்டு கதைகளையும், வசனங்களையும் கூறிக் கொண்டே போவாள். அவள் கூறுபவைகளை வெல

லாம் முதலில் சுருக்கெழுத்தில் எழுதிக் கொண்டு பின்பு முழு வுருவம் கொடுக்க ஒரு ஸ்டெனே. ஆம் அவள் பெயர்தான் லதா. அவளைத்தான் அழைக்கிருள் விஜயா. விஜயாவின் குரல் கேட்ட லதா ஓடி வருகிருள்

''என்ன அம்மா? எதற்காக அழைத்தீர்கள்''?

''என்ன செய்து கொண்டிருக்கிருய்?''

''மன்மத லீலாவுக்குப் பிரதி எடுத்துக் கொண்டிருக்கிறேன்''

''அந்த மன்மதன் உன் டைப் மெஷினேடு சிறிது நேரம் லீலைகள் புரியட்டும்: அதற்குள் ஒரு முக்கியமான வேலை உள்ளது'.

''என்ன வேலை அம்மா?''

''இப்படி உட்கார்; லட்சுமி பிலிம்ஸ் படக் கம்பெனியை உனக்குத் தெரியுமா?''

''தெரியுமாவா? நன்ருகக் கேட்டீர்கள். புராணப் படங்கள் பல எடுத்து இன்று சினிமா உலகில் கொடிகட்டிப் பறப்பவர்கள் அவர்களாயிற்றே!''

''ஆம் அவர்கள் தான்; நீ இப்பொழுது பிரதி எடுத்துக் கொண்டிருக்கும் மன்மத லீலாவைப் படமாக்கும் உரிமையை அவர்கள் கேட்டார்கள். ஆனல் நான் மறுத்து விட்டேன். ஆனல் அவர்கள் மிகவும் வற்புறுத்தி கேட்டதனுல் இக் கதையை படமாக்கும் உரிமையை அவர்களுக்குக் கொடுக்க சம்மதித்து உள்ளேன். இது விஷயமாகப் பேசி அக்ரிமெண்டில் கையெழுத்துப் போட நாளை லட்சுமி பிலிம்ஸ் முதலாளியின் பெர்சனல் செகரெட்டரி நரசிம்மன் நம்முடைய காட்டுப் பங்களாவுக்கு வருகிருர். அவரை நான்தான் சந்திக்க எண்ணியிருந்தேன். ஆனல் இதை விட முக்கியமான வேலை ஒன்று இப்பொழுது உள்ளதால் என் பொருட்டு நீ சென்று நரசிம்மனைச் சந்தித்து ஒப்பந்தத்தைப் பேசி முடித்து அட்வான்ஸ் பெற்றுக் கொண்டு வந்து சேர்!''

''அம்மா! என்னைப் போய் இவ்வளவு பெரிய வேலைக்கு அனுப்புகிறீர்களே.

''என்னைப் பொருத்த வரை இவையெல்லாம் மிகச் சாதாரணமானவை; அன்று நான் எழுதிய கதைகளுடன் இந்த மாதிரி படமுதலாளிகள் எத்தனை பேரைப் போய் பார்த்தேன். அவர்களது வீடுகளுக்கும், ஸ்டூடியோக்களுக்கும் நடந்தது தான் மிச்சம். ஆனல் இன்று அன்று என்னை எட்டி உதைத்த

கால்களெல்லாம் என்னுடைய எழுத்துக்காக என் வீடு தேடி வந்து பணத்தைக் கொட்டி வரிசையில் நிற்கின்றன. சரி அந்தக் கதையெல்லாம் இப்போது எதற்கு? ஒரு முக்கியமான விஷயம். அந்த நரசிம்மன் ஒரு மோசமான பேர்வழி. அவனை முன்பே எனக்குத் தெரியும். பெண்களெல்லாம் அவனது கைப் பொம்மைகள் என்று எண்ணும் குணமுடையவன்; அவனிடம் எச்சரிக்கையோடு பழகு.''

''ஒரு பெண்ணினுடைய சம்மதமில்லாமல் எவராயிருந்தாலும் அவனால் எதுவும் செய்யமுடியாது. மேலும் என் குணம் தாங்கள் அறியாததல்ல; இந்த நரசிம்மனல்ல அவனைப் படைத்த ஆண்டவனே வந்தாலும் நேர்மைக்குப் புறம்பாக நடக்க இடம் தரமாட்டேன்''.

''சரி. நாளை மதியம் மூன்று மணியளவில் நம் காட்டுப் பங்களாவிற்குப் போ. விஷயத்தை முடித்துக் கொண்டு ஆறு மணிக்குப் பின் அங்கிருந்து கிளம்பு. ஆறு மணிக்கு மேல் அங்கே தங்கியிருக்காதே. வரும்பொழுது குறுக்குப்பாதையில் வா. ஓ! உனக்கு நம் காட்டுப் பங்களாவிலிருந்து வரும் குறுக்குப் பாதை தெரியாதல்லவா? எனது படுக்கையறையிலிருக்கும் ஸ்டீல் பீரோவின் மேல் தட்டிலிருக்கும் பைலை எடுத்து வா!''

விஜயா கூறிய பைலை எடுத்துவர லதா அவளது படுக்கையறைக்குச் சென்றாள். விஜயா ஏதோ பெரிய சிந்தனையிலாழ்ந்தாள். லதா திரும்பிய பின் தான் விஜயாவுக்குச் சுய உணர்வு திரும்பியது. லதா கொண்டு வந்த பைலைப் பிரித்து அதன் முதற்பக்கத்திலுள்ள மேப் ஒன்றைப் பார்த்தபடி கூறினாள்.

''லதா! நமது காட்டுப்பங்களாவின் பின்புறமிருந்து ஒரு செம்மண் சாலை கிளம்பும். அதன் வழியே வந்தால் இரண்டு கிலோ மீட்டர் கழித்து ஒரு சிறிய குளமும் மிகப்பெரிய ஆல மரமும் இருக்கும். அதற்கு அருகில் சாலை இரண்டாகப் பிரியும். அதில் நீ இடதுபுறமாகத் திரும்பி கொஞ்ச தூரம் வந்தால் மெயின் ரோட்டை வந்தடையலாம். நான் கூறிய வழியை உன்னுடைய ஷார்ட் ஹேண்ட் நோட்டில் குறித்து வைத்துக் கொள். போகும்போது கைச்செலவுக்குக் கொஞ்சம் பணமும் கொண்டு செல். இம்பாலாவில் தான் போகவேண்டியிருப்பதால் நீ நம்முடைய அம்பாஸிடர் காரை எடுத்துக் கொண்டு போ!''

''சரி அம்மா! நீங்கள் கூறியபடியே நடந்து கொள்கிறேன்''.

''இந்த பையை பழையபடி இருந்த இடத்தில் கொண்டு போய் வைத்துவிடு''

பையை எடுத்துக் கொண்டு லதா விஜயாவின் படுக்கை யறைக்குச் சென்றாள். பையை பீரோவில் வைத்துப் பூட்டிவிட்டு திரும்பும்போது வெளியே இம்பாலா வெகு வேகமாகக் கிளம்பிப் போய்க் கொண்டிருப்பதைப்பார்த்தாள். தனது எஜமானி தன்னிடம் கூட சொல்லிக் கொள்ளாமல் எங்கு அவ்வளவு வேகமாகப் போகிறாள் என்று எண்ணிக் கொண்டே தன்னுடைய ஷார்ட் ஹேண்ட் நோட்டைத் தேடினாள். அது வைத்த இடத்தில் இல்லாமலிருந்ததோடு அந்த அறையிலே கூட எங்குமில்லை. லதாவுக்குப் பெரும் திகிலாகி விட்டது, தனது நோட்டை யார் எடுத்திருப்பார்கள் என்று அவளால் உணர்ந்து கொள்ள முடியவில்லை. அவளது கவலையெல்லாம் அந்த நோட்டில் தானே காட்டுப்பங்களாவிலிருந்து திரும்பும் குறுக்குவழியைத் தான் குறித்து வைத்தோமே! இப்பொழுது அது இல்லாமல் என்ன செய்வது என்பது தான், அதற்குள் விஜயாவின் படுக்கையறைப் பீரோவிலுள்ள மேப் ஞாபகம் வரவே தனது கவலைகளை மறந்தவளாய் மன்மத லீலாவைப் பிரதி எடுக்கும் வேலையைத்தொடர்ந்து செய்துவிட்டு படுக்கச் சென்றாள்.

மறுநாள் மதியம் இரண்டு மணிக்கு லதா அம்பாஸிடர் காரில் விஜயா பவனத்திலிருந்து புறப்பட்டாள். புறப்படும் பொழுது திரும்பி குறுக்கு வழியில் வருவதற்கு வழிகாட்ட விஜயாவினுடைய படுக்கையறைப் பையிலிருந்த மேப்பைப் பார்த்து அதிலிருந்த வழிகளை அப்படியே குறித்துக் கொண்டாள்.

லதா காட்டுப் பங்களாவை வந்தடைவதற்கு முன்பே நரசிம்மன் வந்து விட்டான். விஜயாவை எதிர்பார்த்துக் கொண்டிருந்த நரசிம்மனுக்கு லதாவின் வரவு ஓரளவு ஏமாற்றத்தை தந்தாலும் அதை அவன் வெளிக்காட்டாது சிரித்தமுகத்துடன் லதாவை வரவேற்றான். இருவரும் பட விஷயமாக சில மணி நேரம் பேசிக் கொண்டிருந்தார்கள். முடிவில் அக்ரிமெண்டில் லட்சுமி பிலிம்ஸ் சார்பில் நரசிம்மனும், விஜயா சார்பில் லதாவும் கையெழுத்திட்டனர். அட்வான்ஸாக சில ஆயிரங்கள் நரசிம்மனிடமிருந்து லதாவிடம் இடம் பெயர்ந்தன. முடிவில் நரசிம்மன் இன்முகத்துடன் விடை பெற்றுக் கொண்டு சென்றான். லதாவிற்கு இரட்டிப்பு மகிழ்ச்சி. ஒன்று தான் வந்த காரியம் இவ்வளவு சுலபமாக முடிந்தது. மற்றொன்று விஜயா கூறியபடி நரசிம்மன் எந்த விதமான தீய வழிகளிலும்

செல்லாததே லதாவின் மகிழ்ச்சிக்குக் காரணம். லதா கடி காரத்தைப் பார்த்தாள். மணி ஐந்தரை ஆகியிருந்தது. விஜயாவோ ஆறு மணிக்குத்தான் அங்கிருந்து கிளம்பச் சொல்லியிருந்தாள். லதா அரை மணி நேரத்தை அந்தக் காட்டுப் பங்களாவில் விணேகழித்து விட்டுசரியாக ஆறு மணிக்கு தான் வந்த அம்பாஸிடர் காரில் ஏறி கிளம்பினுள். காட்டுப் பங்களாவின் பின்புறமுள்ள செம்மண் சாலை வழியாகக் கார் ஒடிக் கொண்டிருந்தது. அதோடு சூரியனும் மேற்கே வெகு வேகமாக ஒடிக் கொண்டிருந்தது மறைந்து கொள்ள.

மேகங்கள் கறுத்து உறும ஆரம்பித்தன. மின்னல்கள் மின்னின. இடி இடித்தது. லதா சரியாக இரண்டு கிலோ மீட்டர் தூரம் வந்து அந்த ஆலமரத்தையும் குளத்தையும் அடைந்த போது மழை லேசாக தூற ஆரம்பித்து விட்டது, காரிலிருந்து கொண்டே ரோட்டைக் கவனித்தாள். இடது புறம் ஒன்றுமாக வலது புறம் ஒன்றுமாக ரோடு பிரிந்திருந் திருந்தது இடது புறம் செல்லும் பாதை மிகவும் நேர்த்தியாகவும்' கப்பி போட்டு ஒரே சீராகவும் அமைக்கப் பட்டிருந்தது. வலது புறம் செல்லும்.பாதை காடுமுரடாக குண்டும் குழியுமாக இருந்தது. விஜயா சொல்லியது லதாவுக்கு ஞாபகம் மிகத் தெளிவாக இருந்தது. அவள் வலது புறம் திரும்பவே சொல்ல வில்லை,

இருந்த போதிலும் தனக்குள்ள சந்தேகத்தை நிவர்த்தி செய்து கொள்ள தான் விஜயாவின் படுக்கையறைப் பீரோவிலிருந்து எடுத்து வந்த மேப்பைப் பார்த்து தான் குறித்து வந்த குறிப்பை எடுத்துப் பார்த்தாள். அதில் வலது புறம் செல்ல வேண்டுமென குறித்திருந்தது. ஆனால் விஜயாவோ வலதுபுறம் திரும்ப வேண்டும் என்று சொன்னதாக அவள் நினைக்கவில்லை. இருந்த போதிலும் தான் குறித்து வந்த குறிப்புப் படி நடக்க முடிவு செய்து காரை வலது பக்கமுள்ள சாலையில் செலுத்தினுள். காரை நிதானமான வேகத்துடன் செலுத்திக் கொண்டிருந்தாள். சில கிலோ மீட்டர்கள் செல்வதற்குள் நன்ருக இருட்டியதுடன் மழை வேறு வந்த வழியே தெரியாமல் கொட்ட ஆரம்பித்து விட்டது. ரோடெல்லாம் ஒரே சகதியும் சேறுமாக ஆகியது. ஒடிவந்த கார் சகதியில் சிக்குண்டு நின்றது. லதா ரிவர்ஸ் கியர் போட்டு காரை பின்னல் எடுக்க எவ்வளவோ முயன்றும் டயர் மேலும் மேலும் சகதியில் இறங்கியது.சரி இனி முயற்சிப்பதில் பலன் இல்லை என்ற நிலைக்கு வந்தவுடன் காரிலேயே அமர்ந்திருந்தாள். குளிர் அவளை வாட்ட ஆரம்பித்து விட்டது. என்ன செய்வதென்று தெரியாத லதாவிற்கு சிறிது தூரத்தில் ஒளி ஒன்று

இழையாடுவதைக் கண்டாள்.

ஒளியை நோக்கி நடந்து வந்த லதாவுக்கு அது ஒரு வீட்டில் எரியும் மின்சார விளக்கு என்று விளங்கியவுடன் சிறிது நம்பிக்கை பிறந்தது. மழையில் நடந்து வந்ததால் அவளது ஆடைகள் முழுவதும் நனைந்து விட்டன. அதே கோலத்துடன் சென்று அந்த வீட்டின் கதவைத் தட்டினாள். பாழடைந்து கிடந்த அந்த வீட்டைப் பார்த்தவுடன் அவளுக்குப் பயங்கரமாக இருந்தது. அந்தப் பயங்கரமான சூழ்நிலையிலும் தைரியத்தோடு அந்த வீட்டின் கதவைத் தட்டினாள்.

கதவு திறந்தது. திறந்த வெளியின் வழியாக ஒரு முரட்டுக் கரம் வந்து அவளைப் பற்றி வெகு வேகமாக உள்ளே இழுத்துப் போட்டது. அவளையுமறியாத பயத்துடன் கதவின் முன்னுள்ள பழைய நார்ச் ஷோபாவில் வந்து விழுந்தாள். லதாவிற்கு பயத்தினால் வியர்த்து ஊற்றியது. தன்னைத் தூக்கி எறிந்த அந்த பயங்கர சூழ்நிலையிலும் அவளது கண்கள் தேடின. நல்ல உயரமான தேகம், அதற்கு தகுந்தாற்போல கட்டான உடல். லதா ஏதோ கூற முயற்சிக்கும்முன்பே அந்த முரட்டு உருவம் பேச ஆரம்பித்தது.

''யாரம்மா நீ? இந்த அகால இருட்டுவேளையில் யாருமில்லாத இந்த நேரத்தில் யாருமே வரப் பயப்படும் இந்த மாளிகைக்குள் வந்திருக்கிறாயே''

''நான் வந்த கார் சகதியில் சிக்கிக்கொண்டது; அதனால் இங்கேவர நேர்ந்தது. தாங்கள் வந்து சிறிது உதவி செய்து எனது காரை சகதியிலிருந்து விடுவித்துக் கொடுத்தால் நான் இங்கிருந்து போய் விடுகிறேன்''

''அது அவ்வளவு சாத்தியமில்லை. மழை மேலும் மேலும் வலுத்துக் கொண்டிருக்கிறது. மேலும் நான் இங்கிருந்து ஓரடி கூட வெளியே எடுத்து வைக்க மாட்டேன். வேண்டுமானால் உனக்கு ஒரு உதவி செய்கிறேன், நீ இங்கேயே தங்கி விட்டு நாளை காலையில் கிளம்பிச் செல்''

''அதற்காவது சம்மதித்தீர்களே. மிக்க நன்றி, இப்பங்களா யாருடையது. ஏன் இப்படி பயங்கரமாகக் காட்சியளிக்கிறது.''

''இதைக் கல்யாணியின் கல்லறை மாளிகை என்று சொல்வார்கள். சுமார் பத்து வருடங்களுக்கு முன் சினிமா உலகில் கொடிகட்டிப் பறந்த கல்யாணி தேவியை உனக்குத் தெரிந்திருக்கும். அவளைத் திரையுலகில் அறிமுகப்படுத்தி, அவளையே ஹீரோயினாக வைத்து பலபடங்கள் எடுத்த படாதிபதி டைரக்டர் பசுபதிக்கு அவள் மீது அளவு கடந்த ஆசை. அவ

லையே மணப்பது என்ற முடிவு செய்தான். தன் முடிவைக் கல்யாணியிடம் கூறினான். ஆனால் அவன் ஆசை நிராசை ஆகி விட்டது. ஆம். கல்யாணிதேவி தன்னுடன் அதிகப்படங்களில் ஹீரோவாக நடிக்கும் குமாரை விரும்புவதாகவும் அவனும் அவளை மணந்து கொள்ள சம்மதித்து விட்டதாகவும் கூறி பசுபதியை மறுத்தாள். கல்யாணி தேவி மறுக்கவே அவளை பசுபதி கொன்று விட்டான். அதையறிந்து ஒடி வந்தான் குமார். தன் காதலியின் பொன்னுடல் பூமியில் புழுதியில் கிடப்பதைக் கண்டு பதறினான். அவளை இங்கேயே அடக்கம் செய்து அவள் கல்லறையின் மீது அவள் நினைவாக இந்த மாளிகையைக் கட்டினான். எந்நேரமும் தனது காதலி நினைவாகவே இந்தமாளிகையில்வாழ்ந்தான். 5 வருடங்களுக்கு முன்பு அவனும் இறந்துவிட்டான். அவனுக்கு வாரிசு யாரும் இல்லாததால் இப்பொழுது இந்தப் பங்களா யாருக்கும் சொந்தமில்லை. இரவுநேரங்களில் கல்யாணியின் ஆவியும், குமார் ஆவியும் இங்கு உலவித் திரிவதாக மக்கள் நினைப்பதால் இந்தப் பக்கமே மனித நடமாட்டமே கிடையாது. கல்யாணிதேவியின் கல்லறையில் இது கட்டப்பட்டுள்ளதால் இது கல்யாணியின் கல்லறை மாளிகை எனக் கூறுவார்கள்''

''இவ்வளவு விவரமும் தெரிந்து வைத்துள்ள தாங்கள் யாரென்று நான் அறியலாமா?''

''என் பெயர் ராமு; இப்போதைக்கு இது மட்டும் தெரிந்து கொள்ளுங்கள், நீங்கள் அதோ அந்தச் சிறிய அறையினுள் சென்று படுத்துக் கொள்ளுங்கள்.

லதா, ராமு காட்டிய அறைக்குள் சென்று உட்புறம் தாழிட்டுக் கொண்டாள். பொழுது நன்றாக விடிந்து சூரியனுடைய ஒளிக் கதிர்கள் லதா மீது பட்ட பின்பு தான் எழுந்தாள். வெளியேவந்தாள். வெளியறையில் ராமு இல்லாததால் 'ராமு' என்றுகுரல்கொடுத்து அழைத்தாள். பதிலில்லை. தனதுஎதிர்புற அறை கதவு பாதித்திறந்திருந்ததை கண்ட லதா அதனுள் நுழைந்தாள். அங்கு அவள் கண்ட காட்சி அவள் ரத்தத்தை உறையச் செய்தது. ஒரு மனிதன் மிகக் கொடூரமாக கொலை செய்யப் பட்டுக் கிடந்தான். லதாவுக்கு அவன் யாரென்றே தெரியவில்லை. ஆனால்அவன் ராமு இல்லை. அந்தப் பிணத்தின் அருகில் சென்று பார்த்தாள். அந்தப் பிணத்தின் கழுத்திலும் நெஞ்சிலும் சிறிய பிச்சுவா கத்தியால் மிக ஆழமாகக் குத்தப் பட்டிருந்தது. அந்தக் காட்சியைக் கண்ட லதா தன்னை மறந்து வீலென கத்திக் கொண்டே அங்கிருந்து ஓடி தன் கார் நின்ற இடத்தை வந்தடைந்தாள்.

## மறைந்தவள் தோன்றினள்

துப்பறியும் மேதை பாரிஸ்டர் ராஜா தனது அலுவலக அறையில் அமர்ந்து சிகரெட்களைப் புகைத்துத் தள்ளிக் கொண்டிருந்தான்.

''அப்போது அத்தான்! வெளியே ஒரு பெண் உங்களுக்காக வெகு நேரமாகக் காத்துக் கொண்டிருக்கிருள்.''

சரி! உள்ளே வரச் சொல்''

வசந்தி வெளியே சென்ற சில நேரத்திற்கெல்லாம் லதா உள்ளே வந்தாள்.

''வணக்கம் அண்ணு!''

''வா! லதா! என்னை அவசரமாகப் பார்க்க வேண்டும் என்று கூறினுயாமே! என்ன, அப்படி அவசரமான விஷயம்.''

''அண்ணு! நான் விஜயாவின் பொருட்டு காட்டுப் பங்களாவிற்கு லட்சுமி பிலிம்ஸ் நரசிம்மன் என்பவனைச் சந்திக்கச் சென்றேன். சந்தித்து விட்டு திரும்பும் போது குறுக்கு வழியில் வந்தேன், வழிதவறி கல்யாணி தேவியின் கல்லறை மாளிகைக்குச் சென்று விட்டேன். மழை வேறு பெய்ததால் நேற்று இரவு அங்கேயே தங்கி விட்டு இன்று காலை கிளம்பும் பொழுது அந்த பங்களாவில் ஒருவன் கொலை செய்யப் பட்டுக் கிடப்பதை பார்த்தேன். என்னோடு நேற்றிரவு ராமு என்ற ஒருவன் இருந்தான். அவனை இப்பொழுது காணவில்லை'' என்று லதா ஆரம்பம் முதல் முடிவு வரை ஒன்று விடாமல் ஒரே மூச்சில் சொல்லி முடித்தாள்.

''ஒரு வேளை கொலை செய்யப்பட்டுக் கிடந்தவன் ராமுவாக இருக்குமோ?''

''இல்லை நிச்சயமாக இல்லை''.

''சரி! அவனோடு நேற்றிரவு தங்கியிருந்ததாகக் கூறினுயே! அவன் ஏதாவது தவறுதலாக உன்னிடம் . . .''.

''இல்லை! அவன் என்னிடம் மிகக் கண்ணியத்துடன் பழகினுன். ஐ திங்க் கி இஸ் எ பெர்பெக்ட் ஜென்டில்மேன்''

''சரி கொலை செய்யப் பட்டவன் எப்படி எதனுல் கொலை செய்யப் பட்டிருந்தான்.''

''ஒரு சிறிய பிச்சுவா விஞல் அவனது கழுத்திலும், மார்பிலும் மிக அழுத்தமாக ஆழமாகக் குத்தப்பட்டிருந்தது;

''விஜயாவிடம் இது பற்றிக் கூறினுயா?''

''இல்லை. அவள் நான் காட்டுப் பங்களாவிற்கு போவதற்கு முதல் நாள் என்னிடம் விஷயம் எல்லாவற்றையும் கூறி விட்டு வெளியே சென்றவள் இன்னும் திரும்பவில்லை.''

''என்ன? விஜயாவைக் காணோமா?''

''ஆம். மற்றொரு முக்கியமான விஷயம். நான் விஜயா பவனத்திற்கு திரும்பியவுடன் விஜயாவை சந்திக்க அவளது அறைக்குச் சென்றேன். அவளைக் காணோம். அதோடு அவளது அறையிலுள்ள சாமான்கள் எல்லாம் தாறுமாறாக வாரி இறைக்கப்பட்டுக் கிடக்கின்றன. 'ஏதாவது தீர்க்க முடியாத சிக்கலில் அகப்பட்டுக் கொண்டால், பாரிஸ்டர் ராஜாவை அணுகி அவரது உதவியை நாடு!' என்று விஜயா அம்மா என்னிடம் முன்பே கூறியுள்ளார்கள். ஆதலால் உடனே இங்கு வந்தேன்''

''கொலை நடந்த மாளிகையின் பெயரென்ன சொன்னாய்?''

''கல்யாணிதேவியின் கல்லறை மாளிகை''

''லதா! நீ இந்த உடுப்புகளுடன்தான் அங்கிருந்து வருகிறாயா?''

COMICS PDF TIMES

''ஆம்''

''அப்படியானால் மாடிக்குச் சென்று வசந்தியினுடைய ஆடைகளை அணிந்துகொண்டு இவைகளை அங்கேயே வைத்துவிட்டு உனது வீட்டுக்குப் போ!''

''சரி அண்ணா!''

சிறிது நேரத்தில் லதா வசந்தியினுடைய உடையில் வந்தாள்.

''லதா! இனி நீ கல்யாணியின் கல்லறை மாளிகையைப் பற்றியோ அல்லது அங்கு நடந்த கொலையைப்பற்றியோ நினைக்க வேண்டாம்.''

லதா சென்றபின் ராஜா போலீஸ் ஸ்டேசனுக்கு போன் பண்ணினான். இன்ஸ்பெக்டர் இளங்கோ போனை எடுத்துப்பேசினார்.

''ஹலோ! போலீஸ் ஸ்டேசனா!''

"யெஸ்! இன்ஸ்பெக்டர் ஸ்பீக்கிங். நீங்க யார் பேசுகிறது"

"நான் தான் ராஜா"

"ஓ பாரிஸ்டர் ராஜாவா? என்ன விஷயம்".

"ஒரு கொலை"

"அது சரி! அதில்லாவிட்டால் நீங்கள் ஏன் பேசுகிறீர்கள். ஏன் சார்? எங்களுக்கு ரிபோர்ட் வருவதற்குள் உங்களுக்கு எப்படி தெரிந்து விடுகிறது".

"அது தானே என் தொழில்"

"சரி! எங்கே, எப்பொழுது, எப்படி யார் யாரை கொலை செய்தார்கள்"

"இன்ஸ்பெக்டர்! தேட் இஸ் யுவர் டு யூ டி. கொலை நடந்த இடத்தை மட்டும் கூறுகிறேன். மற்றவைகளை நீங்கள் கண்டுபிடித்துக் கொள்ளுங்கள். நகருக்கு வெளியே உள்ள கல்யாணியின் கல்லறை மாளிகையில் கொலை நடந்துள்ளது"

"சரி! உங்களுக்கு கொலையைப் பற்றி கூறியவர்களைக் கூறுகிறீர்களா!"

"அது கூறக்கூடாத ஒன்று"

"அப்படியானல் நீங்கள் தான் கொலையாளி மறைந்து கொள்ள இடமளிக்கிறீர்கள் என நினைக்கிறேன்"

"அப்படி எண்ண வேண்டாம். நீதி நிலைத்திருக்க உண்மைக் கொலையாளிகளும், குற்றவாளிகளும் தண்டிக்கப்பட யான் மிகவும் உழைத்திருக்கிறேன். உழைத்துக் கொண்டிருக்கிறேன் என்பது தாங்கள் அறியாததல்ல."

"அதனால் தான் உங்களை விட்டுவைத்துள்ளோம்"

இன்ஸ்பெக்டர் இளங்கோ முணுமுணுத்தவாறே டெலிபோனை வைத்தார்.

பாரிஸ்டர் ராஜா கொலையைப்பற்றியும் விஜயாவின் மறைவைப் பற்றியும் எண்ணிக் கொண்டே இருந்தார். இரண்டுக்கும் உடனே அவருக்கு விடை கிடைக்கவில்லை.

அன்று மாலை இன்ஸ்பெக்டர் இளங்கோ பாரிஸ்டரைத் தேடிக் கொண்டு அவரது பங்களாவிற்கு வந்தார்.

"வாங்க இன்ஸ்பெக்டர்! குற்றவாளிகளைத் தேடிப் போக வேண்டிய நேரத்தில் என்னை தேடி வந்துள்ளீர்கள்"

"நீங்களும் ஒரு வகையில் குற்றவாளி என்பதால் தான்"

"என்ன நான் குற்றவாளியா? இன்ஸ்பெக்டர் எதுவும் கனவு கண்டு எழுந்து இங்கு வருகிறீர்களா?"

"கொலை செய்வது மட்டும் குற்றமல்ல. கொலையை நிரூபிப்பதற்கு உரிய சாட்சியங்களை மறைப்பதும் குற்றம் தானே"

"அப்படி என்ன பொருளை நான் மறைத்து வைத்திருப்பதாக எண்ணி தாங்கள் இங்கு வந்துள்ளீர்கள்."

"சாட்சியங்களோடு தான் வந்துள்ளேன். மிஸ்டர் ராஜா உங்களுக்கு லதாவைத் தெரியுமா"

பாரிஸ்டர் உணர்ச்சி வசப்பட்ட போதிலும் அதைத் தன்னுள்ளேயே அடக்கிக் கொண்டு ஒன்றுமே தெரியாதவன் போல அமர்ந்திருந்தான்.

"பிரபல கதை வசனகர்த்தா விஜயாவின் ஸ்டெனோ லதா விஜயாவைக் காணோம் என்று எனக்கு போன் செய்திருந்தார். அவள் வீட்டிற்கு சென்று விசாரித்தபொழுது விஜயாவின் அறையையும் யாரோ சூரையாடியதைப் போல எல்லா சாமான்களும் தாறுமாருக வாரி இறைக்கப்பட்டிருந்ததை கூறினுள். நீ எங்கே சென்றிருந்தாய் என்று விசாரித்ததற்கு முதலில் அவள் கூறமறுத்த போதிலும் முடிவில் அவள் காட்டுப் பங்களாவிற்கு போனது முதல் உங்களிடம் வந்து சேர்ந்தது வரை எல்லாவற்றையும் கூறிவிட்டாள். நீங்கள் அவளது

ஆடைகளை மாற்றிவிட்டு உங்களது மனைவியினுடைய உடைகளை அணியச் சொல்லி இந்தக் கொலைக்கு முக்கிய சாட்சியாக உள்ள அவளது உடைகளை மறைத்துள்ளீர்கள்''

''இன்ஸ்பெக்டர்! நான் எந்த உடைகளையும் மறைக்கவில்லை. அவைகள் பத்திரமாக யார் பார்வையிலும் படும்படியாகவே உள்ளது. மேலும் அது இந்த வழக்கோடு சம்பந்தப்பட்டது என்று தெரிந்த பின்பும் மறைப்பது தான் குற்றம். அவளது ஆடைகள் இவ்வழக்கோடு சம்பந்தப்பட்டது என்று என் மனைவிக்குத் தெரியாது. மனிதாபிமானத்தால் தான் வசந்தி தனது ஆடைகளை அவளுக்குக் கொடுத்திருக்கிருள்.''

''பாரிஸ்டர்! பாம்புக்குத் தலையையும் மீனுக்கு வாலையும் காட்டும் விலங்கு போல் நீங்கள் இப்போது உள்ளீர்கள். சரி! நான் வருகிறேன்''

இன்ஸ்பெக்டர் இளங்கோ பாரிஸ்டரது பங்களாவைவிட்டு தனது பைக்கில் ஏறி போலீஸ் ஸ்டேசன் சென்ருர். பாரிஸ்டரது அறைக்குள் வசந்தி நுழைந்தாள்.

''வசந்தி! ரமேஷ் எங்கே?''

''அடுத்த அறையில் தான் அமர்ந்திருக்கிருன்''

''அவனை வரச்சொல்''

வசந்தி ரமேஷை கூப்பிட வெளியே சென்ருள். சிறிது நேரத்திற்குள் ரமேஷ் பாரிஸ்டரது அறைக்குள் வந்தான். ரமேஷ் வசந்தியுடைய சகோதரன். துப்பறியும் வேலையில் பாரிஸ்டருக்கு பெரிதும் உதவியாயிருப்பன்.

''என்ன ராஜா? என்னைக் கூப்பிட்டாயாமே!''

''ஆம். நாம் இப்போது டீல் பண்ண வேண்டிய கேசைப் பற்றி உனக்குத் தெரியுமல்லவா?

"ஓ! லதாவைப் பற்றித்தானே கூறுகிருய், நான் நினைக்கிறேன், அவள் பொய் கூறுகிருளென்று. அவள் கொலை செய்த ஆளைப் பார்த்திருப்பாள் என்று நான் நினைக்கிறேன். அவள் அதை மறைக்கிருள். நீ முழுமையாக நம்புகிருயா?"

"ரமேஷ்! நான் அவளை நம்புகிறேன். டாக்டரிடமும், வக்கீலிடமும் எதையும் மறைக்கக் கூடாது என்பது அவளுக்குத் தெரியும் என்று நான் நினைக்கிறேன்"

"சரி ராஜா! கூப்பிட்டாயாமே? என்ன காரணம்"

"நீ விஜயா பவனத்திற்கு போன் பண்ணி விஜயா வந்துவிட்டாளா? என்று விசாரி"

"சரி"

ரமேஷ் டெலிபோனை எடுத்து விஜயாவினுடைய போன் நம்பரை டெலிபோன் டைரக்டரியில் பார்த்து டையல் செய்தான்.

"ஹலோ! அது விஜயாவினுடைய வீடு தானே!"

"யெஸ்! நீங்க யார் பேசுகிறது?"

"நான் பாரிஸ்டர் ராஜாவினுடைய அஸிஸ்டென்ட். விஜயா இருக்கிருர்களா?"

"விஜயா தான் பேசுகிறேன். வாட் இஸ் த மேட்டர்?"

"பாரிஸ்டர் உங்களோடு பேச விரும்புகிருர், ஒன் மினிட் வெய்ட் பண்ணுங்கள்...... ராஜா! விஜயாதான் "பேசுகிருள்"

"போனை என்னிடம் கொடு"

"ஹலோ ராஜா பேசுகிறேன்"

"நான் விஜயா பேசுகிறேன்! என்ன விஷயம்?"

"எப்பொழுது வந்தீர்கள்"

"இப்பொழுதுதான் வந்தேன். எனது அறையிலுள்ள சாமான்கள் எல்லாம் தாறுமாருக வாரி இறைக்கப்பட்டுள்ளது. என்ன காரணம் என தெரியவில்லே."

"ஓ! அப்படியா! யாரும் உங்களே சந்திக்குமுன் நான் உங்களுடன் பேச விரும்புகிறேன். வீட்டுக்கு வரட்டுமா"

"சரி. இப்பொழுதே வாருங்கள்."

ராஜா டெலிபோனே வைத்துவிட்டு டிரஸ் மாற்றிக் கொண்டு விஜயா வீட்டிற்கு உடனே கிளம்பினுன்.

"என்னே ஏமாற்றுவது எளிதல்ல விஜயா"

ராஜா விஜயா பவனத்தைச் சென்றடைந்தபோது விஜயாவே நேரில் வந்து அவனே வரவேற்ருள்.

"வாருங்கள் பாரிஸ்டர்! லதாவை போலீஸ் அரஸ்ட் பண்ணிக் கொண்டு போய் விட்டார்களாமே!"

"ஆம் மிஸ் விஜயா! நான் கேட்கும் சில கேள்விகளுக்கு தாங்கள் உண்மையான பதில்களே அளிக்கவேண்டும்"

"ஓ! ......அதற்கென்ன!"

"நீங்கள் லதாவை எதற்காக காட்டுப் பங்களாவிற்கு அனுப்பி வைத்தீர்கள்."

"லட்சுமி பிலிம்ஸோடு ஓர் படத்திற்காக ஒப்பந்தம் செய்து கொள்ள அவளே அனுப்பினேன்."

"நீங்கள் போகாமல் அவளே அனுப்பிவிட்டு நீங்கள் எங்கே போய்விட்டு வருகிறீர்கள்."

"இதற்கு நான் பதில் கூற முடியாது."

"சரி! லதா திரும்பும் பொழுது குறுக்கு வழியில் வரச் சொன்னீர்களாமே!

"ஆமாம்"

"சரியான வழியைக் கூருமல் ஏன் தவருன பாதையைக் கூறினீர்கள்."

"இல்லை கிடையவே கிடையாது. நான் சரியான பாதை யைத்தான் கூறினேன்."

"அப்படியானல் தாங்கள் லதாவுக்கு கூறிய வழியை மறுபடி என்னிடம் கூற முடியுமா?"

"காட்டுப் பங்களாவின் பின்புறமுள்ள செம்மண் சாலை யில் கிளம்பி இரண்டு கிலோ மீட்டர் தொலைவு வந்தவுடன் ஒரு குளமும் ஆலமரமும் இருக்கும். அங்கு இடதுபுறம் திரும்பி வந்தால் மெயின் ரோட்டுக்கு வந்துவிடலாம் என்று கூறினேன்."

"இல்லை. வலதுபுறம் திரும்பச் சொல்லியிருக்கிறீர்கள்."

"கிடையாது. இடதுபுறம் தான் திரும்பச் சொன்னேன்."

"ஒரு மேப்பை வைத்துக்கொண்டு தாங்கள் வழி கூறிய தாக லதா சொன்னுளே!"

"ஆமாம் அது காட்டுப் பங்களாவிலிருந்து இங்கு வரும் வழியைக் காட்டும் மேப்."

"அந்த மேப்பை நான் பார்க்கலாமா."

"மே ஐ கம் இன்" என்ற குரல் கேட்டு இருவரும் அறைக் கதவை நோக்கித் திரும்பினுர்கள்.

"ஓ!.........ராஜா நீங்களும் இங்குதான் இருக்கிறீர்களா!" என்று கூறிக்கொண்டே இன்ஸ்பெக்டர் இளங்கோ உள்ளே வந்தார்.

"ஆமாம் இன்ஸ்பெக்டர்.........விஜயா நீங்கள் அந்த மேப்பை எடுத்து வாருங்களேன்".

"இங்கே எந்த சாமானும் வைத்த இடத்தில் இல்லை. ஆதலால் சிறிது நேரம் பொறுங்கள். தேடி எடுத்து வருகி றேன்."

"ஓ...யெஸ் நாங்கள் காத்திருக்கிறோம்" என்று இன்ஸ்பெக்டர் ராஜாவுக்கு முந்திக்கொண்டு கூறினார். விஜயா போய் சிறிது நேரம் ஆகியது. மோகன் பொறுமை இழந்து இங்குமங்குமாக நடந்து கொண்டிருந்தான்.

"இன்ஸ்பெக்டர்! ஒரு மேப்பைத் தேடி எடுத்துவர இவ்வளவு நேரமா? வாருங்கள் உள்ளே சென்று பார்ப்போம்."

"இன்ஸ்பெக்டர் சார்! இப்பொழுது நான் டியூட்டியில் உள்ளேன். நான் எப்படி நடந்து கொள்ளவேண்டுமென்ற சில ரூல்ஸ் அண்ட் ரெகுலேசன்ஸ் உண்டு. தெரியுமல்லவா?"

"அப்படியானால் சரி. நான் போய் பார்த்து வருகிறேன்."

ராஜா உள்ளே செல்ல அறைக் கதவைத் தொடவும் விஜயா கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தாள்.

"ஆண்கள் எல்லாம் அவசரப்புத்திக்காரர்கள் என்பது சரிதான்"

"மிஸ் விஜயா! இங்கே நான் ஒருவன் அமைதியோடு அமர்ந்து கொண்டிருக்கிறேன். ஒரு சிலரைக் கொண்டு ஒரு வர்க்கத்தையே எடை போடக்கூடாது."

"ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்"

"சரி விஜயா மேப்பைக் காட்டுங்கள்."

விஜயா மேப்பை விரித்து காட்டினாள். அதில் ஆல மரத்திற்கருகில் இடதுபுறம் திரும்ப வேண்டும் என்று குறித்திருந்தது. இன்ஸ்பெக்டர் விஜயாவைப் பார்த்து, "சரி! மிஸ் விஜயா! இந்த மேப்பின் பின்புறம் தாங்கள் கையெழுத்துப் போட்டு இன்றைய தேதியிட்டுத் தாருங்கள். இது லதா வழக்கில் உபயோகப்படும்."

"ஓ! கே! இன்ஸ்பெக்டர்! உங்கள் பேனாவைத் தாருங்கள். கையெழுத்துப் போட்டுத் தருகிறேன்."

இவ்வளவு நேரம் அமைதியாக அமர்ந்திருந்த ராஜா மெல்ல பேசினான்.

"பிரபல கதை வசனகர்த்தாவிடம் பேனா இல்லை."

"பேனா இல்லாமலில்லை. நான் எப்போதும் எழுதுவதில்லை. நான் கூறுபவைகளை எழுதத் தான் லதாவை என்னுடைய ஸ்டெனோவாகப் போட்டுள்ளேனே!"

"பின் உங்கள் விரல்களில் புத்தம் புதிதாக மைக்கறை உள்ளதே அது எப்படி ஏற்பட்டதென்று நான் அறியலாமா?"

"அது......அது......நான் எழுத்தாளினி என்பதை மறந்து விட்டீர்களோ!"

"இப்பொழுது தான் நான் எழுதுவதில்லை. என் ஸ்டெனோ தான் நான் கூறுபவைகளை எழுதுவாள் என்று கூறினீர்கள். மிஸ் விஜயா! நான் ஏமாற்றுக்காரர்களிடமே பழகுபவன். என்னை யாரும் அவ்வளவு எளிதாக ஏமாற்ற முடியாது. நீங்கள் இப்பொழுது கொடுத்தது பழைய மேப் அல்ல? இப்பொழுது தான் அவசரம் அவசரமாக தங்களால் தயாரிக்கப் பட்டது பழைய மேப்பில் அம்புக்குறி வலது பக்கம் இருக்கும் இப்புதிய மேப்பில் இடது புறம் உள்ளது."

"நோ! நான் கூறிய வழிகளை லதா தனது ஷார்ட் ஹேண்ட் நோட்டில் குறித்துக்கொண்டாள். அதைப் பார்த்தலாவது உங்களது சந்தேகம் தீருமல்லவா!"

"அந்தப் பேப்பர் கிழிக்கப்பட்டு விட்டதாக லதா என்னிடம் கூறினாள்."

"இல்லை! ஏமாற்று நாடகமாடுவது இப்போது நீங்கள் தாம்" இன்ஸ்பெக்டர் இருவரையும் சமரசப்படுத்தும் முகமாக,

"நாம் லதாவின் ரூமுக்குச் சென்று அவளது நோட்டைப் பார்க்கலாமே!" என்ருர். மூவரும் லதாவினுடைய அறையை நோக்கிச் சென்ருர்கள். அது அப்படியே இருந்தது.

"பார்த்தீர்களா, ராஜா! லதாவினுடைய ரூமுக்குள் யாரும் வந்து குலைக்கவில்லை."

"அவர்கள் தேடிவந்த பொருள் லதாவிடம் இல்லாமலிருந்திருக்கலாம். அல்லது அப்பொருள் இங்கு வந்தவுடனேயே கிடைத்திருக்கும்"

மூவரும் லதாவினுடைய குறிப்பு நோட்டைத் தேடினர்கள். நோட்டுக் கிடைத்தவுடன் அதைப் புரட்டிப் பார்த்தார்கள். அது ஒரு பக்கம் கிழிக்கப்பட்டிருந்தது.

"ராஜா! இப்பொழுது தெரிகிறது என்னை இவ்வழக்கில் சம்பந்தப்படுத்திவிட நீங்கள் செய்த ஏற்பாடு இது வென்று! ஏன் அந்தப் பக்கத்தைக் கிழித்தீர்கள்."

"எனக்கு எதுவும் தெரியாது. ஆனல் உண்மை குற்றவாளியைக் கண்டு பிடித்து லதாவை விடுதலையடைச் செய்வது மட்டும் என்னுடைய பொறுப்பு."

அதற்குள் இன்ஸ்பெக்டர் மேஜைக்கருகிலிருந்த குப்பை போடும் தொட்டியிலிருந்து லதா எழுதிய குறுக்குவழி பற்றிய குறிப்பு எழுதிய காகிதத்தை எடுத்து வந்தார். அது ஷார்ட் ஹேண்ட்டில் எழுதப்பட்டிருந்தது. ராஜா அதை படித்தார். அதில் இடது புறம் திரும்பவேண்டும் என்று லதா குறித்திருந்தாள்." இன்ஸ்பெக்டர் அதையும் ஒரு சாட்சியமாக்கி தன்னோடு வைத்துக்கொண்டார். பாரிஸ்டரும், இன்ஸ்பெக்டரும் அங்கிருந்து கிளம்பினர்கள்.

## 'கல்லறை மாளிகை தந்த புதிய ரகசியம்'

ராஜா அவனது பங்களாவிற்கு திரும்பி வந்தபொழுது வசந்தியும், ரமேஷும் அவனுக்காகக் காத்திருந்தார்கள்.

செந்தமிழ்க் கவிச்சுடர் வித்துவான் தி. சு. (கவிஞர் சிவதாசன்) பகத் சிங் தெரு திருநெல்வேலி

"ராஜா! ஒரு முக்கியமான விஷயம்"

"என்ன?"

"ஒரு பெரிய உண்மை போலீஸாருக்கு முன் நமக்குக் கிடைத்துள்ளது. அது நமக்கு மிகவும் அனுகூலமாகயிருக்கும்".

"அப்படியென்ன அரிய உண்மை"

"கல்யாணியின் கல்லறை மாளிகையில் கொலை செய்யப் பட்டுக் கிடந்த மனிதன் யாரென்று நமது ஆள் ஒருவன் கண்டு பிடித்துவிட்டான். சுந்தரம் என்பது அவன் பெயர். முத்துக்குமரப்பமுதலி தெருவில் வசிப்பவன்"

"ரமேஷ், வசந்து உடனே புறப்படுங்கள். நாம் உடனே முத்துக்குமரப்பமுதலி தெருவிலுள்ள அவன் வீட்டிற்குச் செல்ல வேண்டும் போலீஸ் போவதற்கு முன்."

அந்த மூவரையும் சுமந்து கொண்டு இம்பாலா முத்துக்குமரப்பமுதலி தெருவுக்குப் பறந்தது.

"ரமேஷ்! இந்தத் தெருவில் எந்த வீடு"

"அதோ! அந்த கொய்யாமரம் நிற்கிறதே அந்தப் பழைய வீடு தான்"

மூவரும் அந்த வீட்டிற்கு முன் சென்றார்கள். ரமேஷ் கதவைத் தட்டினான். சிறிது நேரத்தில் கதவு திறந்தது. ஒரு பெண் வெளியே வந்தாள்.

''யார் நீங்கள்? உங்களுக்கு என்ன வேண்டும்''

''சுந்தரத்தினுடைய வீடுதானே இது.''

''ஆமாம்''

''அவரைப் பார்க்க வேண்டும்''

''அவர் இப்போது இல்லை. நீங்கள் வந்த விஷயம் என்ன வென்று [illegible] அவர் வந்தவுடன் [illegible] கூறுகிறேன். உள்ளே [illegible]''

மூவரும் உள்ளே வந்து அமர்ந்தார்கள்.

''நான் தான் ராஜா, இவள் வசந்தி, இவன் ரமேஷ்''

''ஓ! நீங்கள் தான் பாரிஸ்டர் ராஜாவா? உங்களை முதலில் அடையாளம் தெரியவில்லை. உங்கள் போட்டோவை பேப்பரில் பார்த்துள்ளேன். உங்களை வெளியே நிறுத்தி பேசியதற்கு மன்னிக்கவும்''.

''அதனாலென்ன! நீங்கள் தான் சுந்தரத்தின் மனைவியா? உங்கள் பெயர் என்ன?''

''மஞ்சுளா''

''உங்களுடைய கணவருக்கு என்ன வேலை''

''அவர் பழைய பொருட்களை, அதாவது பழங்கால கலையம்சம் பொருந்திய பொருட்களை வாங்கி அதில் இன்ட்ரஸ்ட் உள்ளவர்களுக்கு விற்று பணம் சம்பாதித்து வந்தார்.''

''அப்படியானால் அவரைச் சந்திக்க தினமும் நிறையப் பேர்கள் வருவார்கள்''

"இல்லை. இதுவரை ஒருவரும் வந்தது கிடையாது"

"அப்புறம் பிசினஸ் எப்படி நடக்கும்"

"அடிக்கடி டெலிபோன் வரும், மேலும் வாரத்தில் பாதி நாட்களுக்கு மேல் அவர் இங்கு இருக்கமாட்டார்"

"அவரோடு போனில் பேசுபவர்களைப் பற்றியாவது உங்களுக்குத் தெரியுமா"

"தெரியாது. போன் வந்தால் அவர்தான் எடுத்துப் பேசுவார்"

"சரி அவர் ஊரிலில்லாத போது போன் வந்தால், நீங்கள் தானே பேச வேண்டும்"

"அந்த சூழ்நிலை ஏற்படவேயில்லை. அவர் ஊரில்லாத நேரங்களிலோ அல்லது வீட்டிலில்லாத நேரங்களிலோ அவருக்குப் போனே வருவதில்லை."

"அப்படியா!"

"என் கணவரைப்பற்றி இவ்வளவு விவரமாக விசாரிக்கிறீர்களே ஏன் என்று நான் அறியலாமா?"

"அதைப் பின்பு கூறுகிறேன். அவரது போட்டோ ஏதாவது இருந்தால் கொண்டு வாருங்களேன்"

"இல்லை... நீங்கள் ஏனென்று கூறினால் தான் நான் இனி எதுவும் கூறமுடியும். ஒருவேளை அவர் வந்து என்னைக் கோபித்தால் என்ன செய்வது?"

"நாங்கள் தேடி வந்த சுந்தரம் அவர்தானு என்று அறியத் தான் போட்டோ கேட்டேன்"

"நீங்கள் தேடிவந்தவரின் அடையாளங்களைக் கூறினுல் நான் அது என் கணவரா என்று கூறுகிறேன்"]

"உங்கள் கணவர் வீட்டை விட்டுப் போய் எத்தனை நாளாகிறது."

"ஐந்து நாட்களாகின்றன."

"உங்கள் கணவர் எப்பொழுதாவது கல்யாணியின் கல்லறை மாளிகைக்குச் சென்றிருக்கிருரா?"

"கல்யாணியின் கல்லறை மாளிகையா? அது எங்கே யிருக்கிறது?"

"என்ன? உங்களுக்கு கல்யாணியின் கல்லறை மாளிகையைப் பற்றி உங்களுக்குத் தெரியாதா? உங்கள் கணவர் கூறியிருப்பாரே! அங்கு நடந்த விபத்து ஒன்றைப் பற்றி!"

"இல்லையே!"

"அப்படியாணுல் உங்கள் கணவர் ஒன்றுமே கூற வில்லையா? நாங்கள் தேடி வந்த சுந்தரம் அந்த விபத்தைப் பார்த்தவர். சுமார் ஆறடி உயரம் இருப்பார். கருப்பு நிறம். இடது கண் பார்வை இல்லாதவர். அதை மறைக்க கூலிங் கிளாஸ் போட்டிருப்பார்."

"இல்லை. என் கணவர் ஐந்தரை அடி உயரம். நல்ல சிகப்பு நிறம். இரண்டு கண்களும் நன்ருக இருக்கும்."

"நாங்கள் தேடிவந்த சுந்தரம் உங்கள் கணவரல்ல; நாங்கள் சென்று வருகிருேம். தொந்தரவுக்கு மன்னிக்க."

மூவரையும் வாசல்வரை வந்து வழியனுப்பி வைத்தாள் மஞ்சுளா. கதவுக்கருகில் ராஜா ஏதோ ஒன்றை குனிந்து எடுத்ததை மற்ற மூவரும் கவனிக்கவில்லை. இம்பாலாவில் வந்து மூவரும் ஏறியமர்ந்தார்கள். ரமேஷ் டிரைவர் சீட்டில் அமர்ந்து வண்டியை செலுத்திஞன். அங்கு நிலவிய மௌனத்தை ரமேஷே முதலில் கலைத்தான்.

"ஏன் ராஜா? நாம் தேடி வந்த சுந்தரம் இவன் தான் என்று உறுதியாகிவிட்டதே. மஞ்சுளா கூறிய அடையாளங்கள் அப்படியே கொலையுண்டவனிடம் இருக்கிறது. நீ ஏன் அவன் கொலை செய்யப்பட்ட விவரத்தை அவளிடம் கூறவில்லை."

"நாம் ஏன் கூறவேண்டும்? போலீஸே வந்து கூறட்டும்."

அவர்கள் இருவரது பேச்சையும் கவனித்துக் கொண்டிருந்த வசந்தி மெதுவாக சோகமாக கூறிஞள்.

"பாவம்' மஞ்சுளாவைப் பார்த்தால் இளம் பெண்ணுக இருக்கிறது. எப்படிதான் தன் கணவனது மறைவைத் தாங்கிக் கொள்ளப் போகிருளோ?"

"ரமேஷ்! கொலை நடந்த இடத்தை நான் பார்க்க வேண்டும். போலீஸ் சோதனை அங்கு நேற்றே முடிந்திருக்கும். இப்போது அங்கு போவோம். காரை அங்கு செலுத்து" என்ருன்.

ரமேஷ் இம்பாலாவை மிக வேகமாகக் கல்யாணியின் கல்லறை மாளிகையை நோக்கிச் செலுத்தினன். சிறிது நேரத்தில் மூவரும் மாளிகையின் முன்பு நின்ருர்கள். சுந்த ரத்தின் டெட் பாடியை போஸ்ட் மார்ட்டத்திற்காக போலீ ஸார் எடுத்துச் சென்றிருந்தார்கள். மாளிகை வெளியே நாங்கு போலீஸார் காவல் போடப்பட்டிருந்தது. அவர்கள் மாரிஸ்டரைக் கண்டவுடன் விலகி வழிவிட்டு நின்ருர்கள். ராஜாவும் மற்ற இருவரும் உள்ளே சென்று கொலை நடந்த இடத்தையும், மற்ற அறைகளையும் சுற்றிப்பார்த்தார்கள். ராஜாவின் கண்கள் கேமராவாக வேலை செய்தது பார்த்த பொருள்கள் எல்லாவற்றையும் படமெடுத்து மனதில் பதிய வைத்துக் கொண்டது. மூவரும் அடுப்பங்கரைக்கு வந்தார் கள். அங்கே ஒரு கைக்குட்டை ஒன்று சில்வர் கெட்டிலுக்குப் பக்கத்தில் கிடந்தது. அதை ராஜா எடுத்துக் கொண்டான். மூவரும் திரும்பினுர்கள். வரும் வழியில் காரில் தனது சந்தேகத்தை ராஜா வசந்தியிடம் தெரிவித்தான்.

''ரமேஷ்! நான் கிட்சன் ரூமில் ஒரு கைக்குட்டையை கண்டு பிடித்து எடுத்து வந்துள்ளேன். அந்த மாதிரி கர்சிப் இங்கு கிடைக்கவே முடியாது. மேல் நாடுகளில்தான் வாங்க லாம். ஏனென்ருல் அந்த டவலின் டிஸைன் புதுமாதிரியாக உள்ளது. ஒரு ஓரத்தில் Expo 70, Japan. (எக்ஸ்போ 70 ஜப்பான்) என்று அச்சிடப்பட்டுள்ளது. நான் நினைக்கிறேன் அந்த கைக்குட்டையை யாரோ சமீபத்தில் ஜப்பானில் நடந்த உலகப் பொருட்காட்சிக்குப் போயிருக்கத்தில் அங்குள்ள ஸ்டாலில் வாங்கியிருக்க வேண்டும். மற்ருெரு ஓரத்தில் பிரபல ஆங்கில நாடக ஆசிரியர் சேக்ஸ்பியரின் படம் பொறிக் கப்பட்டுள்ளது. இது நமக்கு மிகவும் உதவும், என்று நம்பு கிறேன்.''

மூவரையும் சுமந்து சென்ற இம்பாலா, ஹோட்டல் ஹேபி பாரடைஸ் போர்டிகோவின் முன் சென்று நின்றது. மூவரும் இறங்கி ஹோட்டலினுள் சென்றனர். ராஜா ரமேஷைப்பார்த்து நீ நமது அலுவலகத்திற்கு போன் செய்து ஏதேனும் முக்கிய மான விஷயங்கள் உண்டா என்று கேட்டு விட்டு நாங்கள் போகும் அறைக்கு வந்து சேர் என்று சொல்லிவிட்டு ஃபேமிலி ரூம் ஒன்றை நோக்கி நடந்தார்கள். சிறிது நேரத்தில் ரமேஷ் அங்கு வந்து சேர்ந்தான்.

"ராஜா! லட்சுமி பிலிம்ஸ் படக் கம்பெனி முதலாளியின் பர்சனல் செக்ரட்டரி நரசிம்மனை சந்திக்க லதா சென்றதாகக் கூறினாளல்லவா? அப்படி ஓர் ஆள் லட்சுமி பிலிம்ஸில் வேலையே செய்ய வில்லையாம். அவன் தற்போது ஹோட்டல் ஓசியானிக் கில் ரூம் நம்பர் 207இல் தக்கியுள்ளானாம்.'

"சந்தி! சீக்கிரம் சாப்பிடு. நாம் போய் நரசிம்மனை பார்த்து விட்டு வருவோம்.

மூவரும் ஹோட்டல் ஓசியானிக்கு ரூம் நம்பர் 207க்கு வந்து சேர்ந்தார்கள். நரசிம்மன் வந்து நீங்கள் யாரைப் பார்க்க வேண்டும் என்று கேட்டான்.

"உன்னைத்தான் பார்க்க வந்திருக்கிறோம்."

"எனக்கு இப்பொழுது யாரையும் பார்க்க விருப்பமுமில்லை நேரமுமில்லை. போய்வாருங்கள்".

"அப்படி என்ன மிகமிக அவசரமான வேலை"

"எங்கள் படக்கம்பெனிக்காக சில கதைகளுக்கு நகல் எடுத் துக் கொண்டிருக்கிறேன்."

"வீணாகப் பொய் சொல்லி நேரத்தை வீணாக்காதே! நீ லட்சுமி பிலிம்ஸில் வேலை செய்யவில்லை என்று எங்களுக்குத் தெரியும். சிறிது நேரத்தில் லதா-கொலை விஷயமாக போலீஸ் வந்து உன்னைப் பிடித்துச் செல்லும்"

"சார்! என்னைக் காப்பாற்றுங்கள்! நான் லட்சுமி பிலிம்ஸில் வேலை செய்வதாக சொல்லி நடித்தால் ஆயிரம் ரூபாய் தருவதாகவும் அன்று போன் வந்தது. அதன்படி ஒருகாரை எடுத்துக் கொண்டு போய் அவ்வாறு நடித்தேன். லதாவுக்கு அட்வான்ஸ் கொடுக்கக்கூட பணம் ஒருவர் கொடுத்தார்."

"அந்த ஆள் எப்படியிருந்தார்"

"சுமார் ஐந்தரை அடி உயரமிருந்தார். நிறம் நல்ல சிவப்பு."

"சரி நாங்கள் வருகிறோம்"

மூவரும் வெளியே கிளம்பினார்கள். முன்போல இம்பாலா மூவரையும் சுமந்து கொண்டு பறந்து கொண்டிருந்தது.

"ரமேஷ்! நான் போடும் யூகங்களெல்லாம் சரியாகிக் கொண்டே வருகிறது."

"யார் மீது சந்தேகப்படுகிறாய்"

"இப்பொழுது சொல்லக்கூடாது. எனது ஊகங்களுக்கு முடிவு கிடைக்கட்டும். ரமேஷ்! விஜயா எழுதி சமீபத்தில் வெளி வந்தது 'பாவை சொன்ன ரகசியம்' கதைப் புத்தகத்தைப் படித்தாயா?

"அந்தக் கதைப் புத்தகத்தைப் பார்த்தேன். படிக்க நேரமில்லை."

"படிக்கவேண்டாம். அதன் முதற்பக்கத்தில் பிரசுரமாகியுள்ள விஜயாவின் புகைப் படத்தைப் பார்த்தாயா?

"பார்த்தேன்! இனக்கவர்ச்சியைத் தூண்டும் விதத்தில் விஜயா போஸ் கொடுத்திருக்கிறாள்"

"அவள் கழுத்திலே கட்டியிருக்கும் கைக்குட்டையைப் பார்த்தாயா? அது கிடடத்தட்ட இப்பொழுது நான் கல்லறை மாளிகையில் கண்டெடுத்ததாக அது மட்டும் இருந்தால் !"

"நீ கூறுவதைப் பார்த்தால் விஜயா தான் குற்றவாளியாகிறது.

ரமேஷ்! காரை நிறுத்து! நீயும் வசந்தியும் இப்படியே வீட்டிற்குச் செல்லுங்கள். நான் ஒரு டாக்ஸியில் விஜயாவைச் சந்தித்து விட்டு வருகிறேன்.

அத்தான்! மணி ஏழாகிறது. இப்பொழுது தான் சந்திக்க வேண்டுமா? நாளை காலையில் போய்ப் பாருங்கள்.

வசந்தி! நம் தொழிலுக்கு இரவென்றும் பகலென்றும் வேறுபாடு இருக்கிறதா?

டாக்ஸி ஸ்டாண்ட் அருகில் இம்பாலா நின்றது. ராஜா இறங்கிக் கொண்டான். இம்பாலா மீண்டும் கிளம்பி ஓடி மறைந்தது. ராஜா ஒரு டாக்ஸி பிடித்துக் கொண்டு விஜயா பவனத்தை வந்தடைந்தான்.

ராஜா கதவைத் தட்டினான். விஜயாவே வந்து திறந்தாள் தலையை வெளியே நீட்டி யாரென்று பார்த்தாள். ராஜா என்று தெரிந்தவுடன் தீயை மிதித்தவள் போல கால்களை உள்ளே இழுத்துக் கொண்டாள். அதற்குள் ராஜாவீட்டிற்குள் நுழைந்து விட்டான்.

"மிஸ் விஜயா! என்னைக் கண்டால் அவ்வளவு பயமா?"
"இந்த இரவு வேளையில் என்ன அவசரமான விஷயம்"
"உன்னைச் சில கேள்விகள் கேட்க வேண்டும்!"
"அதுதான் அளவுக்கு மீறி கேட்டு விட்டீர்களே!"
"என்ன செய்வது? எனது தொழில் அப்படி!"

"சரி! எனக்கு சில முக்கியமான வேலைகள் உள்ளன. சீக்கிரம் நீங்கள் கேட்க வேண்டியதை கேட்டு விட்டுப் போகலாம்"

"நீ எழுதிய 'பாவை சொன்ன ரகசியம்' கதைப் புத்தகத்தின் அட்டையில் பிரசுரமாகியுள்ளது உன் படம்தானே!"

"ஓ . . . . . அது உங்களையும் கவர்ந்து விட்டது"

"அந்தப்படம் எங்கு எடுக்கப்பட்டது".

"இங்குள்ள ஒரு பெரிய ஸ்டூடியோவில்தான், ஆனால் படத்தில் பேக்கி ரவுண்ட் கடற்கரையில் நிற்பதுபோல் இருக்கும்."

"அந்தப் படத்தில் நீ கழுத்தில் கட்டியிருக்கும் கைக்குட்டை எங்கு வாங்கியது".

"ஓ . . . . அதுவா! நான் எக்ஸ்போ 70ஐப்பார்க்க ஜப்பான் சென்றபோது அங்குள்ள ஸ்டாலில் வாங்கினேன். அதில் ஒரு ஓரத்தில் ஆங்கில நாடக மேதை ஷேக்ஸ்பியரின் படம் பிரிண்ட் ஆகியிருக்கும். நானும் நாடகங்களும், கதைகளும், வசனங்களும் எழுதுகிறேன். ஆதலால் ஷேக்ஸ்பியரது படம் போட்ட கைக்குட்டையை விரும்பி வாங்கினேன்".

"அந்தக் கைக்குட்டையை நான் பார்க்கலாமா."

"இதோ! தேடி எடுத்து வருகிறேன்."

கால் மணி நேரத்தில் விஜயா வெறுங்கைகளுடனேயே திரும்பி வந்தாள்.

"பாரிஸ்டர் சார்! எனது அறைப் பொருட்கள் அன்று தாறுமாறாக சிதறி எறியப்பட்டது இன்னும் சரி செய்யப்படவில்லை. ஆதலால் அந்த கர்ஜிப்பை காணவில்லை."

"அந்தக் கைக்குட்டையை கடைசியாக எப்பொழுது பார்த்தீர்கள்"

விஜயாவின் முகம் இந்தக் கேள்வியைக் கேட்டவுடன் சுருங்கியது.

"காணவில்லையென்றால் விட்டுவிடுங்களேன் சார்! திரும்பத் திரும்ப அதையே கேட்கிறீர்களே. உலகில் கைக்குட்டையை எத்தனைபேர் மறதியால் மறந்து விடுகிறார்கள்.

"அதல்ல! நீங்கள் மிகவும் விருப்பப்பட்டு வாங்கி வந்திருக்கிறீர்கள். அதைக் காணோம் என்றால் . . . . "

"விருப்பப்பட்டும் வாங்கவில்லை! வருத்தப்பட்டும் வாங்கவில்லை. எக்ஸ்போ 70ல் கையிலிருக்கட்டும் என்று சும்மாதான் வாங்கினேன். ஏன்சார் நீங்கள் எக்ஸ்போ 70 பார்க்க ஜப்பான் போயிருந்தீர்களா"

"எக்ஸ்போ பார்க்கச் செல்லவில்லை. ஆனால் அதற்கு முன் ஜப்பான் போயிருக்கிறேன்."

"எதற்காகப் போயிருந்தீர்கள்."

"ஜப்பானியர்களிடம் ஜூடோ முறை சண்டையைக் கற்றுக் கொள்வதற்காகப் போயிருந்தேன்."

"உங்களுக்கு ஜூடோ கூடத் தெரியுமா. அந்த முறையில் சண்டை போட்டிருக்கிறீர்களா"

"சந்தர்ப்பம் ஏற்பட்டால் தவிர நான் அம் முறையை பயன் படுத்துவதில்லை"

"நான் ஜூடோவைப் பற்றி நிறையக் கேள்விப் பட்டிருக்கிறேன். ஆனால் அந்தமுறையைப் பயன்படுத்தி சண்டையிடுவதைப் பார்த்ததில்லை. சினிமாக்களில் கதாநாயகனும், வில்லனும் ஜூடோ முறையில் சண்டையிடுவதாகச் சொல்லி படமெடுப்பார்கள். ஆனால் அதில் வேகமிருக்காது. ஏதோ விளையாட்டு போலிருக்கும்."

"மிஸ் விஜயா! சந்தர்ப்பம் ஏற்படும்போது நான் ஜூடோ முறையில் சண்டையிடுவதை நீங்களே காண்பீர்கள். இப்போது அந்தக் கைக்குட்டையை நீங்கள் கடைசியாக எப்பொழுது பார்த்தீர்கள் என்று கூற முடியுமா."

விஜயா ஏதோ கூற வாயெடுத்தாள். அதற்குள் அறைக் கதவைத் திறந்து கொண்டு இருவர் நுழைந்தார்கள். அவர்களில் ஒருவன் பயில்வான் போலத் தோற்றமளித்தான்.

'பாரிஸ்டர் சார்! என் பெயர் நாகநாதன். நீங்கள் விஜயாவை இவ்வாறு கேள்விகளால் துளைப்பது எனக்குப்பிடிக்கவில்லை'.

''மிஸ்டர் நாகநாதன்! உங்களுக்குப் பிடிப்பவை எவைஎன்று தெரிந்து கொண்டு அதன்படிதான் நடக்க வேண்டும் என்ற கட்டுப்பாடுஎனக்கில்லை''

பாரிஸ்டர் என்னோடு வந்திருப்பவன் யார் தெரியுமா? சாண்டோ மல்லையா! அவனது வேலை என்ன தெரியுமா? விஜயாவினுடைய உடலுக்கும் உள்ளத்திற்கும் ஊறு விளைவிப்பவர்களை தூக்கி பந்தாடுவதுதான் அவன் வேலை. ஆதலால் நீங்கள் விஜயாவின் மனம் புண்படும்படியான அல்லது அவள் பதில் கூற முடியாத, கூறக்கூடாத கேள்விகளைக் கேட்க வேண்டாம்''

''ஒ . . . . அப்படியா! இப்படி ஒரு தண்டச் சோறு நேற்று வரை இங்கு இல்லையே!''

''வக்கீல் சார்! இந்த வட்டாரத்தில் யாரும் என்முன் நிமிர்ந்து பேசப்பயப்படுவார்கள். அவ்வளவு வலிமை பொருந்த என்னைத் தண்டச்சோறு என்று கூறிவிட்டீர். பரவாயில்லை. இது நமது முதல் சந்திப்பு. ஆதலால் மன்னித்தேன். உமது வாய்ச் சவாடல்களை கோர்ட்டில் வைத்துக் கொள்ளுங்கள்.''

''மல்லையா! உனது சவால்களை கோதா மேடையில் வைத்து கொள்.'

வக்கீல் சார்! நான் நினைத்தால் எந்த இடத்தையும் கோதா மேடையாக ஆக்குவேன். ஆனால் உன்னால் எல்லா இடத்தையும் கோர்ட் ஆக்க முடியாது'.

சாண்டோ மல்லையா மெதுவாக நகர்ந்து வந்து ராஜாவினுடைய தோள் மீது தனது கைகளை வைத்து அழுத்தினான். ராஜா கோபம் கொள்ளலானான்.

'மல்லையா! உன்னை எச்சரிக்கிறேன் கைகளை எடு.'

மல்லையா கைகளை எடுக்கவில்லை. மேலும் மேலும் அழுத்தினான். ராஜா ஒரு சுழல் சுழன்று திரும்பினான். கண்ணிமைக்கும் நேரத்தில் ஆ' என்ற அலறலுடன் மல்லையா ஒரு மூலையில் போய் விழுந்தான்.

"விஜயா! சந்தர்ப்பம் நேரும் போது ஜூடோவை உபயோகப்படுத்துவேன் என்று கூறினேன் அல்லவா. இப்பொழுது பார்த்தீர்களா? மறுபடி நேரம் அனுமதிக்கும் போது சந்திப்போம்."

ஒரு சிகரட்டைப்பற்ற வைத்துக்கொண்டு ராஜா மிக மிசாதாரணமாக வெளியே திரும்பினான்.

## *பிடிபட்ட கிளியும் நாடி வந்த கடிதமும்*

சோகமே உருவாக லதா சிறைக் கம்பிகளுக்கு பின்னால் நின்று கொண்டிருந்தாள். பாரிஸ்டர் ராஜா அவளைப் பார்க்க அங்கே வந்தார். கடலில் வழி தெரியாமல் தவித்த கப்பல் மாலுமிக்கு கலங்கரை ஒளி கண்ணில் பட்டது போல் லதா தன் ராஜாவைப் பார்த்தவுடன் தன் கவலைகளை மறந்து வணக்கம் தெரிவித்தாள்.

"லதா! உன்னிடம் மேலும் சில கேள்விகளுக்குப் பதில் எதிர்பார்த்து வந்துள்ளேன். உண்மையை அப்படியே கூறுவாயா?"

"அண்ணா இதுவரை நான் தங்களிடம் எதையும் மறைக்கவில்லை. இனிமேலும் மறைக்க மாட்டேன்"

"லதா! நான் பொதுவாக எனக்கு வரும் கேஸ்களை பலவிதமாக டீல் பண்ணுவதுண்டு. ஒன்று உன்னையே பேச விட்டு நீ கூறுவது யாவும் உண்மை என்று வாதாடி உன்னை விடுதலையடையச்செய்வது, இரண்டாவது முறை நாம் பேசாமலிருப்பது அதாவது அவர்களிடமிருந்து காப்பாற்றிக் கொள்ள தற்காப்பு கேடயமாக மாறி அவர்கள் கூறும் குற்றச் சாட்டுக்கள் நம்மீது ஒட்டாமலிருக்கச் செய்வது. மூன்றாவது முறைக் கேசை உடனே நீதி மன்றத்திற்கு கொண்டு சென்று அவர்கள் கூறுவது பொய், நாம் நிரபராதி என்று வாதாடுவது. இதில் மூன்றாவது முறையை பாஃலோ பண்ணப் போகிறேன்"

"அண்ணா! நீங்கள் என்ன செய்தாலும் எனக்கு சம்மதம் நான் விடுதலையாவேனா?"

எனது சந்தேசங்களுக்கு இன்னும் விடை கிடைக்க வில்லை. கிடைத்த பின் தான் உறுதி. நீ மாண்டு போன சுந்தரத்தை யாவது அல்லது நீ கல்லறை மாளிகையில் சந்தித்த ராமுவை யாவது இதற்கு முன் சந்தித்திருக்கிருயா?

“இல்லை.”

உனக்கு காட்டுப் பங்களாவிற்கு சென்று திரும்பும் போது, குறுக்கு வழியில் வரச்சொன்ன விஜயா, அங்கிருந்து திரும்பும் போது செம்மண் சாலையில் இரண்டு கிலோ மீட்டர்வந்தபின் குளம். ஆலமரம் வந்த பின்பு வலதுபுறம் திரும்பச்சொன்னளா, இடதுபுறம் திரும்பச்சொன்னளா? நன்ருக ஞாபகப்படுத்தி கூறு.

இடதுபுறம் தான் திரும்பக் கூறினுள். அதை நான் எனது நோட்டில் குறித்துக் கொண்டேன். ஆனல் அதை யாரோ கிழித்து விட்டதால் ஒரிஜினல் மேப்பையே எடுத்துச்சென்றேன். அதில் வலதுபுறம் திரும்ப வேண்டும் என்று அம்புக்குறி போட்டிருந்தது.

அந்த மேப் இபொழுது எங்கே? COMICS PDF TIMES

காட்டுப் பங்களாவிற்கு செல்லும் போது எடுத்துச் சென் றேன். அதற்கு பின் என்ன ஆயிற்று என்றே தெரியவில்லை.

அந்த மேப்பை இப்பொழுது நீ பார்த்தால் அடையாளம் கண்டு கொள்வாயா?

நிச்சயமாக! அதன் வலது கோடியில் பின்புறம் ஒரு சிறிய மைக்கறை உள்ளது

சரி! மற்ருெரு கேள்வி. நீ கல்லறை மாளிகையிலிருந்து திரும்பியபின் விஜயாவின் அறை சூறையாடப் பட்டிருப்பதாகக் கூறினுயே! ஏன் என்று உன்ஞல் ஊகிக்க முடிகிறதா?

எவ்வளவோ யோசித்துப் பார்த்து விட்டேன். எனது அறையில் எல்லா சாமான்களும் அப்படியேயிருந்தன. எதை யோ தேடி வந்தவன் அது எனது ரூமில் இல்லையென்று நினைத்திருக்கிருன்.

ஏன்? அவன் தேடிவந்த பொருள் உன் ரூமுக்குள் வந்த வுடன் கிடைத்திருக்கலாமல்லவா?

ஆம்! அப்படியுமிருக்கலாம்.

லதா! உனக்கும் விஜயாவிற்கும் தொடர்பு ஏற்படுத்தும் லட்டரோ, பைலோ அல்லது விஜயா யாருக்கும் தெரியக் கூடாது என்பதற்காக உன்னிடம் எதையாவது கொடுத்து மறைத்து வைக்கச் சொல்லி கொடுத்திருந்தாளா?

அப்படி ஒன்றும்... ஆ!... ஞாபகம் வருகிறது. ஒரு சீலிட்ட கவரைக் கொடுத்து நான் அவளிடமிருந்து நிரந்தர மாக பிரிந்து செல்லும் போதோ அல்லது அவள் திடீரென இறந்து விட்டாலோ பிரித்து படிக்கச் சொன்னாள். இடையில் படிக்கக் கூடாதாம்.

ஏதாவது உயிலாக இருக்குமோ?

தெரியவில்லை.

நீ திரும்பியவுடன் அது உனது அறையில் இருந்ததா?

அதைக் கவனிக்கவில்லை.

சரி! அதைப்பற்றி யாரிடமும் கூறாதே! நான் வருகிறேன்.

ராஜா தனது பங்களாவிற்கு வந்து சேர்ந்த போது வசந்தி ஒரு கவரை அவனிடம் கொண்டு வந்து கொடுத்தாள். அது ஒரு மொட்டைக் கடிதம். எழுதியவரின் பெயர் இல்லை.

கவரைப் பிரித்தான் ராஜா. ஒரு கடிதமும் அதோடு ஒரு வரை படமும் இணைக்கப்பட்டிருந்தது. கடிதத்தைப் படிக்க ஆரம்பித்தான்.

"அன்பரே!

இத்துடன் இணைக்கப்பட்டுள்ள வரை படம் உங்களுக்கு மிகவும் உதவியாக இருக்குமென நினைக்கிறேன். விஜயாவினால் ஒரு வருடத்திற்குமுன் வரையப்பட்டது. அவளுடைய எழுத்துக்கள். காட்டுப்பங்களாவிலிருந்து திரும்பும் குறுக்கு வழியைக் காட்டுவது. நன்றாகக் கவனியுங்கள். குளத்தருகே அம்புக்குறி வலதுபுறம் காட்டுகிறது. இதை கொண்டு சென்ற லதா தவற விட்டு விட்டாள். ஒரு எச்சரிக்கை... விஜயா - அவளைச் சாதாரணமாக நினைக்காதீர், அவள் எழுத்திலே ஷேக்ஸ்பியர் ஆனால்...! சரசத்திலே கிளியோபாத்ரா!

இப்படிக்கு

உண்மை விளம்பி"

கடிதத்தை படித்து முடித்த ராஜா மேப்பைப் பாரத்தான் அம்புக்குறி வலதுபுறம் திரும்ப வேண்டும் என்று காட்டியது அப்பொழுது ரமேஷ் அங்கு வந்து சேர்ந்தான்.

''அத்தான்! இக்கடிதம் யாரிடமிருந்து வந்திருக்கும் 'கல்லறை மாளிகையில் லதாவை வரவேற்ற ராமுவிடமிருந்து தான் வந்திருக்க வேண்டும். அவனைச் சந்தித்தால் கொலையாளி யாரென்று தெரிந்து கொள்ளலாம்.''

''ராமுவை எப்படிக் கண்டு பிடிப்பது.''

'ராஜா! நேற்று மாலை நீ விஜயா மாளிகைக்குப் போனாயே! ஏதாவது விவரம் கிடைத்ததா?''

''விஜயாவின் வீட்டில் இப்பொழுது இருமனிதர்கள் அவளோடு கூட இருக்கிறார்கள்.''

''யார் அவர்கள்?'

நாகநாதனும், சாண்டோ மல்லையாவும். என்ன? நாக நாதனும், மல்லையாவுமா? இருவரும் மிகமோசமான பேர்வழி களாயிற்றே. நாகநாதன் ஒரு நல்ல பாம்பு; மல்லையா ஒரு காட்டெருமை.

அந்தக்காட்டெருமை என்னை வம்புக்கிழுத்தது. ஜூடோ முறையில் ஒன்று கொடுத்து விட்டு வந்திருக்கிறேன்.

''வசந்தி! இந்தக் கடிதத்தைப் பற்றி நீ ஏதாவது கூற முடியுமா? பார்!'

இக்கடிதம் புதிய கோத்ரெஜ் டைப்ரைட்டிங் மிஷினில் மிகச் சிறந்த, அதாவது நன்றாக டைப்பிங் தெரிந்த ஒருவரால் டைப் அடிக்கப்பட்டுள்ளது.

''அது போதும்'

''ராஜா! நீ கல்லறை மாளிகையில் கண்டெடுத்த கைக்குட் டையை போலீஸில் கொடுத்து விட்டாயா? அங்கு பாவல்

புரிந்து கொண்டிருந்த காவலர்கள் நீ கைக்குட்டையை எடுத்து வந்த விஷயத்தை மேலிடத்தில் தெரிவித்து விட்டார்களாம். அதை வைத்துக் கொண்டு பி.பி: (பப்ளிக் பிராஸிகியூடர்) சாட்சி யங்களை நீ மறைத்ததாக கூறி உன் மீது நடவடிக்கை எடுக்கப் போகிறாராம்.

''ரமேஷ்! என்னை சட்டம் தெரியாதவர்கள் என்று அவர்கள் நினைக்கிறார்கள், அப்படி ஒரு பிரச்சனையை நீதிமன்றத்தில் அவர் கிளப்பினால் சட்டம் புரியாதவர் அவர் என்று என்னால் வாதாடி நிருபிக்க முடியும், நீ அதைப்பற்றிக் கவலைப்படாதே!

## நீதி தேவன் சன்னதியில்

கோர்ட்டில் எல்லோரும் ஆவலுடன் ஜட்ஜ் வரவை எதிர் பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஜட்ஜ் வந்தவுடன் எல்லோரும் எழுந்து நின்றார்கள். தனது ஆசனத்தில் ஜட்ஜ் வந்து அமர்ந்த வுடன் எல்லோரும் அமர்ந்தார்கள் விசிட்டர் பக்கத்தில் கூட்டம் நிரம்பி வழிந்தது. பப்ளிக் பிராஸிகியூடர் கணபதி எழுந்தார். சபையில் பயங்கரமான அமைதி நிலவிக்கொண்டிருந்தது. லதா குற்றவாளிக் கூண்டில் நின்று கொண்டிருந்தாள்.

''யுவர் ஆனர்! இந்த நீதிமன்றம் எத்தனையோ கொலை வழக்குகளைக் கண்டுள்ளது. ஆனால் இவ்வளவு இளம்பெண் ஒரு ஆணை கொன்றதாக இதுவரை நாம் கேள்விப்பட்டதில்லை. இதோ கூண்டில் நிற்கும் லதா விஜயாவால் ஓர் ஒப்பந்தத்தைப் பேசி முடிப்பதற்காக காட்டுப் பங்களாவிற்கு அனுப்பப்பட்டாள் திரும்பி வரும்போது குறுக்கு வழியில் வந்து சேர விஜயாவால் வழி கூறப்பட்டுள்ளது. இடதுபுறம் தான் திரும்ப வேண்டும் என்று விஜயா கூறியதற்கு இரண்டு ஆதாரங்கள் உள்ளன. ஒன்று லதாவினுடைய ஷார்ட் ஹேண்ட் நோட்டிலிருந்து கிழித்து எடுக்கப்பட்ட காகிதம். அதில் லதாவே இடதுபுறம் திரும்ப வேண்டும் என்று குறித்திருக்கிறார். மற்றொன்று விஜயா வால் கையெழுத்துப் போட்டு கொடுக்கப்பட்டிருக்கும் மேப்,

அதிலும் இடதுபுறம் தான் திரும்ப வேண்டும் என்று குறிக்கப் பட்டுள்ளது. மேலும் இடதுபுறம் நல்லசாலையாக இருந்தும் வலதுபுறம்திரும்பி லதா சென்றுள்ளாள் என்றால் அதுஅவளால் திட்டமிட்டு நடத்தப்பட்டது என்று நாம் தெள்ளத்தெளிவாக உணர்ந்து கொள்ளலாம். திட்டமிட்டே லதா கல்லறை மாளிகைக்குச் சென்றிருக்கிறாள். கொலையுண்ட சுந்தரத்தை லதாவுக்கு முன்பே தெரிந்திருக்கிறது. இருவருக்குள் கருத்து ஏற்பட்டுள்ளது. நயவஞ்சகமாக சுந்தரத்தை கொல்ல லதா திட்டமிட்டு அங்கு வரச்சொல்லி சிறிய கட்டாரி கொண்டு கழுத்திலும், மார்பிலும் குத்திக் கொன்றாள். அதற்கு மறுக்க முடியாத பல ஆதாரங்கள் உள்ளதால் கோர்ட்டார் லதாவை குற்றவாளி என்று உறுதிப்படுத்த வேண்டுகிறேன்.

பப்ளிக் பிராஸிகியூடர் கணபதி தனது ஆசனத்தில் உட் கார்ந்தார். விசிட்டர் பகுதியில் சிறிது சலசலப்பு உண்டாகியது. பாரிஸ்டர் ராஜா எழுந்தவுடன் அந்தச்சலசலப்பு அடங்கியது.

''யுவர் ஆனர்! இவ்வளவு நேரம் அருமை நண்பர் கணபதி அவர்களின் கற்பனைக் கதையைக் கேட்டோம். கொலை நடந்த இடத்திற்கு லதா சென்றால் என்பதற்குத் தான் சாட்சியங்கள் உள்ளனவே தவிர அவள் கொலை செய்தாள் என்பதற்கு எந்த ஒரு சிறு சாட்சியமும் இல்லை. மேலும் சுந்தரத்தை இதுவரை லதா பார்த்ததே இல்லை. அப்படி இருக்கும் போது அவனை, கொலை செய்ய வேண்டிய நிர்பந்தம் லதாவுக்கு இல்லை. மேற் கொண்டு நான் கூறுவதற்கு ஒன்றுமில்லை.''

''சரி. இனி சாட்சியங்களின் விசாரணை ஆரம்பிக்கலாம். முதலில் ரங்கத்துரை''

''ரங்கதுரை . . . . ரங்கதுரை . . . . ரங்கதுரை''

ரங்கத்துரை விசாரணைக் கூண்டில் வந்து நின்றான். பிராஸி கியூடர் கணபதி அவரை விசாரிக்க எழுந்து வந்தார்.

'உங்கள் பெயர்'

'ரங்கதுரை'

'நீங்கள் தான் கல்லறை மாளிகையின் உரிமையாளரா?'

ஆமாம். பிரபல நடிகர் குமார் ஐந்து வருடங்களுக்கு முன் இறந்த பின் அவரது தூரத்து உறவினனுன எனக்கு அவருடைய சொத்துக்களில் சில வந்தன. அதில் தான் இந்த பங்களாவும் வந்தது.

இப்போது யாருக்காவது வாடகைக்கு அந்த மாளிகையை விட்டுள்ளீர்களா?

ஆமாம்! ஒரு வருடத்திற்கு முன் ராதா என்பவரிடமிருந்து போன்வந்தது. அவர் அம்மாளிகையை வாடகைக்குக்கேட்டார். நானும் சரியென்றேன். அது முதல் மாதம் முதல் வாரத்தில் வாடகைப் பணம் ரூபாய் நூறு என்னைத் தேடி வந்து விடும்.

நீங்கள் கடைசியாக அந்த மாளிகைக்கு எப்போது போனீர்கள்?

நான் கடைசியாகப் போய் குறைந்தது மூன்று மாதங்கள் இருக்கும்.

யுவர் ஆனர்! என் கேள்விகள் அவ்வளவுதான்!.

பிராஸிகியூடர் சென்று தனது ஆசனத்தில் அமர்ந்தார். ரராஜா குறுக்கு விசாரணை செய்ய எழுந்து வந்தார்.

மிஸ்டர் ரங்கதுரை! நீங்கள் அந்த மாளிகையை யாருக்கு வாடகைக்கு விட்டிருக்கிறீர்கள்.

ராதா என்பவருக்கு.

எப்படி?

டெலிபோன் மூலமாக!

ராதா என்பவர் ஆணு? பெண்ணு?

நான் நேரில் பார்த்ததில்லை. இருந்த போதிலும் அவரது குரலை வைத்துக் கூறுகிறேன். அவர் பெண்தான்.

ஏன் மிஸ்டர் ரங்கதுரை! ஆளை நேரில் பார்க்காமல் யாராவது தனது மாளிகையை வாடகைக்கு விடுவார்களா?

அந்த மாளிகை நகருக்குள் இருந்தால் வாடகைக்கு நிறையப் பேர்கள் வருவார்கள். வாடகையும் நிறையவரும். ஆனால் அது காட்டுக்குள் இருக்கிறது. மேலும் கல்யாணி, குமார் இவர்களது ஆவி நடமாடுவதாக வேறு செய்தி உலாவுகிறது. அந்த காட்டுக்குள் யாரும் இருபது ரூபாய் வாடகைக்குக் கூட வர மாட்டார்கள். இப்படி இருக்கும் போது யாரோ ஒருவரிடம் இருந்து மாதம் தவறாமல் ரூபாய் நூறு வருகிறதென்றால் நான் ஏன் அவரைப் பற்றி கவலைப் படவேண்டும்.

டெலிபோனில் கேட்ட குரல் பெண் குரல் என்று சொன்னீர்களே! அது கிட்டதட்ட யாருடைய குரலை ஒத்திருக்கிறது.

இந்தக் கேள்வியைக் கேட்டவுடன் கணபதி எழுந்தார்.

யுவர் ஆனர்! இந்த வழக்குத் தேவையில்லாததை நண்பர் கேட்கிறார். நான் இதை ஆட்சேபிக்கிறேன்.

யுவர் ஆனர்! கொலை நடந்த வீட்டில் குடியிருந்தவர் எனக் கூட தெரிந்து கொள்ளக்கூடாது என்று நண்பர் கணபதி நினைகிறாரா.

ஆட்சேபனை நிராகரிக்கப் பட்டது.

மிஸ்டர் ரங்கதுரை, டெலிபோனில் பேசிய குரல் லதாவினுடைய குரலைப் போல இருக்கிறதா?

இல்லை கிட்டதட்ட விஜயாவின் குரலை ஒத்துள்ளது.
சரி நீங்கள் போகலாம்,

அடுத்து சுந்தரத்தின் மனைவி மஞ்சுளா விசாரணைக் கூண்டில் வந்து நின்றாள். கணபதி அவளை விசாரிக்கலானார்

உங்கள் பெயர்தான் மஞ்சுளாவா!

ஆம்.

இறந்து போன சுந்தரத்துக்கு நீங்கள்,
அவருடைய மனைவி,
அவர் இப்பொழுது,
இறந்து விட்டார்
நீங்கள் அவரை கடைசியாக எப்போது சந்தித்தீர்கள்.
ஒரு வாரத்திற்கு முன்,
எங்கே போகிறேன் என்று கூறினார்.

அவர் எப்போதும் எங்கே செல்கிறேன் என்றும் எப்போது திரும்புவேன் என்றும் கூறிவிட்டுச் செல்ல மாட்டார்.

இந்த போட்டோவிலிருப்பது உங்கள் கணவர்தானா
என்று பார்த்துச் சொல்லுங்கள்!
ஆம் என் கணவர்தான்
அவ்வளவுதான். இனி குறுக்கு விசாரணை செய்யலாம்.

ராஜா எழுந்தான். அம்மா! உங்கள் கணவர் கல்லறை மாளிகைப் பக்கம் ஏன் போனார் என்று கூற முடியுமா

நானும் பல முறை யோசித்துப் பார்த்தேன், என்னால் யூகிக்க முடியவில்லை.

உங்கள் கணவர் எப்போதாவது உங்களிடம் கல்லறை மாளிகையைப் பற்றி கூறியதுண்டா?"
இல்லை
நீங்கள் அங்கு போயிருக்கிறீர்களா?
கல்லறை மாளிகை எந்தப் பக்கம் உள்ளதென்றே எனக்கு தெரியாது!
நன்றி! நீங்கள் போகலாம்!

அடுத்து சுந்தரத்தின் உடலை போஸ்ட் மார்ட்டம் செய்த அரசாங்க ஆஸ்பத்திரி டாக்டர் விசாரிக்கப்பட்டார்.

நீங்கள்தான் சுந்தரத்தை போஸ்ட் மார்ட்டம் செய்த டாக்டரா?

சுந்தரத்தின் பிரேதத்தை சோதனை செய்தவர்!

உங்களின் முடிவென்ன?

சுந்தரம் இறப்பதற்கு முன் பிரியாணி சாப்பிட்டிருக்கிறார். சாப்பிட்டபின் சரியாக ஒரு மணிநேரத்திற்குள் சுமார் ஆறு அங்குலம் நீளமுள்ள பிச்சுவாவினால் கழுத்திலும் மார்பிலும் குத்தப்பட்டுள்ளார்.

அப்படியானால் அவன் எப்பொழுது இறந்தான் என்று உங்களால் உறுதியாகக் கூறமுடியாது. அப்படித்தானே!

அதுவல்ல எனது அபிப்பிராயம்...!

உங்களது அபிப்பிராயங்களைக் கேட்கவில்லை. உறுதியாகக் கூறமுடியுமா; முடியாதா.

உறுதியாகக் கூறமுடியாது! ஏனெனில் அவன் எப்போது சாப்பிட்டான் என்று கூறமுடியாதல்லவா!"

சரி! குறுக்கு விசாரணை ஆரம்பிக்கலாம்.

கணபதி சென்று அமர்ந்தவுடன், ராஜா எழுந்து வந்தான்.

டாக்டர்! உங்கள் அபிப்பிராயம்.. என்று கூறுவீர்கள். அதன்படி சுந்தரம் எப்போது மாண்டிருப்பான்.

கணபதி ராஜாவினுடைய கேள்வியை ஆட்சேபிக்கலானார். "யுவர் ஆனர்! இந்த வழக்கில் இப்போது டாக்டரின் அபிப்பிராயத்தைப் பற்றி தேவையே இல்லை. ஆதலால் நான் இந்த கேள்வியை ஆட்சேபிக்கிறேன்.

யுவர் ஆனர்! பொதுவாக போஸ்ட் மார்ட்டம் செய்யும் போது உடம்பினுடைய சூடு எவ்வளவு குறைந்துள்ளது என்று கணக்கிட்டு அதன் படிதான் டாக்டர்கள் கொலை எத்தனை மணிக்குத் தான் நடந்திருக்கலாம் என்று கூறுவார்கள். எந்த டாக்டரும் இத்தனை மணிக்குத்தான் கொலை நடந்தது என்று கூறமாட்டார்கள். இத்தனை மணிக்கு நடந்திருக்கலாம் என்றுதான் கூறுவார்கள். அப்படி இருக்கும் பொழுது டாக்டர் ஏன் அபிப்பிராயம் கூறக்கூடாது.

ஆட்சேபனை நிராகரிக்கப்பட்டது.

யெஸ் டாக்டர்! நீங்கள் கூறுங்கள்,

அதிகாலை மூன்றரை மணிக்கு கொலை நடந்திருக்கலாம்

டாக்டர் நீங்கள் போகலாம்.

அடுத்து கணபதி விஜயாவை விசாரிக்க அழைத்தார் கண்ணைக் கவரும் வண்ண உடை உடுத்தி விஜயா கூண்டில் ஏறி நின்றாள்.

உங்கள் பெயரென்ன?

விஜயா

லதா உங்களிடம் என்ன வேலை செய்தாள்

என்னிடம் ஸ்டனேவாக வேலை பார்த்தாள்,

அவளை நீங்கள் காட்டுப்பங்களாவிற்கு எதற்கு அனுப்பினீர்கள்?

ஓர் ஒப்பந்தம் விஷயமாக நரசிம்மன் என்பவரைச் சந்திக்க,

காட்டுப் பங்களாவிலிருந்து திரும்பி வர குறுக்கு வழி ஒன்றை நீங்கள் லதாவிடம் கூறினீர்களா,

ஆமாம்-

COMICS PDF TIMES

அதைக் கூறமுடியுமா

காட்டுப் பங்களாவின் பின்புறமுள்ள செம்மண் சாலையில் வந்தாள். இரண்டு கிலோ 'மீட்டர் வந்தவுடன் ஒரு குளமும் ஒரு பெரிய ஆலமரமும் இருக்கும். அங்கு பாதை இரண்டாக பிரியும். அதில் இடதுபுறம் திரும்ப வேண்டும். திரும்பினல் மெயின் ரோட்டுக்கு வந்து சேரலாம் என்று கூறினேன்,

லதா இதை குறித்துக் கொண்டாளா!

ஆமாம்

இதோ இந்தக் காகிதத்தைப் பார்த்து என்னவென்று கூற முடியுமா ?

நான் கூறிய வழிகளை லதா குறித்துக் கொண்ட காகிதம் இதுதான்.

இது லதாவின் கையெழுத்துதானே?

ஆமாம்.

இது எங்கிருந்து எடுக்கப்பட்டது.

லதாவினுடைய மேஜைக்கருகிலுள்ள குப்பைக் கூடையில்.

யார் எடுத்தது.

இன்ஸ்பெக்டர்.

அவ்வளவு தான்! குறுக்கு விசாரணை ஆரம்பிக்கலாம்.

ராஜா எழுந்துவந்தான். "நீங்கள் லதாவிடம் அன்று என்ன பேசினீர்கள்?

கணபதி எழுந்தார். "யுவர் ஆனர்! கேள்வியை நான் ஆட்சேபிக்கிறேன். வழக்கிற்கு சம்பந்தமில்லாத இந்த மாதிரி கேள்விகளைக் கேட்டு ராஜா வழக்கைக் குழப்பப் பார்க்கிறார்.

"யுவர் ஆனர்! நண்பர் கணபதி தனது விசாரணையில் அவர்களின் சம்பாஷணையில் பாதியை அதாவது குறுக்கு வழியில் கிளம்பி வருவது வரைக் கேட்டறிந்தார். நான் அவர்களது பேச்சு முழுவதையும் கூறக் கேட்கிறேன். காரணம் அவர்கள் ஏன் குறுக்கு வழியில் வரச் சொன்னார்கள் என்பதற்கு ஆதாரங்கள் விஜயாவினுடைய பேச்சிலிருந்து கிடைக்குமல்லவா?

"யுவர் ஆனர்! அவர்கள் தங்களது சொந்தவிஷயமாகவோ அல்லது வேலை விஷயமாகவோ சென்றிருக்கலாம். அதையெல்லாம் கேட்டு நாம் நேரத்தை வீணாக்க வேண்டியதில்லை.

நண்பர் கணபதி சிறிது நேரம் பொறுப்பாராக! அது வழக்குக்கு எவ்வளவு தொடர்புள்ளது என்று இப்போது நிரூபிக்கிறேன்.

"மிஸ் விஜயா! நீங்கள் அப்போது லதாவோடு எவ்வளவு நேரம் பேசிக் கொண்டிருந்தீர்கள்.

சுமார் பதினைந்து நிமிடம் பேசிக் கொண்டிருந்தேன்.

காட்டுப் பங்களாவில் அவள் கூறவேண்டியதெல்லாம் கூறினீர்கள்.

ஆமாம்,

அதாவது அங்கிருந்து திரும்பி வரும் குறுக்கு வழியை,

ஆமாம்.

வேறு ஏதாவது கூறினீர்களா?

அந்த நரசிம்மனைப் பற்றி லதாவிடம் எச்சரித்தேன்.

எப்படி?

நரசிம்மன் ஒரு மோசமான பேர்வழியென்றும் பார்த்துப் பழகவேண்டும் என்றும் எச்சரித்தேன்.

"விஜயா! தாங்கள் லதாவுக்கு குறுக்கு வழியைக் கூறும் போது எப்படி கூறினீர்கள்.

. . . . . . . . . .

அதாவது, லதாவுக்கு நீங்கள் வழி கூறும் போதுஏதாவது மேப் அல்லது குறிப்புகளை வைத்துக் கொண்டு கூறினீர்களா

இருக்கலாம்.

அப்படியென்றால் அந்தப் படம் எங்கே?

என்னிடம் அங்கிருந்து திரும்பி வரும் குறுக்கு வழியைக் காட்ட இரண்டு மேப்புகள் இருந்தன. ஒன்று எங்கே என்று தெரியவில்லை. மற்றொன்றை இன்ஸ்பெக்டரிடம் கொடுத்துள்ளேன்.

இரண்டு படங்களிலும் ஒரே மாதிரி தான் வழி குறிக்கப் பட்டிருக்குமா?

ஆமாம்.

நீங்கள் லதாவுக்கு வழி கூறும் போது இரண்டு மேப்பும் உங்களிடம் இருந்தனவா?

அதை . . . . . நான் திடமாக கூறமுடியாது.

அப்படியென்றால்

இருந்திருக்கலாம் . . . இல்லாமலும் இருந்திருக்கலாம்.

"யுவர் ஆனர்! நான் ராஜாவினுடைய கேள்வியை மறுபடியும் ஆட்சேபிக்கிறேன். வழக்குக்குச் சம்பந்தமில்லாத கேள்விகளையே திரும்பத் திரும்ப கேட்டுக் கொண்டேயிருக்கிறார்.

"மிஸ்டர் ராஜா! நீங்கள் எதற்காக இந்தக் கேள்வியைக் கேட்கிறீர்கள் என்பதை நான் தெரிந்து கொள்ளலாமா?

"யுவர் ஆனர்! இரண்டு மேப் இருந்ததாக விஜயாவே ஒத்துக் கொள்கிறார்கள், ஆனால் இப்போது கோர்ட்டாரின் முன் னால் இருப்பது ஒரு மேப், அப்படியென்றால் மற்றொன்று எங்கே? இரண்டிலும் வழி ஒன்றாக இருந்திருக்காது. சந்தர்ப்பதிற்கும் சூழ்நிலைக்கும்சாதகமாக விஜயா இந்த இரண்டாவது மேப்பைத் தயாரிக்கிறார் என்பது என் எண்ணம். அப்படியானால் முதல் மேப்பை யார் எடுத்திருப்பார்கள். லதா எழுதிய குறிப்பு அவளுக்கு உபயோகப்படாமல் கிழித்து எறியப்பட்டுள்ளது. இதிலிருந்து அவள் பாதை மாறிப் போக வேண்டும் என்பது விஜயாவின் விருப்பமாகக் கூட இருக்கலாம்- ஆதலால் நான் விஜயாவிடம் அந்தக் கேள்விகளைக் கேட்கிறேன்.

ஆட்சேபனை நிராகரிக்கப்பட்டது.

யுவர் ஆனர்! அந்தப் படம் வழக்கிற்கே சம்பந்தமில்லாதது உங்கள் ஆட்சேபணைக்கு தீர்ப்பு வழங்கியாகி விட்டது.

கணபதி சென்று தனது ஆசனத்தில் அமந்தார், ராஜா தனது கேள்விகளைத் தொடர்ந்தார்.

மிஸ் விஜயா! உங்களிடம் இரண்டு படங்கள் இருந்தனவா சரியாக ஞாபகப் படுத்திக் கூறுங்கள்

இல்லை. ஒரு படம்தான் இப்போது இங்கு உள்ளது.

பாரிஸ்டர் கணபதியை நோக்கினார். அந்தப்படம் இப் போது உங்களிடம்தான் உள்ளதா?

ஆமாம்.

அதை நான் பார்க்க முடியுமா?

உறுதியாக நான் அதைக் காட்ட முடியாது. அது இந்த வழக்கை குழப்புவதாகும் மேலும் மேலும் வழக்கு குழம்ப நானும் காரணமாக மாற மாட்டேன்.

அது விஜயாவினால்தான் வரையப்பட்டதா?

அருமை நண்பர் ராஜா என்னை விசாரிக்க வேண்டுமானால் தனது சாட்சியாக என்னை கூண்டில் ஏறச் சொல்லட்டும். நானும் பதிலளிப்பேன், கேள்விகள் நியாயமான நோக்கமுடையனவாக இருந்தால்!

நீதிபதி கணபதியை நோக்கி, மிஸ்டர் கணபதி! அவர் கேட்கும் படத்தை காட்டக் கூடாது என்பதற்கு ஏதாவது காரணம் உண்டா?

யெஸ் யுவர் ஆனர்! அந்தப் படத்தையும் விஜயாவையும் வைத்துக் கொண்டு இந்த வழக்கைக் குழப்ப வேண்டும் என்பதே நண்பரின் எண்ணம். விஜயா தன்னிடம் மேப் இல்லை என்று கூறிவிட்ட போதிலும் மேலும் மேலும் அதைப் பற்றியே கேட்டுக் கொண்டிருக்கிறார். விஜயாவின் வீட்டிற்குள் யாரோ சென்று எல்லா பொருட்களையும் வீசியெறிந்து எதையோ தேடி இருக்கிறார்கள் அப்பொழுதிருந்து அந்த மேப்பைக் காணவில்லை. பின்னும் பாரிஸ்டரும், இன்ஸ்பெக்டரும் விஜயா வீட்டிற்கு சென்றார்கள். அவர்களுக்கு விளக்கம் கொடுக்கவே விஜயா அந்த புது மேப்பை வரைந்திருக்கிறாள். அது இப்போது வழக்கோடு சம்பந்தப் பட்டு விட்டது அவ்வளவுதான்.

ராஜா நீதிபதியைப் பார்த்து, யுவர் ஆனர்! நண்பர் திரு. கணபதியிடமிருக்கும் மேப் கல்லறை மாளிகைக்கு வழி காட்டுகிறதா என்று நான் பார்க்க வேண்டும்

யுவர் ஆனர்! நிச்சயமாக அதை நான் ராஜாவுக்கு காட்டப் போவதில்லை. அவர் தனது குறுக்கு விசாரணையைத் தொடரட்டும்.

முடியாது! நான் அந்த மேப்பைப் பார்த்தே ஆக வேண்டும் ஏனென்றால் அதை வைத்துத்தான் விஜயா லதாவுக்கு வழி கூறியிருக்கிறாள். அதை நான் பார்க்கக் கூடாதா?

இல்லை! இல்லவே இல்லை! விஜயா இந்த மேப்பை வைத்து வழி கூறவில்லை திரு. பிள்ளையவர்கள் மிஸ்டர் ராஜாவுக்கும் இன்ஸ்

பெக்டருக்குமாக வரையப்பட்டதுஎன்பது நண்பர் ராஜாவுக்குத் தெரிந்திருக்கும். அப்படியிருந்தும் அவர் கேட்கிருர் என்ருல் அது வழக்கை குழப்புவது தானே!

அப்படியாஞல் நான் எனது கேள்வியைத்திரும்பப்பெற்றுக் கொள்கிறேன்.

கணபதி பெருமிதத்தோடு தனது ஆசனத்தில் வந்து அமர்ந்தார். ராஜா விஜயாவை நெருங்கிஞன்.

விஜயா! லதாவுக்கு நீங்கள் வழி கூறும் போது உபயோகப் படுத்திய மேப் இப்பொழுது உங்களிடம் உள்ளதா?

இல்லே

அது எங்கே?

அது எனக்குத் தெரியாது

அந்தப் படத்திலுள்ள எல்லா விவரங்களும் உங்களுக்கு இப்பொழுது ஞாபகமுள்ளதா?

இருக்கிறது.

அந்தப் படம் இப்பொழுது எங்கே?

அதுதான் என்னிடம் இல்லேயென்று அப்பொழுதே கூறி விட்டேனே!

அந்தப் பழைய படம் உங்களால் தான் வரையப்பட்டதா?

ஆமாம்

அந்தப் படத்தை இப்பொழுது உங்களால் பார்த்தால் அடையாளம் கூற முடியுமா?

முடியும்.

நீங்கள் எப்போதாவது காட்டு பங்களாவிற்கு போயிருக் கிறீர்களா?

நல்லகேள்வி! நான் எவ்வளவோ தடவைபோயிருக்கிறேன்.

அப்படி செல்லும்போது எப்போதாவது வழி தவறி நீங்கள் கல்லறை மாளிகைக்குச் சென்றீர்களா?

கணபதி வெகுண்டெழுந்தார். யுவர் ஆனர்! விஜயாவை இந்த வழக்கோடு சம்பந்தப் படுத்த ராஜா கையாளும் விதம் இது!

யுவர் ஆனர்! என் எண்ணம் அதுவல்ல.

யெஸ் புரோசீட்.

விஜயா பழைய மேப்பை நீங்கள் பார்த்தால் அடையாளம் கூற முடியுமென்று கூறியிருக்கிறீர்கள். இதோ இந்த மேப்பை, பாருங்கள்.

இது உங்கள் கையெழுத்து தானா!

ஆமாம்! என் கையெழுத்து தான்.

யுவர் ஆனர்! ராஜா, விஜயாவிற்கு காட்டிய மேப்பை நான் பார்க்க வேண்டும்.

நான் அதை வழக்கில் எக்ஸ்பிட்டாக ஆக்கவில்லை.

அப்படியானால் சரி.

விஜயா நீங்கள் சொல்லலாம்.

அடுத்து சாட்சியங்களாக முதலில் இன்ஸ்பெக்டர் இளங்கோ விசாரிக்கப் பட்டார். அவர் தனக்கு தெரிந்த விவரங்கள் எல்லாவற்றையும் கூறினார்; அடுத்து கைரேகை நிபுணர் விசாரிக்கப் பட்டார். கொலையாளி கொலை செய்ய உபயோகப் படுத்திய கத்தியின் பிடியில் முன்னேற்பாட்டுடன் கைக்குட்டையினை சுத்திக் கொண்டிருக்க வேண்டும் என்று கூறினார்.

எல்லாருடைய சாட்சியங்களும் விசாரித்து முடிந்தவுடன் நீதிபதி வழக்கை மதியம் 2மணிக்கு ஒத்திவைத்தார். எல்லோரும் லஞ்சுக்காக கலைந்து சென்றார்கள். ராஜா, வசந்தி, ரமேஷோடு நீதிமன்றத்திற்கு எதிரிலிருந்த ஹோட்டல் பிட்லண்டுக்குள் நுழைந்தவுடன் அவருக்காகவே காத்திருந்தது

போல ஹோட்டல் பையன் ஓடி வந்து அவனுக்கு போன் வந்துள்ளதாகக் கூறினான்,

"ரமேஷ்! நாம் இங்கு தான் வரப் போகிறோம் என்று எனக்கே தெரியாது! அப்படியிருக்கும் போது நமக்கு டெலி-போன் வந்துள்ளதென்றால் மிக மிக ஆச்சரியம். டெலிபோன் பண்ணுபவர்கள் நமக்கு மிக அருகில் தான் உள்ளார்கள்.ஒன்று அது இந்த வழக்கில் நான் மௌனமாகயிருக்கவேண்டும் என்ற எச்சரிக்கையாகயிருக்கும் அல்லது நமக்கு உதவியாக ஏதாவது செய்தி வரும்"

ராஜா டெலிபோன் மேஜையருகே வந்து டெலிபோன் ஆபரேட்டரிடமிருந்து ரிசீவரை வாங்கி கொண்டு பேசினான்.

"ஹலோ! நான் ராஜா பேசுகிறேன்"

"அன்பு நண்பரே! நான் யார் என்று தெரியப்படுத்த முடி-யாமைக்கு வருந்துகிறேன். இந்த வழக்கில் ஒரு முக்கியமான, போலீஸாரால் கண்டு பிடிக்காத கண்டு பிடிக்கமுடியாத சாட்சி யத்தை கூற விரும்புகிறேன்"

ராஜா குறுக்கிட்டான், "இதோ . . . . ஒரு நிமிடம்பொறுத் துக் கொள்ளுங்கள் என்று கூறி விட்டு ரமேஷை நோக்கி, "ரமேஷ்! இப்பொழுது நமக்கு வந்திருக்கும் போன் எங்கிருந்து யாரால் பேசப்படுகிறது என்று கண்டுபிடி! ஓடு . . . ,சீக்கிரம்." டெலிபோனில் தனது பேச்சை தொடர்ந்தான். "மன்னித்துக் கொள்ளுங்கள். அதற்குள் இங்கு ஒரு அவசரமான வேலை.

"பாரிஸ்டர்! என்னைக் கண்டுபிடிக்க முயலுகிறீர்கள். அது அவ்வளவு எளிதல்ல! நான் ஒரு மாயாவி! கல்லறை மாளிகை யிலிருந்து எடுத்து வந்தஒரு பிளாஸ்க் மேலுள்ளகைரேகைதான் கொலையாளியின் கைரேகை. அதற்கு ஏற்பாடு செய்யுங்கள். வருகிறேன்."

"புத்திசாலி . . . . போனை வைத்துவிட்டான். அவன் யாரென்றே தெரியவில்லை. கொலை நடந்த பொழுது அங்கேயே

இருந்தவனைப் போல பேசுகிறான். ரமேஷ்! இந்தஹோட்டலுக்கு அருகில் தான் அவன் இருக்க வேண்டும். இங்கிருந்து மூன்று ரோடுகள் உள்ளது. ரமேஷ், வசந்தி! நீங்களிருவரும் இந்த இரண்டு ரோட்டிலும் உள்ள கடைகளில் போன் தொடர்பு உள்ளவைகளில் மட்டும் சற்று முன் ஒருவன் அவசரமாக யாருக்கும்போன் பண்ணினனு? பேசும் பொழுது இடையில் சிறிது நேரம் போனை வைத்துக் கொண்டு பேசாமல் காத்துக் கொண்டிருந்-தானு என்று கேட்க வேண்டும். நான் இந்த ரோட்டில் போகிறேன். சந்தேகப்படும்படியான ஆளாக யிருந்தால் உடனே என்னிடம் தொர்டர்பு கொள்ளவும்,''

மூவரும் மூன்று ரோடுகளிலும் பிரிந்து சென்றூர்கள்.

ராஜா சென்ற ரோட்டில் சிறிது தொலைவில் ஒரு பப்ளிக் டெலிபோன் பூத் இருந்தது.. அதன் பக்கத்தில் ஒரு ரிக்ஷாவில் ஒரு ரிக்ஷாக்காரன் சாய்ந்து உட்கார்ந்து பீடி குடித்துக் கொண்டிருந்தான். ராஜா அவனருகில் சென்றுன்.

''ஏன் சார்? என்ன வேண்டும்?

கொஞ்ச நேரத்திற்கு முன் இங்கிருந்து ஒரு ஆள் போன் பண்ணிஞனு?

COMICS PDF TIMES

அவ்வளவு அவசரம் ஏன் சார்?

என் கேள்விக்கு பதில் கூறினுல் பத்து ரூபாய் தருவேன்.

முதலில் பணம் . . . . ராஜா பத்து ரூபாயை எடுத்துக் கொடுத்தான்.

''சார்! அந்த பியட் காரில் ஒரு ஒட்ட சாட்டமான சிவத்த ஆள் வந்தார். சுருள் சுருளான கிராப். அவர் தான் போன் பண்ணினூர். இப்போது இந்த ஹோட்டலுக்குள் சென்றுள் ளார்.

இன்னும் ஒரு உதவி.

என்ன

இங்கிருந்து நீ உடனே போய் விட வேண்டும்.

நீ தான் பணம் கொடுத்து விட்டாயே! இன்னும் நான் இங்கே ஏன் நிற்கிறேன்?

ராஜா பியட் காரை நோக்கிச் சென்றான். அங்கிருந்த ஒரு டைரியை எடுத்து எதையோ குறித்துக் கொண்டு உடனே டெலி போன் பூத்துக்குள் சென்று ஏதோ ஒரு நம்பருக்கு டயல் பண்ணினான்.

''ஹலோ! ஹோட்டல் பீம விலாஸா?

யெஸ் சார்! நீங்கள் யார் பேசுகிறீர்கள்.

நான் பாரிஸ்டர் ராஜா பேசுகிறேன்! என்னுடைய உதவியாளன் ரமேஷ் அங்கு வந்தானா?

இல்லையே சார் .... சார், கொஞ்சம் பொறுங்கள். அதோ வருகிறார்.

அவனிடம் போனைக் கொடுங்கள்.

''ஹலோ! நான் ரமேஷ் பேசுகிறேன்.

''ரமேஷ்! நான் ராஜா பேசுகிறேன். நான் இப்பொழுது கூறும் முகவரியைக் குறித்துக் கொண்டு உடனே அவனை நம் சாட்சியாக விசாரிக்க கோர்ட்டில் அனுமதி பெற்று நீ சம்மனோடு ஹோட்டல் வசந்தத்திற்கு வரவும். அதன் அருகேயுள்ள டெலி போன் பூத் அருகே நான் நிற்பேன். அட்ரஸை குறித்துக் கொள். ராமு, இருபத்திநான்கு வெஸ்ட் கேட் ரோடு, திவான் அவினியு. அரை மணி நேரத்தில் சம்மனோடு வா.

அரைமணி நேரத்தில் ரமேஷ் சம்மனோடு ஹோட்டல் வசந்தத்திற்கு வந்தான். ராஜா அவனைப் பார்த்து, 'ரமேஷ்! அதோ ... அதோ வருகிறானே சுருட்டை முடி சிவப்பு நிறம் அவனோடு நான் பேசிக் கொண்டிருக்கும் போது சம்மனைக் கொண்டுவந்து கொடு'' என்று வேகமாக ராஜா சென்றான்.

''ஹலோ! நீங்கள் தானே ராமுவா?

"யெஸ்! பாரிஸ்டர் என்ன விஷயம்?

"ராமு! ஒன்றும் தெரியாதது போல நடிக்க வேண்டாம் நீங்கள் தான் இப்பொழுது எனக்கு போன் பண்ணியது என்றும் எனக்கு தெரியும்.

அதற்குள் ரமேஷ் அங்கு வந்தான். "ஹலோ! நீங்கள் தான் ராமுவா? நீங்கள் மதியம் இரண்டு மணிக்கு நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டும். இதோ சம்மன்.

"பாரிஸ்டர்! நான் கோர்ட்டில் ஆஜராவதால் எந்த வித நன்மையுமில்லை. ராமு தனது காரில் ஏறி சென்று விட்டான்.

"சரி ரமேஷ்! வேறு ஏதாவது விஷயமுண்டா?

"ராஜா! நீ அன்று கல்லறை மாளிகையில் கண்டெடுத்த சர்ச்சீப் கணபதி வரை வந்து விட்டது. அது பற்றி சர்ச்சையை கிளப்பி உனக்கு இடையூறு கொடுக்கக் காத்திருக்கிறார் கணபதி!

"வரட்டும்! நானும் அதைத்தான் எதிர்பார்த்திருக்கிறேன்.

## புதிர் உடைந்தது.

ராஜா நீதி மன்றத்தில் நுழையு முன் ஒரு மனிதன் ஐம்பது வயது மதிக்கக் தக்கவன் நல்ல டீஸன்ட்டாக டிரஸ் பண்ணியிருந்தவன், பாரிஸ்டர்! பிளீஸ்! என்னுடன் ஒரு நிமிடம் தனியாக வரமுடியுமா? என்றான். ராஜாவும் சம்மதித்து ஒரு ரூமுக்கு சென்றான்.

'பாரிஸ்டர்! என் பெயர் விநாயகம். மத்திய அரசாங்கம் சில மனிதர்களின் கள்ளக் கடத்தலைக் கண்டு பிடிக்க என் தலைமையில் ஒரு குழுவை அதாவது சி.ஐ.டிக்கள் பலபேரை நியமித்துள்ளது இதோ அதற்கான அத்தாட்சி முத்திரை பதித்த பத்திரம்' என்று ஒரு பத்திரத்தைக் காட்டினார். ராஜா, ம் ... மேலே சொல்லுங்கள்'' அந்தக் குழுவில் ஒருவன் தான் ராமு. அவனை இப்போது கோர்ட்டில் விசாரித்தால் அவன் யாரென்று தெரியப் படுத்த வேண்டும். அப்படி தெரியப் படுத்திவிடில் நாங்கள் கண்டுபிடிக்க

வேண்டிய ஆட்கள் சுதாரித்துக் கொள்வார்கள். பின் நாங்கள் எப்படி அவர்களைக் கண்டு பிடிக்கமுடியும். அதனால் அரசாங்கத்திற்கு பல இலட்சங்கள் நஷ்டம்.

''மிஸ்டர் விநாயகம்! அவன் சாட்சி கூறுவிட்டால் ஒரு உயிரல்லவா அநியாயமாக போகும். பல லட்சங்களை விட ஒரு உயிரின் மதிப்பு அதிகமல்லவா? ஆனால் ஒன்று . . . கடைசி வரை நான் ராமுவை விசாரிக்க மாட்டேன், என்னால்லதாவைக் காப்பாற்ற முடியாவிட்டால் கடைசியாக ராமுவை விசாரிக்கிறேன்''

''சரி! நான் வருகிறேன்'' விநாயக்ம் சென்று விட்டார்.

நீதிபதி வந்து தனது ஆசனத்தில் அமர்ந்தார். முதலில் கணபதி வெகு வேகமாக எழுந்தார்.

கொலை செய்வதை விட மிகப்பெரிய குற்றம் நடந்த கொலைக்கு ஆதாரமான சாட்சியங்களை மறைப்பது. அதை யார் செய்தாலும் குற்றம்தான் அவன் பாமரனானாலும் சரி . . . பாரிஸ்டரானாலும் சரி குற்றம் குற்றமே. கல்லறை மாளிகையிலிருந்து கொலைக்கு ஆதாரமான ஒரு சாட்சியத்தை ராஜா . . . பாரிஸ்டர் ராஜா மறைத்திருக்கிறார். அது ஒரு கைக்குடை இது பற்றி அவரது விளக்கத்தை எதிர்பார்க்கிறேன்'

யுவர் ஆனர்! இது பற்றி நான் இன்ஸ்பெக்டர் இளங்கோவை விசாரிக்க விரும்புகிறேன்

யெஸ் அனுமதிக்கிறேன்

இன்ஸ்பெக்டர் கொலை நடந்த இடத்திலுள்ள எல்லா பொருட்களையும் எடுத்து வந்து விட்டீர்களல்லவா?

ஆம்.

அடுப்பங்கரையிலிருந்து என்ன என்ன எடுத்து வந்தீர்கள்.

குறிப்பிட்டு சொல்ல முடியாது! நிறைய சாமான்கள் எடுத்து வந்துள்ளோம்.

நீதிபதி பிராஸிகியூடரைப் பார்த்தார். மிஸ்டர் கணபதி உங்கள் குற்றச்சாட்டு நிருபிக்கப்படவில்லை, வழக்கைத் தொடருவோம் விஜயா சிறிது நேரம் கூண்டுக்கு வந்து எனது கேள்விகள் சிலவற்றிற்கு பதில் தாருங்கள்.

விஜயா வந்து கூண்டில் ஏறினாள். சாண்டோ மல்லையாவும் நாகநாதனும் விசிட்டர் பகுதியிலிருந்து விஜயாவைக் கவனித்துக் கொண்டிருந்தார்கள்.

விஜயா ராஜா காட்டிய மேட்பை நீங்கள் அடையாளம் கண்டு கொண்டீர்களா?

ஆமாம் அது என் பைதான்.

ல்தாவை நீங்கள் எந்தப் பக்கம் திரும்பச் சொன்னீர்கள்
இடது புறம்தான்!
நீங்கள் கூறிய வழியை லதா குறித்துக் கொண்டாளே அதை கிழித்தது யாரென உங்களுக்குத் தெரியும்.
நான்தான் கிழித்தேன்.
ஏன்?
எனக்குத்தெரிந்த ஒரு வழி இரகசியமாக இருக்கட்டும் என்று தான். வேறு காரணமில்லை.
ராஜா எழுந்து வந்து விஜயாவை அணுகினன். மிஸ் விஜயா அதோ விசிட்டர் பகுதியில் அமர்ந்திருக்கும் சாண்டோ மல்லையாவை நீங்கள் உங்களது மெய்க்காப்பாளனுக நியமிக்கவில்லை. உங்களுக்கும் வெளி உலகத்துக்குமுள்ள தொடர்பை அத்து எறிய அதாவது நீங்கள் பிறருடன் தொடர்பு கொள்ளக் கூடாது என்பதற்காக ஒருவரால் நியமிக்கப்பட்டவன் தான் இந்த மல்லையா. இது என் கருத்து, உங்களின் பதில் என்ன?

விஜயா மௌனமாக நிற்பதைக் கண்ட நீதிபதி, "விஜயா உன்னை யாராவது பயமுறுத்திஞல் கோர்ட்டில் முறையிடலாம் உனக்குப் பாதுகாப்பளிக்கப்படும் என்ருர்

"ஆமாம் யுவர் ஆனர். அதோ உட்கார்ந்திருக்கும் மல்லையா. நாகநாதன் இருவரிடமிருந்தும் எனக்குப்பாதுகாப்பு வேண்டும் காரணம் என்ன?"

அதற்கு காரணம் நாகநாதன் தான் என்று ஒரு கடிதம் எழுதி ஒரு கவருக்குள் வைத்து சீலிட்டு லதாவிடம் கொடுத்து வைத்தேன். காட்டுப் பங்களாவிற்கு நான் போகாமல் லதாவை விஷயத்தைக் கூறாமல் ஆனல் எச்சரித்து அனுப்பி வைத்தேன். நான் எனது காரை எடுத்துக் கொண்டு சுந்தரத்தை மறுநாள் சந்திக்க வந்தேன். நான் சென்றவுடன் என்னைக் கொலை செய்ய நாகநாதன் மல்லையாவை காட்டுப் பங்களாவிற்குச் சென்று மறைந்திருக்க அனுப்பி விட்டான். எனது அறைக்குள் சென்று நான் எழுதி லதாவிடம் கொடுத்த கடிதத்தை தேடியிருக்கிருன். அதனுல்தான் சாமான்கள் தாறுமாருக சிதறிக் கிடந்தன. லதாவின் அறைக்குள் நுழைந்து எடுத்துச் சென்று விட்டான், ஆதலால் என்னை அவர்களிடமிருந்து காப்பாற்ற வேண்டியது கோர்ட்டார்தான்."

நீதிபதி அமைதியான குரலில் கேட்டார். "அப்படியானல் கொலையாளி யார்?"

ராஜா எழுந்து மேடையிடி என முழங்கினன்.

"விஜயா கல்லறை மாளிகையில் அன்று இரவு சுந்தரத்தை சந்தித்து விட்டு திரும்பியபின் தான் கொலையாளி வந்திருக்க வேண்டும். அல்லது கொலையாளி சுந்தரத்தின் கூடவே

மறைந்து வந்திருக்க வேண்டும். லதா அன்று தனக்கிருந்த
அசதியால் நிம்மதியாகத் தூங்கி விட்டாள். தூங்காமலிருந்தால்
இப்பொழுது கொலையாளி யார் என்ற பிரச்சினைக்கு இடமில்லை.
கொலையாளி சுந்தரத்தைக் கொன்று விட்டு நிதானமாக
பிளாஸ்க்கில் இருந்த காப்பியை ஊற்றி குடித்தான். கொலை
திட்டமிட்டு செய்யப்பட்டது. எல்லாவற்றிலும் எச்சரிக்கை
யோடு இருந்த கொலையாளி ஒன்றில் மட்டும் கோட்டை விட்டு
விட்டான். அதுதான் இப்பொழுது அகப்பட போவதற்கு
காரணம். கொலை செய்ய கட்டாரியை உபயோகிக்கும்போது
கைக்குட்டையை சுற்றிக் கொண்ட கொலையாளி ஒன்றில்
மட்டும் கோட்டை விட்டு விட்டான். அதுதான் இப்பொழுது
அகப்பட போவதற்கு காரணம். கொலை செய்ய கட்டாரியை
உபயோகிக்கும்போது கைக்குட்டையை சுற்றிக் கொண்ட
கொலையாளி பிளாஸ்க்கிலிருந்து காப்பி ஊற்றும் போது
வெறுங்கைகளாக்கி தனது ரேகையை பதித்து விட்டாள்.
அடுத்து பரிசீலித்தால் கொலையாளி யார் என்று தெரியும்.''

''அது யார் என்று உங்களுக்குத் தெரியாதா?

தெரியும் யுவர் ஆனர்! அந்த ரேகையும் சுந்தரத்தின்
மனைவி மஞ்சுளாவின் கைரேகையையும் ஒப்பிட்டு
பார்த்தால் ஒன்றாக இருக்கும். ஆதலால் மஞ்சுளாவின் கை
ரேகையையும் ஒப்பிட்டு பார்த்தால் ஒன்றாக இருக்கும். மாளிகை
யிலிருந்து எடுத்து வந்த பிளாஸ்க்கிலுள்ள கைரேகையும்
எடுக்க கோர்ட்டார் உத்தரவிட வேண்டுகிறேன்.

''இல்லை! இல்லவே இல்லை. நான் கல்லறை மாளிகைக்-
குச் சென்றதாக இருக்கட்டும். அது என்ன நிரூபித்து விடும்.
நான் ஏன் என் கணவரைக் கொல்ல வேண்டும்?''

''பொறாமை! பொறாமைதான் காரணம். விஜயாவின் மீது
பொறாமை! மஞ்சுளா, நீ கல்லறை மாளிகையா? அது எங்குள்
ளது என்று கேட்ட நேரத்திலிருந்தே உன்னை நான் சந்தேகப்
பட்டேன். அது நிரூபிக்கப்பட போகிறது.''

மஞ்சுளா எழுந்து வெளியே செல்ல முயன்றாள். அதற்குள்
இன்ஸ்பெக்டர் இளங்கோ ஓடிச் சென்று மஞ்சுளாவை தப்பிச்
செல்லாதவாறு தடுத்தார்.

நடந்தது இதுதான்

ராஜா தனது அலுவலக அறையில் அமர்ந்து கொண்டு
சிகரெட் புகைத்துக் கொண்டிருந்தான். வசந்தியும், ரமேசும்
அங்கு வந்தார்கள். வசந்தி ராஜாவை பார்த்து கேட்டாள்.

''அத்தான்! மஞ்சுளாவின் மீது எப்படி சந்தேகித்தீர்கள்.''

ராஜா தனது சோபாவில் நன்றாக சாய்ந்து உட்கார்ந்தான்

''வசந்தி! நாம் மஞ்சுளாவின் வீட்டிற்கு போயிருந்தபோது வீட்
டின் கதவருகில் நான் ஒன்றைக் குனிந்து எடுத்ததை யாரும்

கவனிக்கவில்லை! அது என்ன தெரியுமா? சுந்தரத்தைக் கொல்ல உபயோகப் படுத்திய கட்டாரியின் உறை. பொதுவாக எப்பொழுதும் தோல் உறையை விட்டு கத்தியை எடுக்க மாட்டார்கள். தனியாக உறை மட்டும் இருந்தது. முதலில் நான் அதை பெரிதாக நினைக்கவில்லை. கொலை செய்த மஞ்சுளா திரும்பி வரும் போது அந்த உறையை கையோடு கொண்டு வந்திருக்கிறாள். அதை நான் எடுத்து வந்து விட்டேன். சுந்தரம் விஜயாவைக் காதலிப்பது மஞ்சுளாவிற்கு தெரிந்தவுடன் அதை தடை செய்யப் பார்த்தாள். அது முடியாது என்றவுடன் தனக்கு உபயோகமில்லாத பொருள் இன்னொருத்திக்கு உபயோகப்படுவானேன். அது அழிந்து போகட்டும் என்ற முடிவுக்கு வந்தாள். ஒரு நாள் தன் கணவனுக்கு தெரியாமல் அவன் பின்னாலேயே அவன் விஜயாவை சந்திக்க கல்லறை மாளிகைக்கு வந்த பொழுது வந்து விட்டாள். விவரம் தெரிந்த பின் திட்டமிட்டாள் கொலை செய்ய! கொலை நடந்த அன்று விஜயா சுந்தரத்தைச் சந்தித்து விட்டு சென்ற பின் கட்டாரியால் சுந்தரத்தைக் குத்தி கொலை செய்து விட்டாள். நான் விஜயாவை சந்தேகிக்க மறுநாள் அவள் சுந்தரத்திற்கு விஜயா அன்பளிப்பாக கொடுத்த கைக்குட்டையை கொண்டு வந்து அடுப்பங்கரையில் போட்டாள். விஜயாவின் ரூமிலிருந்த மேப்பையும் மொட்டைக் கடிதத்தையும் சேர்த்து எனக்கு அனுப்பி வைத்தாள். நான் விஜயாவைச் சந்தேகிப்பேன் என்று. ஆனால் அந்தக் கடிதம் அவளுக்கே எமனாகி விட்டது. உறுதியாக ஒரு கொலையாளியைப் பற்றி கூறுபவர்கள் நேரில் வருவார்கள், மொட்டைக் கடிதம் போடுபவர்கள் தங்களுடைய தவறிலிருந்து தப்பித்து கொள்ள நினைப்பவர்கள். சரி வாருங்கள் மூவரும் கடற்கரைக்குப் போய் வருவோம்!"

பழங்காலத்து மர்மக் கதையான கல்யாணியின் கல்லறை மாளிகை மர்மம் புரிந்து விட்டதால், அனைவருக்கும் நிம்மதி தோன்றியிருந்தது.

முற்றும்

COMICSPDFTIMES
HSC

**மர்மப் பொன்னி**

# அடுத்த மாத இதழ்!

# நள்ளிரவு ரகசியம்

செழுங்கவிச்செம்மல்

வித்துவான் தி. சு. ஆறுமுகம்

(கவிஞர் சிவதாசன்)

பயங்கரமான [illegible] மெய் சிலிர்க்க வைக்கும்

திருநெல்வேலி

சாகசச் செயல்களும் நிறைந்த மர்ம நாவல் ரூ 1/-




செழுங்கவிச்செம்மல்
வித்துவான் தி. சு.
பகத் சிங் தெரு